

எல்லாரிட்டையும் வேகாது பாருங்கோ உங்கட கொடுமைகள்...


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28

சுடர் 31 | கதிர் 303 | வள்ளுவர் ஆண்டு 2047 | புரட்டாதி 08, சனிக்கிழமை 24.09.2016


## இன்று தவறினால் ஐந்தாவது வாரமே எள்ளெண்ணெய் எரிக்க முடியும்

யாழ்ப்பாணம், செப். 24

புரட்டாதிச் சனி விரத இண்டாம் நாளான இன்று சனீஸ்வரப் பெருமானுக்கு எள்ளெண்ணெய் எரித்து வழிபடத் தவறும் இந்துக்கள், மீண்டும் 5ஆவது புரட்டாதிச் சனிக்கிழமையான எதிர்வரும் 15ஆம் திகதியே அந்த வழிபாட்டைச் செய்ய முடியும் என்று இந்து குருமார்கள் தெரிவித்தனர்.

தங்களுடைய தோசங்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு இந்துக்களால் கடைப்பிடிக்கப்படும் புரட்டாதிச்சனிவிரதம் இந்தமுறை புரட்டாதி மாதத்தில் வரும் 5 சனிக்கிழமைகள் கடைப்பிடிக்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. அதனடிப்படையில் முதலாவது சனிக்கிழமையான கடந்த 17ஆம் திகதி

>> 23ஆம் பக்கம்

## போக்குவரத்துக்கு இன்று பாதிப்பில்லை

### வர்த்தக நிலையங்களை மூடுவதில் குழப்பநிலை நீடிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

வழமைபோன்று அரச மற்றும் தனியார் பேருந்துச் சேவைகள் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, வர்த்தக நிலையங்களை மூடுவது தொடர்பில் இன்றைய ஊர்வலத்தின் ஏற்பாட்டாளர்கள் விடுத்த மாறுபட்ட அறிவித்தல்களால் வர்த்தகர்களின் குழப்பம் நீடிக்கிறது.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள ஊர்வலத்தால் பேருந்துச்சேவைகள் இடம்பெறாது என்றும், மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்படும் என்றும் மக்களிடம் தவறான கருத்துக்கள் பரப்பப்பட்டிருந்தன.

இது தொடர்பில் இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமும், தனியார் பேருந்து உரிமையாளர் சங்கங்களிடமும் நேற்று வினவியபோது, போக்குவரத்துச் சேவைகள் வழமைபோன்று இடம்பெறும். அதில் எந்தவொரு மாற்றமும் இல்லை. மக்கள் குழப்பமடையத் தேவையில்லை என்று தெரிவித்தனர்.

இதேவேளை கிளிநொச்சி பொதுச் சந்தையை இன்று மூடுமாறு சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இருப்பினும் பிரதேச சபைச் செயலர் அதற்கு

>> 23ஆம் பக்கம்

## கிளிநொச்சிச் சந்தையை சீரமைக்க கொழும்பு ரூ.100 மில்லியன் நிதி

### தருவதாக வாக்குறுதி என்கிறார் இராஜாங்க அமைச்சர் விஜயகலா

யாழ்ப்பாணம், செப். 24

கிளிநொச்சி தீ விபத்தினால் அழிவடைந்த சந்தைக் கட்டடத்தை மீள நிர்மாணிப்பதற்கு 100 மில்லியன் ரூபா நிதி வழங்குவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் குறிப்பிட்டதாக, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்தார்.

அதேவேளை வடக்கு மாகாண முதலமைச்சரால் கிளிநொச்சி சந்தை சீரமைப்பு நடவடிக்கைக்காக 9 மில்லியன் ரூபா நிதி, கரைச்சிப் பிரதேச சபையிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டது.

கடந்த 16ஆம்

>> 23ஆம் பக்கம்

## 3ஆவது நாள் அரசியல் கைதிகளின் போராட்டம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், செப். 24

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் நேற்று மூன்றாவது

>> 23ஆம் பக்கம்

## லண்டன் வாசி மீது பொலிஸ் வன் கொடுமை

### மல்லாகம் நீதிமன்றில் நேற்று பகிரங்கக் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 24

நாட்டுக்கு விடுமுறையில் வந்திருந்த லண்டன் வாழ் உரும்பிராய் நபரை பொலிஸ் நிலையத்தில் வைத்து அடித்துச் சித்திரவதை செய்து கொடுமைப்படுத்தியதாக மல்லாகம் நீதிவான் மன்றில் பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இரவு முழுவதும் தண்ணீர்கூடத் தரவில்லை. சித்திரவதையால் காயமடைந்தபோதும் சிகிச்சை அளிக்க பொலிஸார் தடையாக இருந்தனர். நோயுள்ளதாகக் கூறியபோதும் மருந்து மாத்திரை தராது சித்திரவதை புரிந்தனர் என பாதிக்கப்பட்ட பிரிட்டன் வாசியினால் நீதிமன்றில் தெரிவிக்கப்பட்டது.

தாகத்தில் தவித்த அவர், திறந்த நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதும், நீதிவானிடம் தண்ணீர் கேட்டு சுமார் இரண்டரை லீற்றர் தண்ணீரை ஒரே நேரத்தில் குடித்துவிட்டே தனக்கு நடந்த சித்திரவதைகளை மன்றில் சுமார் 45 நிமிடங்களாக அவர் போட்டுடைத்தார். அந்தக் கொடுமைகள் புரிந்த தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிட்டது நீதிமன்று.

ஏற்கனவே சுன்னாகம் பொலிஸ் தடுப்பில் வைத்து சித்திரவதைக்குப் பின்னர் கொலை செய்ததான குற்றச்சாட்டு வழக்கு சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட 8 பொலிஸாருக்கு எதிராக சட்டமா அதிபரினால் வழக்குத் தொடுக்கப்பட்டு நீதிமன்ற விசாரணை ஆரம்பித்துள்ள நிலையில் அதே குற்றத்தைத் தெல்லிப்பழைப் பொலிஸாரும் புரிந்துள்ளனர்.

>> 23ஆம் பக்கம்

## பகிடிவதையால் கல்வியை இழந்த மாணவன் விடயத்தில் கரிசனை

### யாழ். பல்கலைக்கழகத்திடம் கோருகிறது வடக்கு மாகாண சபை

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த பகிடி வதை காரணமாகக் கல்வியை இழந்த மாணவன் மங்களதேவன் ஜெயக்குமார் தொடர்பில் பல்கலைக்கழக சமூகம் சிறப்புக் கவனம் செலுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண சபை கோரிக்கை விடுத்தது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

கிளிநொச்சி – திருநகர்ப் பகுதியைச் சேர்ந்த மேற்படி மாணவன் கல்வியை இழந்து நிற்பது தொடர்பிலேயே கரிசனை செலுத்துமாறு பொதுமக்கள் முறைப்பாட்டுக் குழுவின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக

>> 25ஆம் பக்கம்

## வலைப்பந்தாட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு தங்கம்

யாழ்ப்பாணம், செப். 24

இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட இளைஞர் கழகம் தங்கப் பதக்கத்தை தனதாக்கியது. பதுளை வின்சன் டயஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. யாழ். மாவட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து மொனராகலை மாவட்ட இளைஞர் கழக அணி மோதியது. இதில் யாழ். மாவட்ட இளைஞர் கழக அணி 45:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. (விரிவு: பக். 27)

## தேசியப் போட்டியில் வடக்கு மாகாணம் முதலாமிடம்

யாழ்ப்பாணம், செப். 24

தேசிய மட்ட கணித புதிர் போட்டியில் வடக்கு மாகாண

>> 25ஆம் பக்கம்

## ஐ.நா, அமெ. உறவுகளில் ஒருபோதும் மாற்றம் வராது

### நியூயோர்க்கில் தெரிவித்தார் மைத்திரி

நியூயோர்க், செப். 24

அமெரிக்க ஜனாதிபதி மற்றும் ஐ.நா. செயலர் பதவிகளில் மாற்றம் ஏற்பட்டாலும், இலங்கையுடனான உறவில் எந்த மாற்றமும் ஏற்படாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நம்பிக்கை வெளியிட்டார்.

"இந்த எல்லா உறவுகளும் தனிப்பட்ட வகையில் அன்றி, கொள்கை அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக" ஜனாதிபதி குறிப்பிட்டார்.

ஐ.நா. பொதுச்சபையின் 71ஆவது கூட்டத் தொடரில் பங்கேற்ற ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பத்திரிகையாளர் சந்திப்பில் நேற்றுக் கலந்துகொண்டார். இதன் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்ததாவது:

கூட்டத் தொடரில் கலந்து கொண்ட சகல அரச தலைவர்களும் இலங்கையின் தற்போதைய நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து தங்களது திருப்தியை வெளியிட்டனர். அந்த நல்லாசிகளுடன் இலங்கை நாட்டை உலகில் உண்மையான வெற்றியை நோக்கி முன்னெடுத்துச் செல்வோம்.

சுதந்திரம், ஜனநாயகம், மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், நீதி

>> 23ஆம் பக்கம்

## தவறாகப் படிவம் நிரப்பியதால் மருத்துவக் கல்வியை இழந்த மாணவி

### எந்திரியாகும் வாய்ப்பை மற்றொருவரும் இழந்தார்

முல்லைத்தீவு, செப். 24

பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பத்தில் ஏற்பட்ட மாற்றத்தால், ஜீ.சீ.ஈ உயர்தரப்பரீட்சைப் பெறுபேற்றில் மாவட்டத்தில் நான்காவது நிலை பெற்ற மாணவி மருத்துவப்பிரிவு அனுமதியைப் பெறத் தவறினார். முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரியில் கணிதப் பிரிவில் சித்தியடைந்து மாவட்டத்தில் மூன்றாவது நிலை பெற்ற மாணவன் எந்திரியாகும் வாய்ப்பைத் தவறவிட்டார்.

பல்கலைக்கழக அனுமதியில் இந்தமுறை அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறையால், ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்றிருந்த மாணவர்களும் பல்கலைக்கழக அனுமதியைப் பெறத்தவறியுள்ளதோடு,

>> 23ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சல் கண்காட்சி இன்றும் தொடரும்

சாவகச்சேரி, செப்.24

உலக அஞ்சல் வாரத்தையொட்டி சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தினால் நேற்று நடத்தப்பட்ட அஞ்சல் தலைகளின் கண்காட்சி இன்று மாலை வரை நீடிக்கப்பட்டுள்ளதென அஞ்சல் அதிபர் அ.இன்பராஜ் லம்பேர்ட் அறிவித்தார்.

நேற்று அஞ்சலக வளாகத்தில் அமைக்கப்பட்ட சிறப்புப் பந்தலில் ஆரம்பிக்கப்பட்ட அஞ்சல் தலைகளின் கண்காட்சியை பெருமளவு மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்கள் விடுத்த வேண்டுகோளையடுத்து இன்று மாலை வரை கண்காட்சி நீடிக்கப்பட்டுள்ளதென அஞ்சல் அதிபர் தெரிவித்தார். (வ -9)

## எல்லை நிர்ணயம் தொடர்பான இறுதிக் கலந்துரையாடல் இன்று

### யாழ்.மாவட்டச் செயலாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப் .24

உள்ளூராட்சி மன்றங்களின் வட்டார எல்லைநிர்ணயம் தொடர்பான முக்கியமான இறுதிக் கலந்துரையாடல் இன்று காலை 9 மணிக்கு, கொழும்பு அரசின் உள்ளூராட்சி அமைச்சின் உயர் அதிகாரிகள் தலைமையில் யாழ். மாவட்டச் செயலகத்தில் இடம்பெறவுள்ளதாக மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அறிவித்தார்.

உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல் முறையானது வட்டாரமாக மாற்றப்படவுள்ளது. அதற்காக வட்டார நிர்ணயம் இடம்பெறுகின்றது. இவ்வாறு இடம்பெற்ற நிர்ணயங்களில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் பலர் உள்ளூராட்சி அமைச்சுக்கும் வட்டார எல்லை நிர்ணயக் குழுவுக்கும் சுட்டிக் காட்டியிருந்தனர். அதன் பிரகாரம் அந்தக் குழுவின் தலைவர் உள்ளிட்ட 18 உறுப்பினர்களும் அமைச்சின் உயர் அதிகாரிகளும் இன்றைய தினம் காலை 9 மணிக்கு மாவட்டச் செயலகத்துக்கு வருகை தருகின்றனர்.

மீண்டும் ஒரு முறை இவற்றை மீளாய்வு செய்யும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இன்றைய இறுதி ஆய்வின் பிரகாரம் வட்டார எல்லை மீள் நிர்ணயம் இடம்பெறும் என்று தெரிவித்தார் யாழ்.மாவட்டச் செயலாளர்.

இறுதிக் கலந்துரையாடலில் கட்சிச் செயலர்கள் பங்குபற்ற முடியும். அத்துடன், வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பில் முறைப்பாடு செய்தவர்கள் கலந்துகொள்ள முடியும். இன்றைய தினமே, வட்டாரம் தொடர்பில் இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்தின் வட்டார நிர்ணயத்தின் போது அரசியல் தலைவர்கள் பங்கெடுக்காமையினால் அங்கு சர்ச்சை ஏற்பட்டிருந்தது. (வ-5-101)

## சிறுமியைத் துன்புறுத்திய பெண் விளக்கமறியலில்

சமூக வலைத்தளங்களில் பரவி பெரும் பரபரப்பை ஏற்படுத்திய - பெண்ணொருவரால் சிறுமியொருவர் கொடூரமாக தாக்கப்படும் காணொலியுடன் தொடர்புடைய பெண்ணை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி வரையும் விளக்க மறியலில் வைக்குமாறு யாழ் நீதிவான் மன்று நேற்று உத்தரவிட்டது.

நீர்வேலி தெற்கு, நீர்வேலியைச் சேர்ந்த குறித்த பெண்ணை கோப்பாய் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்து நேற்று யாழ். நீதிவான் மன்றில் முற்படுத்தினர். அந்தச் சிறுமி தனது சொந்த மகள் எனவும் பாடசாலைக்குச் செல்ல மறுத்ததால் தான் அவரை தாக்கியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்ட பெண் நீதிமன்றில் தெரிவித்தார். அதனையடுத்து அவரை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி வரையும் விளக்கமறியலில் வைக்குமாறு பாதிக்கப்பட்ட சிறுமியையும் அவருடைய சகோதரிகள் இருவரையும் சிறுவர் இல்லத்தில் சேர்க்குமாறும் பதில் நீதிவான் க. அரியநாயகம் உத்தரவிட்டார்.

காணொலியில், குறித்த தாய் சிறுமி ஒருவரை மோசமாகத் தாக்குவதும், தடியாலும் கத்தியாலும் அடிப்பதும், சிறுமியின் தலைமயிரைப் பிடித்து இழுத்தும் நிலத்தில் வீழ்த்தியும் சித்திரவதை செய்வதும் காணப்படுகிறது.

பாதிக்கப்பட்ட சிறுமியின் நலன் சார்ந்து 3 பெண் சட்டத்தரணிகள் உள்ளிட்ட 5 சட்டத்தரணிகள் மன்றில் முன்னிலையாகினர். அவர்கள் இந்தத் தாக்குதல் தொடர்பில் விரிவான விசாரணை வேண்டும் என்றும் சிறுமியின் பாதுகாப்பையும் நீதிமன்று உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரினர்.

சிறுமி மீதான தாக்குதல் தொடர்பில் சமூக வலைத்தளங்களில் வெளியான காணொலியை மொறட்டுவப் பல்கலைக்கழகத்துக்கு அனுப்பி, அதன் உண்மைத் தன்மையை உறுதிப்படுத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். அத்துடன், சிறுமி தாக்கப்படும் போது, அவளது தந்தை அருகில் இருந்து தடுக்காமல் விட்டாரா என்றும் தந்தையார் குறித்த தகவல்களைப் பெற்று மன்றில் முன்வைக்குமாறும் கோப்பாய் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார் என்று சிறுமியின் நலன்சார்ந்து முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்தார். (வ-4,37,103)

## வயோதிபத் தம்பதியினரிடம் கொள்ளை
## பொலிஸாரால் தேடப்பட்டவர் நேற்று நீதிவான் மன்றில் சரண்

தென்மராட்சி, செப். 24

வரணி - இயற்றாலைப் பகுதியில் வயோதிபத் தம்பதியைத் தாக்கிக் கட்டி வைத்துவிட்டு, அவர்களது வீட்டில் பணம் மற்றும் தங்க நகைகளைக் கொள்ளையடித்த சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த நபர் நேற்றுச் சட்டத்தரணி ஊடாக சாவகச்சேரி நீதிமன்றில் சரணடைந்தார். அவரை எதிர் வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதிவான் அன்றைய தினம் அடையாள அணிவகுப்பு நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த மாதம் 23ஆம் திகதி வரணி இயற்றாலைப் பகுதியில் காரில் வந்த நால்வர் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்புவதற்கு ஆள்கள் உள்ளனரா என விசாரித்து வயோதிபத் தம்பதியிடம் விசாரித்துள்ளனர். அவர்கள் இல்லையெனக் கூறவே, அந்தப் பகுதியில் உள்ள கடைக்கு முன்பாக காரை நிறுத்திவிட்டு அயலில் விசாரிப்பது போல பாசாங்கு செய்து இரண்டாம் தடவை வயோதிபத் தம்பதியின் வீட்டுக்கு வந்து தண்ணீர் வாங்கி அருந்தி விட்டுச் சென்றுள்ளனர். அவர்கள் சென்ற பின்னர் வீட்டின் முன் கதவைப் பூட்டிவிட்டு சமையலறைக்குள் சமையல் வேலை செய்து கொண்டிருந்த வேளையில், பின்கதவு ஊடாக உள்நுழைந்த இவர்கள் தம்பதியின் வாயையும் கைகளையும் கட்டி வைத்து பணம் மற்றும் நகைகள் எங்குள்ளன என விசாரித்து தாக்கியுள்ளனர்.

பின்னர் வீட்டின் சுவாமி அறைக்குள் சென்று ஆலயத்திற்கென ஒருவரால் வழங்கப்பட்டிருந்த 10 ஆயிரத்து 200 ரூபா பணத்தையும் அங்கு காணப்பட்ட காப்பு மற்றும் சங்கிலி போன்றவற்றை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த தம்பதியினர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுச் சிகிச்சை பெற்றனர்.

கொடிகாமம் பொலிஸார் மேற்கொண்ட துரித நடவடிக்கையின் பயனாக யாழ்ப்பாணத்தில் உள்ள நகை விற்பனை நிலையத்தில் நகைகளை விற்க முற்பட்ட வேளையில் காரின் சாரதி திருட்டுடன் தொடர்புடைய நபர் மற்றும் நகைக் கடை உரிமையாளர் ஆகியோரைக் கைது செய்து கடந்த மாதம் 27ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த நீதிவான் இந்த மூவரையும் செப்ரம்பர் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டதுடன், அன்றைய தினம் அடையாள அணிவகுப்பை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளுமாறும் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். திருட்டுடன் தொடர்புடைய மேலும் ஒருவரைக் கைது செய்த கொடிகாமம் பொலிஸார் கடந்த 30ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்தினர். இவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் அன்றைய தினம் ஏற்பாடு செய்யவுள்ள அடையாள அணிவகுப்பில் இந்த நபரையும் இணைக்குமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

கடந்த 7ஆம் திகதி நீதிமன்றக் கட்டடத்தில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் நகைக் கடை உரிமையாளர் தவிர்ந்த மூவரும் பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பில் நிறுத்தப்பட்டனர். பணம் மற்றும் தங்க நகைகளைப் பறிகொடுத்த வயோதிபத் தம்பதியும் மற்றும் கார் நிறுத்தப்பட்டிருந்த வர்த்தக நிலைய உரிமையாளரும் சாட்சிகளாக கலந்து கொண்டனர். இவர்கள் மூவரும் சந்தேக நபர்கள் மூவரையும் அடையாளம் காட்டினர். வழக்கை விசாரித்த நீதிவான் வர்த்தகர் மற்றும் சந்தேக நபர்கள் ஆகியோரை நேற்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, பொலிஸாரால் தேடப்பட்டு வந்த மற்றொரு நபர் சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் சரணடைந்தார். வழக்கை விசாரித்த நீதிவான் இந்த நால்வரையும் ஒக்டோபர் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டு நேற்று சரணடைந்த நபரை அன்றைய தினம் அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை நகைகளைக் கொள்வனவு செய்த வர்த்தகர் திருமண நிகழ்வை முன்னிட்டு சட்டத்தரணி ஊடாக முன்வைத்த பிணை மனுவை விசாரித்த நீதிவான் அவரை பிணையில் செல்ல அனுமதித்தார்

இந்த தம்பதியின் மகன் ஒரு மாதத்துக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வந்து நிகழ்வொன்றை நடத்திவிட்டு திரும்பிச் சென்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ- 9)

## கண்டாவளைக் காட்டில் வெடிபொருள்கள் மீட்பு

### சந்தேகத்தில் இருவர் கைது

கிளிநொச்சி, செப்.24

கிளிநொச்சி கண்டாவளைக் காட்டுப் பகுதியில் கிளிநொச்சிப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது சட்ட விரோத துப்பாக்கிகள் மற்றும் ரவைகள் என்பன மீட்கப்பட்ட தாகத் தெரிவிக்கப்பட்டது. அவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு பேரைக் கைது செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிளிநொச்சி, தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் உள்ள கண்டாவளை மற்றும் புளியம்பொக்கணை ஆகிய கிராமங்களுக்கு இடைப்பட்ட காட்டுப் பகுதியிலேயே நேற்று அவை மீட்கப்பட்டன என்று பொலிஸார் கூறினர்.

கிளிநொச்சி - முல்லைத்தீவு பிரதி பொலிஸ்மா அதிபர் வெலிக்கன்னவின் கட்டளைக்கமைய, கிளிநொச்சி மாவட்ட மது ஒழிப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஜயவர்த்தன தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது, குறித்த காட்டுப் பகுதியிலிருந்து சட்டவிரோத ஆயுதங்கள் மீட்கப்பட்டதுடன், சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் 2 சந்தேக நபர்களையும் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது குறித்த சந்தேக நபர்களிடமிருந்து 10 உள்ளூர் துவக்குகள் (கட்டுத்துவக்குகள்) மற்றும் ரி 56 ரக துப்பாக்கி ரவைகள் 68, ஈய துகள்கள் 60 என்பனவும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகள் நிறைவுற்றதும், சந்தேகநபர்களை கிளிநொச்சி நீதிவான் மன்றில் முற்படுத்துவதுடன் மீட்கப்பட்ட பொருள்களும் பாரப்படுத்தப்படும் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (வ-ரி3 34)

## வடக்கில் 7 அதிகாரிகளுக்கு ஜனவரி முதல் இடமாற்றம்

வடக்கு மாகாணத்தில் இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் 7 பேருக்கு அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் ப.செந்தில் நந்தனன் கொழும்பு அரசின் நிதி அமைச்சுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்ராஸ் வடக்கு மாகாண சபைக்கும், வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

உடுவில் பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் வடக்கு மாகாண சபைக்கும், வடக்கு மாகாண சபையைச் சேர்ந்த திருமதி எஸ்.உசா உடுவில் பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் வடக்கு மாகாண சபைக்கும், வடக்கு மாகாணகூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், சாவகச்சேரி பிரதேச செயலகத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளி நீதிபதிகளின் பங்களிப்புக்கு எந்தவொரு அழுத்தமும் இல்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



நியூயோர்க், செப்.24
ஜெனிவாத் தீர்மானத்துக்கு அமைய போர்க் குற்ற விசாரணைகளை மேற்கொள்வதற்காக அமைக்கப்படவுள்ள உள்ளக நீதிமன்ற விசாரணைக் கட்டமைப்புக்கு வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்க வேண்டும் என்று எந்தவொரு அழுத்தமும் விடுக்கப்படவில்லை.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஐ.நாவின் 71ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்துகொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இந்தத் தகவலைத் தெரிவித்தார். பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்துவதற்காக அமைக்கப்படவுள்ள உள்ளக நீதிமன்ற விசாரணைப் பொறிமுறைக்கு வெளிநாட்டு நீதிபதிகளை உள்வாங்குவது குறித்து பான்கீமூன் மற்றும் சையிட் அல் ஹூசேன் ஆகியோருடனான சந்திப்புகளின்போது கவனம் செலுத்தப்பட்டதா என்ற கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி,

அவ்வாறான எந்தவொரு அழுத்தமும் எனக்குப் பிரயோகிக்கப்படவில்லை.

அரசு மேற்கொள்ளும் நல்லிணக்க மற்றும் பொறுப்புக் கூறல் நடவடிக்கைகளை இருவரும் பாராட்டியதுடன், அவற்றுக்குத் தேவையான முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதாகவும் உறுதியளித்தனர்- என்றார். (வ-5)

# புற்றுநோய் சிகிச்சைப் பிரிவுக்கு நிதி சேகரிக்கும் நடைப் பயணம்

## ஒக்டோபர் 6 இல் பருத்தித்துறையில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 24
கராப்பிட்டி போதனா வைத்தியசாலையின் புற்றுநோய்ச் சிகிச்சைப் பிரிவை விரிவுபடுத்துவதற்க்க 5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியைச் சேகரிக்கும் நோக்குடன், பருத்தித்துறை முதல் தெய்வேந்திரமுனை வரையான நடைப்பயணம் ஒக்டோபர் 6 ஆம் திகதி பருத்தித்துறை சென்சேவியர் விளையாட்டு மைதானத்திலிருந்து ஆரம்பமாகும் என்று கலேர்ஸ் ஒப் கரேஜ் நிதியம் அறி வித்தது.

தெல்லிப்பழை புற்று நோய் வைத்தியசாலையை நிறுவுவதற்காக 2.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை சேகரிப்பதற்கு 2011ஆம் ஆண்டும் நடைப்பயணம் முன்னெடுக்கப்பட்டது. மாத்தறையிலிருந்து பருத்தித்துறை நோக்கியதாக அந்தப் பயணம் அமைந்திருந்தது.

தற்போது பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரமுனை நோக்கி 670 கிலோ மீற்றர் தூரத்தை 28 நாள்களில் கடந்து முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்த நடைப் பயணத்தில் இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர்களான குமார் சங்கக்கார, மகேல ஜெயவர்த்தன ஆகியோர் கலந்து கொள்ளவர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## தனியார் வைத்தியசாலையில் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக சுகாதார மருத்துவ அதிகாரி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 24
தனது கடமைக்கு இடையூறு விளைவித்ததாகத் தெரிவித்து சுகாதார மருத்துவ அதிகாரி, யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட விவகாரம் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

திருநெல்வேலியில் இயங்கும் தனியார் வைத்தியசாலையில் இருந்த தொற்று நோயாளி ஒருவர் தொடர்பான தரவைப் பார்வையிட சுகாதார மருத்துவ அதிகாரி சென்றுள்ளார். அந்த நோயாளியைப் பார்வையிட்ட பின்னர், அவரது நோய்நிலை பற்றிய விவரங்களை சுகாதார மருத்துவ அதிகாரி கேட்டபோதே, அதற்கு அனுமதிக்கவில்லை என்று குற்றஞ்சாட்டப்பட்டது. அதனால் தனது கடமைக்கு இடையூறு விளைவித்தாக பொலிஸில் முறையிடப்பட்டது.

யாழ்.நீதிவான் மன்றில் இந்த வழக்கு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டபோது, வைத்தியசாலை சார்பில் ஒருவர் நேற்று முன்னிலையானார். விசாரணைகளின் பின்னர் அவரை 50 ஆயிரம் ரூபா பிணையில் விடுவிக்கப்பட்டார். வழக்கு நவம்பர் மாதத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது. (வ-4,105)

# சிற்றம்பலத்துக்கு தமிழரசுக்கட்சி எச்சரிக்கை

யாழ்ப்பாணம், செப் .24
இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியில் அங்கத்துவத்தை வைத்துக் கொண்டு வேறு கட்சிக்கு ஆதரவாக ஓய்வுநிலைப் பேராசிரியர் சிற்றம் பலம் செயற்பட முடியாது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் செயலாளர் துரைராஜசிங்கம் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியிலிருந்து ஓய்வுநிலைப் பேராசிரியர் சிற்றம்பலத்தை விலகுமாறு, கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் தெரிவித்ததாக இணையத் தளத்தில் செய்தி வெளியாகியது. அந்தச் செய்தி தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் என்று சொல்லிக் கொண்டு, கட்சியின் அனுமதியின்றி வேறு கட்சிக்கு ஆதரவாகச் செயற்பட முடியாது. கட்சித் தலைமையின் அனுமதியோ அல்லது கட்சியின் தீர்மானமோ இல்லாமல், எமது கட்சியின் சார்பில் பிரதிநிதித்துவம் செய்வதாக இன்னொரு இடத்தில் சொல்ல முடியாது. அவ்வாறு சொல்வதற்கு எவருக்கும் இடமளிக்க முடியாது.

ஓய்வுநிலைப் பேராசிரியர் சிற்றம்பலம் வேறு இடத்தில் சென்று செயற்பட விரும்பினால், அங்கு சென்று செயற்படுவது அவரின் விருப்பம். அப்படியானால் கட்சியில் இங்கு இருக்கும் பொறுப்பை விட்டுச் சென்று பணியாற்றலாம். வேறு கட்சிக்குச் செல்வதை விடுத்து கட்சியில் இருக்கும் பணியைத் தொடருமாறு அவரிடம் வாய்மூலம் கேட்கப்பட்டுள்ளது என்றார். (வ-5-101)

VACANCY




Discover your best potential with one of the leading UK based web media company. Excellent opportunity to grab the Heartbeat of world Tamils. One solution for all search.
Applications are invited for the following position. A lump sum attractive compensation package commensurate with qualification and experience will be offered.

DUTY MANAGER

Candidate must have Good communication and Leadership Skills with experience of 5-10 years in the similar role and exposure to the operation of the entire department functions
★ Helping to implement company policies
★ Motivating employees
★ Managing Cleanliness and organization
★ Continually improve efficiencies and identify improvements in the daily activities plan.
★ Manage team, including performance and standards
★ Continually review the operational arrangements and controls to maximize the efficiency level and targets.

NEWS COORDINATOR

Editorial coordinators manage multiple documents to ensure they are relevant. Informative and grammatically correct. It is essential to maintain a production calendar. Coordinators work with main editors to research, develop and implement new projects.
★ Keep watch the other Medias and Social media for the content.
★ Media Coordinators contact print, radio, television, and online media sources
★ to submit the content for updation.
★ Draft and edit the content to send the Editorial team.
★ Continuous inflow up – to - the minutes news.
★ Address the content and help to smooth functioning of the web page.

CUSTOMER CARE ASSOCIATE

Candidate must have good communication and problem solving skills. Willingness to answer calls professionally to provide information about products and services, or obtain details.
★ Respond promptly to customer inquiries.
★ Handle and resolve customer complaints.
★ Obtain and evaluate all relevant information to handle product and service inquiries.
★ Provide pricing and delivery information
★ Perform customer verifications.

CUSTOMER CARE EXECUTIVE

Candidate must have good communication and problem solving skills. Communicate clearly and effectively with the customers on Sales conversion, payment follow up, Payment confirmation.
★ Make sure all the clients should treat in a top level so the team leader should keep the records that the clients fully satisfied.
★ Increase the sales via providing perfect service.
★ Increase the number of clients via offering good customer Service.

VIDEO GRAPHER (NEWS VIDEO COVERAGE)

A good sense of visual composition, perspective and movement, combining creativity with technical skills. Assembling, preparing and setting up equipment prior to filming, which may include tripods, monitors, lighting, cables and leads and headphones.

GRAPHIC DESIGNER

Candidate well versed in Graphic Design Skills, Layout Skills, Creativity, Flexibility, Attention to Detail, Deadline – Oriented. Illustrates concept by designing rough layout of art and copy regarding arrangement, Size, Type size and style, and related aesthetic concepts.

NEWS SUB - EDITORS

Journalist with interest and experience to sub editing, you must be an all -rounder: you need to know media law, have a keen eye for detail and be able to put a news together with speed and style.
★ Plan the contents of publications according to the publication's style, editorial policy, and publishing requirements of the site.
★ Verify facts, dates and statistics, using standard reference sources.
★ Past & current updates with the Sri Lankan political
★ Proven Track records of Politicians interviews
★ Develop story or content ideas, considering reader or audience appeal.
★ Assign topics, events and stories to individual writers or reporters for coverage.
★ Monitor news-gathering operations to ensure utilization of all news sources, such as press releases, telephone contacts, radio, television, wire services, and other reporters.

NEWS REPORTER

Journalist with interest, collects and analyzes information about newsworthy events to write news stories for publication or broadcast: Receives assignment or evaluates news leads and news tips to develop story idea.
★ Send the information through observation, research, interviews and issued statements
★ Quickly to Send the Accruable Content with Source
★ Immediately Send the Audio, Video or Image footage for investigate areas.

★ Salary and other benefits negotiable

Interested candidates may drop the complete CV at
ttnnews@outlook.com
138C, Sri Gnanendra Mawatha, Nawala.
or
65/106, Crow Island, Colombo-15.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆறு மீனவர்களுக்கு தலா 25,000 அபராதம்

## தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி மீன்பிடித்தமைக்காக

வலி. தென்மேற்கு, செப்.24
நாயாறுக் கடற்பரப்பில் தடை செய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்த ஆறு மீனவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டதைத் தொடர்ந்து நீதிவான் இவர்களுக்கு தலா 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளார் .
முல்லை மாவட்டம் நாயாறு கடற்பரப்பில் கடந்த 21ஆம் திகதி இரவு சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட சுருக்கு வலைகளைப் பயன்படுத்தி மீன்பிடித்து கொண்டிருந்த ஆறு மீனவர்கள் ரோந்து சென்ற கடற்படையினரிடம் வகையாக அகப்பட்டுக் கொண்டனர்.
மீன்பிடித் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்ட வள்ளம், இயந்திரம், வலைகள் ஆகியவற்றைக் கைப்பற்றிய கடற்படையினர் மீனவர்களையும் கைது செய்து முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.
மீன்பிடி உபகரணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைத்த திணைக்கள அதிகாரிகள், நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஆறு மீனவர்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். மீனவர்கள் குற்றத்தை ஏற்றுக் கொண்டமையைத் தொடர்ந்து நீதிவான் இவர்களுக்குத் தலா 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார்.
நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் சம்பந்தமான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (த-115)

## பலகாடு கிராமத்தில் மக்கள் மீள்குடியமர்வு

காரைநகர் பலகாடு கிராமத்தைத் துப்பு ரவு செய்து அங்கு மக்களை மீளக்குடியமர்த்தும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்தக் கிராமம் மக்களின் மீள் குடியேற்றத்துக்காக அண்மை யில் விடுவிக்கப்பட்டது. மீள்குடியேற்ற அமைச்சின் நிதி உதவியுடன் இந்தக் கிராமத்தை துப்புரவாக்கும் பணிகளைக் காரைநகர் பிரதேச செயலகம் முன்னெடுத்துள்ளது.
இந்தப் பிரதேசத்தில் அடர்ந்து வளர்ந்துள்ள பற்றைகள், மரங் கள் என்பன வெட்டித் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பகுதியில் துரித மீள்குடியேற்றத்தை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளைக் காரைநகர் பிரதேச செயலகம் மேற் கொண்டுள்ளது. துப்புரவாக்கப்பட்ட பிரதேசத்தில் வீட்டுத்திட்டத்தின் கீழ் 4 பயனாளிகள் வீடுகளை அமைத்து வருகின்றனர். இதனைவிட, இந்தப் பகுதியில் மீளக்குடியமரவுள்ள மேலும் பல குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கும் மீள்குடியேற்ற அமைச்சு நடவடிக்கைகளை மேற் கொண்டுள் ளது. (த-17)

## முதியோர் சங்க ஆண்டுவிழா நடைபெறாது

யாழ்ப்பாணம், செப். 24
கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறாது என அறிவிக்கப்பட்டுள்ளது.
நாளை நடைபெறவிருந்த இந்த விழா தவிர்க்கமுடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளதாகவும், நடைபெறும் திகதிபின்னர் அறிவிக்கப்படும் எனவும் கோப்பாய் வடக்கு முதியோர் சங்கத்தின் செயலாளர். ந. கனகலிங்கம் தெரிவித்தார். (த-ரி7)

## அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவருக்கு ரூ. 270,000 தண்டம்

### ஒரு மாதச் சிறையும் வழங்கித் தீர்ப்பு

கிளிநொச்சி, செப் 24
அனுமதிப்பத்திரம் இன்றி அரச காணியில் மணல் ஏற்றிய நபருக்கு 2 லட்சத்து 70 ஆயிரம் ரூபா தண்டம் விதித்ததுடன் ஒருமாத சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம்.
கிளிநொச்சி தட்டுவன்கொட்டிப் பகுதியில் அனுமதிப்பத்திரம் இன்றி அரச காணியில் மணல் ஏற்றியதாகக் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சி நீதிமன்றில் கடந்த புதன்கிழமை முன்னிலைப்படுத்தப்பட்டார்.
இதன்போது சந்தேக நபர் ஏற்கனவே இவ்வாறான குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுத் தண்டிக்கப்பட்டவர் என்பதைப் பொலிஸார் நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.
வழக்கை விசாரித்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா , அனுமதிப்பத்திரம் இன்றி மணல் ஏற்றியமைக்காக 2 லட்சத்து50ஆயிரம்ரூபாதண்டமும் இலக்கத்தகடற்ற வாகனம் பயன்படுத்தியமைக்கு 20 ஆயிரம் ரூபா தண் டமும் விதித்ததுடன் ஒரு மாத காலச் சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (த-ரி3)

## பம்பலப்பிட்டியில் இன்று நூல் வெளியீடு

கொழும்பு, செப். 24
வை.சோமசேகரன் தொகுத்து வழங்கிய ஈழத்து ஆலயங்கள் பாகம்-1 நூல் வெளியீடு அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் இன்று மாலை 4.30 மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது..
அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் கந்தையா நீலகண்டன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை புனர்நிர்மாண, மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சின் செயலாளர் திருமதி சாந்தி நாவுக்கரசன் ஆற்றுவார். நூல் ஆய்வுரையை இந்து மாமன்ற உபதலைவரும், இந்து ஆராய்ச்சி நிலைய இயக்குநருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார்.
ஈழத்து ஆலயங்கள் பாகம் - 1 முதற்பிரதியைத் தொகுப்பாசிரியரிடம் இருந்து கு. கங்கை வேணியன் பெற்றுக் கொள்வார். (த-ரி7)

## அடையாளம் காணப்படாத சடலம்

கிளிநொச்சி, செப் .24
கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் ஒன்று காணப்படுவதாகத் தெரிவிக் கப்பட்டது.
கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் உமையாள்புரம் பகுதியில் இருந்து மீட்கப்பட்டசடலம்வைத்தியசாலைக்கு எடுத்துவரப் பட்டதாகவும், குறித்த சடலம் இதுவரை அடையாளம் காணப்படாதுள்ளதாகவும் கூறப்பட்டது. (த-ரி3)


**வைத்தீஸ்வராக் கல்லூரி**
2016.09.25 ஞாயிறு நடைபெறவிருந்த வருடாந்த ஒன்று கூடலும் பொதுக் கூட்டமும் தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று நடைபெறாதென்பதை அங்கத்தவர்களுக்கு அறியத்தருகின்றேன்.
செ. சுப்பிரமணியம்
மன்ற செயலாளர்.

**வீடுகாணி விற்பனைக்கு**
தெல்லிப்பழை கொல்லங்கலட்டியில் 6 ½ பரப்புக் காணியில் அமைந்துள்ள 6 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு. (ஞாயிறு மற்றும் திங்கள் தினங்களில் பார்வையிடலாம்)
077 100 1390

**காணி விற்பனைக்கு**
பருத்தித்துறை. கொடிகாமம் வீதியில் 'எருவன்' என்ற இடத்தில் (கொடிகாமத்தில் இருந்து ஒரு கிலோமீற்றர் தூரத்தில்) 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பயன்தரு மரங்கள் மற்றும் வீடும் மின்சார வசதிகளுடன் உண்டு.
077 204 5270

**அறைகள் வாடகைக்குண்டு**
திருநெல்வேலியில் அறைகள் வாடகைக்குண்டு.
077 609 0837

**உடன் தேவை**
பொருள்கள் ஏற்றி இறக்குபவர்கள் தேவை.
Coca-Cola Distributors
Siva Brothers
No.15, Brown Road, Jaffna.
077 7722215

**முகாமையாளர் தேவை**
கிளிநொச்சியில் இயங்கும் அரிசி ஆலைக்கு முகாமையாளர் தேவை. வயது எல்லை 30-60 மட்டும். தங்குமிட வசதி உண்டு.
(K/167) (12.17.19)
077 635 7024

**மணமக்கள் தேவை**
★ 84 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய கட்டாரில் சேவையராகப் பணிபுரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
★ 85 இல் பிறந்த 8 இல் சூரியனும் செவ்வாயும் 45 ½ பாவமுடைய MSc இஞ்சினியர் மணமகனுக்கு பட்டதாரி மணமகள் தேவை.
★ 79 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 51 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற விவகாரத்துப் பெற்ற மணமகளுக்கு விவகாரத்துப் பெற்ற படித்த மணமகன் தேவை.
★ 83 இல் பிறந்த 4 இல் சூரியனும் செவ்வாயும் 15½ பாவமுடைய அமெரிக்க பிரஜா உரிமை ஆக்கிரெக்காக பணிபுரியும் மணமகளுக்கு இஞ்சினியர், எக்கவுண்டர் மணமகன் தேவை.
★ சூரியன் செவ்வாய் குற்றமுள்ள குற்றமில்லாத தகுதியான மணமக்கள்கள் எம்மிடம் உள்ளனர்.
தொடர்பு: கமலக்கண்ணன் திருமணசேவை
இல 62, இராமலிங்கம் வீதி, பூங்கனிச்சோலையடி, மு.டா.ரவடி.
077 607 0862

**வேலைவாய்ப்பு**
யாழ் நகரில் இயங்கும் Samsung Singhagiri Private Ltd, நிறுவனத்திற்கு
* IT Assistant
* Sales Assistant
ஆகியோர் தேவை. (வயது எல்லை 18 - 26)
(ஆண்களுக்கு மாத்திரம்)
தொடர்பு: 077 706 4368


**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை**

| இல. | ஆதன பெயர் | ஆதனம் அமைந்துள்ள இடம் | ஆதன உரிமையாளர் | அங்கீகாரம் பெற்ற நபர் | ஆதனத்தின் அளவு |
|---|---|---|---|---|---|
| 1. | இந்தனை | இணுவில், வலிகாமம் வடக்கு, யாழ்ப்பாணம் (இராமநாதன் நுண்கலைப் பகுதியுடன் இணைந்தது) | இரத்தின சிங்கம் எட்வேட் சாந்தகுமார் | ஞானேந்திரன் சாந்தினி | நிலப்பரப்பு 4 குளி 8 |
| 2. | ஆழ்வாரக்கட்டுவன் | ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி (மருத்துவ பீடத்துடன் இணைந்தது) | முத்துலிங்கம் மைதிலி | சாமிலா குகநாதன் | நிலப்பரப்பு 5 குளி 00 |

மேற்படி ஆதனங்களை அங்கீகாரம் பெற்ற நபர்கள் விற்பனை செய்ய உத்தேசித்துள்ளதாக எம்மிடம் தெரிவித்தமையினால் இவ்வாதனங்கள் தொடர்பில் அக்கறை, உரித்து உள்ள எவரும் இருப்பின் 30.09.2016ஆம் திகதி 3.00 மணிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மீள்குடியேற்ற அமைச்சினால் கட்டப்பட்ட வீடு கையளிப்பு

கிளிநொச்சி, செப். 24
மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட வீடு கையளிப்பு நிகழ்வு நேற்றுப் பளை - தம்பகாமத்தில் இடம்பெற்றது.
அமைச்சினால் வழங்கப்பட்ட 8 லட்சம் ரூபா நிதியில் இந்த வீடு முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டு நேற்றுக் காலை 9.30 மணியளவில் பயனாளியிடம் கையளிக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் எஸ். சத்தியசீலன் நாடா வெட்டி வீட்டைத் திறந்து கையளித்தார்.
மீள்குடியேற்ற அமைச்சினால் கிளிநொச்சி மாவட்டத்துக்கு 1,100 வீடுகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-ரி3)

## பஸ் சேவைகள் இல்லாமையால் 7 கிலோ மீற்றர் தூரம் கால்நடை

### இளங்கோபுரம், சுதந்திரபுரம் கிராம மக்கள் விசனம்

முல்லைத்தீவு, செப். 24
தனியார் பேருந்துகளோ, அரச பேருந்துகளோ போக்குவரத்துச் சேவையில் ஈடுபடாமையால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இளங்கோபுரம், சுதந்திரபுரம் கிராமங்களில் வாழ்ந்துவரும் மக்கள் தங்கள் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் சிரமங்களை எதிர்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.
இது குறித்து அவர்கள் தெரிவித்துள்ளதாவது:
முல்லைத்தீவு - பரந்தன் பிரதான வீதியில் இருந்து சுமார் ஏழு கிலோமீற்றர் துரத்தில் சுதந்திரபுரம் கிராமம் அமைந்துள்ளது.
பாடசாலை மாணவர்கள், மருத்துவத் தேவைக்காகச் செல்லும் நோயாளிகள் வெளியே செல்வதாயின் ஏழு கிலோமீற்றர் தூரம் கால்நடையாக அல்லது பணம் கொடுத்து முச்சக்கர வண்டியை வாடகைக்கு அமர்த்தியே செல்லவேண்டிய அவல நிலை உள்ளது. அதேபோன்று இளங்கோபுரம் கிராமத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்ல ஐந்து கிலோமீற்றர் தூரம் கால்நடையாகச் செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.
முல்லைத்தீவு-பரந்தன் பிரதான வீதியில் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளில் ஒரு நாளைக்கு ஒன்றையேனும் எமது கிராமத்துக்குள் வந்து செல்லக்கூடியவாறு சேவைகளை மேற்கொள்ள வேண்டும்-என்று கோரியுள்ளனர்.
விரைவில் மாவட்டச் செயலகத்தில் தனியார் மற்றும் அரச போக்குவரத்துச் சேவை தொடர்பான சந்திப்பொன்று இடம் பெறவுள்ளது.
அந்தச் சந்திப்பில் இந்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாடி இரண்டு கிராமங்களுக்கும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொடுக்கவுள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-ரி7)




இணுவில் திருப்பதி அருள்மிகு வேங்கடேஸ்வரர் ஆலயம் - மருதனார்மடம்
புரட்டாதிச்சனிவார சனீஸ்வரர்தோஷ பரிகார ஹோமம்
காலம் - 24.09.2016 (2ஆம் சனிக்கிழமை)
நேரம் - காலை 9.00 - நண்பகல் 12.00மணிவரை
அடியார்கள் இன்று முழுவதும் நளதீர்த்தத்தில் புனிதநீராடி, எள்ளுசுட்டி எரித்து, எள்சாதம் நைவேத்தியம் செய்து தோஷ பரிகாரம் செய்யலாம்.
நண்பகல் 12.00 மணிக்கு அன்னதானம்.
ஆலயதர்மகர்த்தா.


# எமது வளங்களை யாருமே சூறையாடாமல் காப்போம்

### வடக்கு விவசாய அமைச்சர் அழைப்பு



யாழ்ப்பாணம், செப். 24
அபிவிருத்தி என்ற போர்வையில் எங்கள் வளங்களைச் சூறையாடி விட்டுப் போவதற்கு யாருக்கும் நாங்கள் இடமளிக்கக்கூடாது. நாங்கள் காலம் காலமாக வாழ்ந்த இந்த மண்ணில் அடுத்த தலைமுறையும் பயனை அனுபவிக்கவேண்டும். அதற்காகவாவது எங்கள் விளை நிலங்களை வெறுமையாகவிடாது பயன்தரக்கூடிய விவசாய உற்பத்திகளை மேற்கொள்ளவேண்டும்.
இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன்.
மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஊடாக விவசாய உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி விவசாயப் பிராந்திய பணியகத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே இவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
போருக்குப் பின்னர் எங்கள் தமிழர் பகுதிகளுக்குத் தென் பகுதியில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் தொழில் செய்ய வருபர்கள் பலர் எங்களிடம் வரும்போது, நாங்கள் பலருக்கு வேலை வாய்ப்பை வழங்குகின்றோம் என்று கூறிக்கொண்டு எங்கள் பூர்வீக நிலங்களைச் சூறையாட மட்டும்தான் வருகின்றார்கள். எனவே நாங்கள் விழிப்பாக இருக்கவேண்டும். வெறுமனே வேலைவாய்ப்புக்கள் என்ற ஒன்றுக்காக எங்கள் அடுத்தடுத்த சந்ததி இந்த மண்ணில் வாழவேண்டிய பகுதிகளை அல்லது சூழலை நாங்கள் இழக்க நேரிடும்.
இதனால் எமது மண்ணை அல்லது சூழலை எவ்வாறு பேணப் போகின்றோம் என்பதை நாங்கள் கருத்தில் எடுக்கவேண்டும் இன்று முறையான மாகாண சபை உருவாக்கப்பட்டு இருக்கின்றபோதும் வடக்கு ஆளுநர் சில தன்னிச்சையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றார். இது உண்மையில் ஏற்றுக் கொள்ள முடியாத விடயம். அண்மையில் கூட பூநகரிப் பகுதியில் ஓர் உல்லாச விடுதி கட்டுவதற்கு அனுமதி வழங்குமாறு பூநகரி பிரதேச சபையை நேரடியாகப் பணித்திருக்கின்றார். இவற்றை நாங்கள் எதிர்க்கின்றபோது நாங்கள் அபிவிருத்தி எதிரானவர்கள் என்ற நாமம் சூட்டப்படுகின்றது.
நீங்கள் விவசாயிகள் சொந்தக் காலில் நின்று தொழில் செய்பவர்கள். எல்லோருக்கும் சோறு போடக்கூடியவர்கள். போரினால் அல்லது நட்டம் அடைந்தன் காராணமாக இன்று விவசாயநிலங்கள் வெற்றிடங்களாக இருக்கின்றன. இவற்றை ஏதோ ஒரு வகையில் அபகரிக்க வேண்டும் என்பதற்காகத் தான் பலரும் முயற்சிக்கின்றார்கள்.
எனவே எங்கள் விவசாய நிலங்களைக் கைவிடுவீர்களாக இருந்தால், நீங்கள் ஏதோ ஒரு தொழிற்சாலைகளில் கூலிக்கு வேலை செய்பவர்களாக மாறி விடுவீர்கள். நீங்கள் கூலித் தொழிலாளர்களாக மாறக் கூடாது என்பதில் நாங்களும் அக்கறை கொண்டவர்களாக இருக்கின்றோம். நாம் செய்யும் உதவியோடு உங்கள் நிலங்களை வளமாக வைத்துக் கொள்ளுங்கள்-என்றார். (த-ரி-34)

## டெங்குத் தாக்கம் அதிகமுள்ள பிரதேசங்களில் விழிப்புணர்வு

யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் நடைபெறும் தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தின்போது, டெங்குத் தாக்கம் கூடுதலாக இனம்காணப்பட்ட பகுதிகளில் விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.
வண்ணார்பண்ணை, யாழ். நகர், நாவாந்துறை, நல்லூர், குருநகர் போன்ற பகுதிகளில் டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரமாக இடம்பெறும் என்று சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.
எதிர்வரும் 27ஆம் திகதி முதல் ஒக்ரோபர் 3ஆம் திகதி வரை இந்த டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெறும்.
இதன்போது மேற்படி பகுதிகளில் உள்ள பொதுமக்களின் சுற்றாடல்கள், வர்த்தக நிலையங்கள், அரச தனியார் கட்டடங்கள், பொது இடங்கள் என்பன சுகாதாரப் பகுதியினரால் தரிசிக்கப்படும்.
நுளம்புப் பெருக்கத்துக்கு ஏதுவாகக் காணப்படும் சுற்றாடல்களுக்கு எதிராகச் சம்பந்தப்பட்டவர்கள் மீது சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படும். தேசிய டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்தைச் சிறப்பாக நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் கூறினார். (த-17)

## உர மானியப் பதிவுக்கு இன்று இறுதிச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம், செப். 24
காசுக்கான உரமானியப் பதிவுக்கு இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. எனவே சண்டிலிப்பாய் கமநல சேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட இது வரை பதிவுகளை மேற்கொள்ளாத விவசாயிகள் இன்று சனிக்கிழமை இறுதிச் சந்தர்ப்பத்தைத் தவறாது பயன்படுத்துமாறு சண்டிலிப்பாய் கமநலசேவைகள் நிலைய பெரும்பாக அதிகாரி கே. கோகுலன் அறிவித்துள்ளார்.
கடந்த இரு வாரங்களுக்கு மேலாக வலி. தென்மேற்கு கமநலசேவைகள் நிலையத்துக்கு உட்பட்ட பகுதிகளில் இந்தப் பதிவுகள் நடைபெற்றன.
இறுதியாக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் மாலை வரை தவறவிடப்பட்ட விவசாயிகளுக்கான பதிவுகள் இடம்பெறும். இறுதிச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பதிவுகளை மேற்கொள்ளுமாறு பெரும்பாக அதிகாரி கோகுலன் கேட்டுள்ளார். (த-50)

## பலஸ்தீன மாணவர்களுக்கு இலங்கையில் புலமைப்பரிசில்

கொழும்பு, செப். 24
பலஸ்தீன மாணவர்களுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் தவிர்ந்த பல்வேறு துறைகளில் 2017/2016 கல்வி ஆண்டுக்கான புலமைப் பரிசில்கள் இலங்கையில் வழங்கப்படவுள்ளதாக பலஸ்தீன கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு நேற்று முன் தினம் வியாழக்கிழமை அறிவித்ததாக அந்நாட்டுச் செய்திகள் தெரிவித்தன.
அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் ஊடாக ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணபிப்பதற்கும், இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்கான நிபந்தனைகள் மற்றும் மேலதிக விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பலஸ்தீனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசுக்கு எதிராக மக்களை மீண்டும் திரட்டும் எதிரணி

## இரத்தினபுரியில் நடத்தத் திட்டம்

கொழும்பு, செப்.24

அரசுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டும் மற்றுமொரு நடவடிக்கை இரத்தினபுரியில் ஆரம்பிக்கப்பட வுள்ளதாகக் கூட்டு எதிரணி தெரி வித்துள்ளது.

அரசுக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டும் செயற்பாடு எதிர்வரும் ஒக் ரோபர் மாதம் 8ஆம் திகதி இரத்தி னபுரியில் இடம்பெறும் என கூட்டு எதிரணியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் நாடாளுமன்ற உறுப் பினர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார். கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தேர்தல் நெருங்கும் சந்தர்ப்பத்தில் புதிய கட்சியின் தலைவர் ஒருவர் தோற்றம் பெறுவார் எனவும் அவர் கூறினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மேளனத்துக்கும், ஐக்கிய தேசி யக் கட்சியின் சம்மேளனத்துக்கும் வருகைதந்த மக்களை விட இரத்தின புரியில் நடைபெறும் கூட்டத்துக்கு அதிகளவிலான மக்கள் வருகைதரு வார்கள் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (த)

# “எழுக இலங்கை” போராட்டத்துக்கு “எழுக தமிழ்”அழுத்தம் வழங்கட்டும்

## அமைச்சர் மனோ கணேசன் கூறுகிறார்

கொழும்பு, செப்.24

எழுக தமிழ் போராட்டம், எழுக இலங்கைப் போராட்டத்துக்கு உரிய அழுத்தங்களைக் கொடுக்கவேண்டும். எழுக தமிழ் போராட்டமும், எழுக இலங்கைப் போராட்டமும் ஒன்றை ஒன்று புரிந்து கொண்டால் இரண்டுக்கும் இடையில் முரண்பாடு எழத் தேவையில்லை.

இவ்வாறு அமைச்சர் மனோகணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரி விக்கப்பட்டிருப்பதாவது:

எழுக இலங்கை அல்லது எழுக இலங்கையர் என்று அழைக் கும்போது அது, எழுக தமிழ், எழுக் சிங்களம், எழுக முஸ்லிம் என்ற ஒட்டுமொத்த இலங்கையரை விளிப்பதாகத்தான் அர்த்தப்படவேண்டும். இலங்கையர் என்ற அடையாளத்துக்கு உள்ளே தமிழருக்கும், ஏனைய அனைத்து இனத்தவருக்கும் உரிய உரிமைகளின் சமத்துவம் உறுதிப்படுத்தப்படவேண்டும். சமத்துவம் என்ற அடிப்படை நிபந்தனை உறுதிப்படுத்தப் படாவிட்டால், இலங்கையர் என்ற அடையாளம் அர்த்தமற்றுப் போய்விடும்.

எழுக தமிழ் போராட்டம் சமத்துவத்தை வலியுறுத்துவதாக நான் நம்புகிறேன். ஆகவேதான், எழுக தமிழ் போராட்டம், எழுக இலங்கைப்போராட்டத்துக்கு உரிய அழுத்தங்களைத்தரவேண்டும் என நான் சொல்கிறேன். இன்று புதிய அரசமைப்பை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலைவருக்கும், எமக்கும் இது உதவியாக இருக்கவேண்டும் - என்றுள்ளது. (த-5)

# சாதாரண, உயர்தர பரீட்சை முடிவுகள் விரைவில் வரும்

## கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, செப்.24

இலங்கையின் கல்வித் துறையில் பெரும் மறு சீரமைப்பு மேற்கொள்ளப்படவிருப்பதாகத் தெரிவித்த கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், ஜி.சீ.ஈ. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சை முடிவுகளைக் கூடிய விரைவில் வெளியிடுவதற்கு பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட் டிருப்பதாகவும் கூறினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை நடைபெற்ற பல்கலைக்கழகங்கள் (திருத்தச்) சட்டவரைவு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

“கல்வித் துறையில் பெரும் மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் வழிநடத்தலில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. 13 வருடத் தொடர்ச்சியான கல்வியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படு கின்றது. மேலும் பல்கலைக்கழகக் கல்வியைச் பன்னாட்டுத் தரத்துக்கமைய மாற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இதற்கமைய ஜி.சீ.ஈ. சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளைக் கூடிய விரைவில் வெளியிடவேண்டும் என்று பரீட்சைகள் ஆணையாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட் டுள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் விரைவாக வெளியிடப் பட்டால் பல்கலைக்கழகத்துக்கு மாணவர்களை உள்வாங்குவதை விரைவு படுத்திப் பட்டப் படிப்பை விரைவாக நிறைவு செய்து குறைந்த வயதில் பட்டதாரியாகும் நிலைமையை உருவாக்க முடியும். பல்கலைக்கழகக் கிராமங்களை உருவாக்கிப் பல்கலைக்கழகம், கல்லூரி, பல்பொருள் சந்தை, வைத்தியசாலை ஆகியவற்றை அதில் உள்ள டக்கவும் எதிர்பார்க்கின்றோம்.

இவ்வாறாக கல்வித் துறையில் மாற்றங்களைச் செய்ய அரசு தயாராக உள்ளது” - என்றார். (த)

# அரச உத்தியோகத்தர்களின் சேவை குறித்து முறைப்பாடு

கொழும்பு, செப்.24

அரச உத்தியோகத்தர்கள் உரியவாறு தமது சேவைகளை நிறைவேற்றுவதில்லை என முறைப்பாடுகள் கிடைத்துள்ள தாக பொது நிர்வாக, உள் நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

தமக்கான சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் சிரமங் களை எதிர்நோக்குவதாக மக் களிடமிருந்து முறைப்பாடு கள் கிடைத்துள்ளதாக அமைச் சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி கூறியுள்ளார்.

கல்வித்துறை, பொலிஸ் மற் றும் பிரதேச செயலகங்களில் சேவையாற்றும் உத்தியோகத் தர்கள் தொடர்பிலேயே முறைப் பாடுகள் முன்வைக்கப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். எதிர்காலத்தில் அரச உத்தி யோகத்தர்களால் ஏற்படும் இதுபோன்ற அசௌகரியங் களைத்தவிர்ப்பதுடன், வினைத் திறனான அரச சேவையை உருவாக்குவதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் கூறினார். (த)

# யோஷிதவின் மனு; புதனன்று தீர்ப்பு

கொழும்பு, செப்.24

வெளிநாடு செல்ல அனுமதிக்குமாறு, முன்னாள் ஜனாதி பதி மகிந்த ராஜபக்சவின் இரண்டாவது புதல்வர் யோஷித ராஜபக்சவினால் தாக்கல் செய்த மனு தொடர்பான தீர்ப்பு, எதிர்வரும் 28ஆம் திகதி புதன்கிழமை வழங்கப்படுமென, கொழும்பு மேல் நீதிமன்றம், நேற்று முன் தினம் வியாழக்கிழமை அறிவித்தது.

யோஷித ராஜபக்ச சார்பாக, அவரது சட்டத்தரணிகளால் கடந்த செவ்வாய்க்கிழமை இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அவர் செல்ல எதிர் பார்க்கும் நாடு மற்றும் வெளிநாடு செல் வதற்கான காரணம் தொடர்பில், அந்த மனுவில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

இது தொடர்பான விசாரணை நேற்று முன் தி னம் வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டபோது, தன்னுடைய பாதத்தில் உபாதை இருப்பதாகவும் அதற்குச் சிகிச்சை பெறுவதற்காக ஆஸ்திரேலி யாவின் மெல்பேர்ன் நகரில் அமைந்துள்ள வைத்தியசாலைக்குச் செல்ல எதிர்பார்ப்ப தாகவும் யோஷித ராஜபக்சவினால் மன்றில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், எதிர்வரும் தினங்களில் நடைபெற வுள்ள றக்பி விளையாட்டுப் போட்டிகளுக்கு முன்னர், தன்னுடைய பாத உபாதைக்குச் சிகிச்சை பெறவேண்டுமெனவும் மன்றில் அவர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், யோஷித ராஜபக்ச வெளிநாடு செல்வதற்கான அனுமதிக்குத் தான் எதிர்ப்பு தெரி விப்பதாக, மன்றில் முன்னிலையாகியிருந்த சட்டமா அதிபர் தெரிவித்தார். இந்நிலையில், யோஷிதவின் கோரிக்கை மனு தொடர்பான தீர்ப்பை 28ஆம் திகதியன்று வழங்குவதாக, கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆர். ஹெய்யந்துடுவ அறிவித்தார்.

சீ.எஸ்.என் தொலைக்காட்சி நிறுவனத்தில் ஏற்பட்டதாகக் கூறப்படும் நிதிச் சலவைப்படுத் தல் குற்றச்சாட்டின் அடிப்படையில், யோஷித வின் வெளிநாட்டுப் பயணத்துக்கு நீதிமன்றத்தி னால் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது. (த)

மரண அறிவித்தல்கள்

திருமதி சிவபாக்கியம் வேலுப்பிள்ளை



மலர்வு: 04.03.1935
உதிர்வு: 21.09.2016

இரணைப்பாலை, புதுக் குடியிருப்பைப் பிறப்பிடமாக வும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக் கியம் வேலுப்பிள்ளை 21.09.2016 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியை கள் நாளை (25.09.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று புதுக்குடியிருப்பு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தவகரன் (பேரன்)

077 414 5722

திருமதி அதிசயமணி ஞானசீலன்

(இளைப்பாறிய ஆசிரியை)



பிறப்பு 21.09.1941 இறப்பு 18.09.2016

யாழ்.கோப்பாயைப் பிறப்பிடமாக வும், சாவகச்சேரியை வசிப்பிடமாகவும், லண்டனை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட திருமதி அதிசயமணி ஞானசீலன் 18.09.2016 ஞாயிற்றுக்கிழமை லண்ட னில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கோப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு.திருமதி குணரத்தினம் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான பொன்னு - நேசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், ஞான சீலனின் அன்பு மனைவியும், அருட்சுதன், நிவேதனா, அமலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான செல்வராசா, பூமணி,நேசமணி, ஞானமணி, குணசீலன், தவசீலன், ஜெயசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மெலனி, ரேமண்ட், இவோன் ஆகியோரின் அன்பு மாமியா ரும்,அபிஷேக், ஜொனதன், நிரேஸ், நிலுசி, ஜொலிற்றா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.09.2016 செவ்வாய்க்கிழமை லண்டனில் நடைபெறும்.

**குறிப்பு:- 17.09.2016 சனிக்கிழமை இறைவனடி சேர்ந்த கோப்பாயைப் பிறப்பிடமாகவும் ஆஸ்திரேலியாவை வசிப்பிட மாகவும் கொண்ட குணரட்ணம் தவசீலனது இறுதிக்கிரியைகள் இன்று 24.09.2016 சனிக்கிழமை ஆஸ்திரேலியாவில் நடைபெறும். இவர்கள் இருவரின தும் நன்றி செலுத்தும் ஆராதனை 'ஞானபதி' கோப்பாய் மத்தி கோப்பா யில் 01.10.2016 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறும்.**

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஞானபதி', கோப்பாய் மத்தி,
கோப்பாய்.
077 104 3575

(J/4840)
(11,18)

தகவல்:
குணரட்ணம் ஜெயசீலன்,
சிரில் தனராஜன்

ஞானசீலன் -(பிரித்தானியா - +4477 787 39111),
அருட்சுதன் - (ஆஸ்திரேலியா- +6129 769 0843),
நிவேதனா -(பிரித்தானியா- +4420 869 78433, +4479 3137 6272),
அமலன் - (பிரித்தானியா-+4420 3638 2947, +4478 2871 2301)

நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி
காயத்திரி
பாலமுரளீதரன்
(ஆசிரியர் - கொக்குவில்
இந்துக்கல்லூரி)



மண்ணில்
06.06.1970

விண்ணில்
09.10.2012

பூவாகி “ காயாகி ” தாயாகி நீயிருந்தாய்
பூவுடலின் பொலிவு கண்டு
உன்னைப் பெற்றவரும் நீ பெற்றவரும்
உன் உற்றத்துணையும் உடன் பிறப்புக்களும் மகிழ்ந்திருந்தோம்
ஆறிலுஞ்சாவு நூறிலும் சாவு என்றுணர்த்தி
ஆறாத்துயரடைய வைத்தாயே அம்மா
நாலாண்டுகளென்ன நாற்பது ஆண்டுகளானாலும் ஆறுமா எம் மனது
அம்மா உங்கள் ஆன்மா நாகம்மாள் பாதத்தில்

இல.19, 6ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, கந்தர்மடம்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள கைதிகளை

# நிபந்தனையின்றி விடுவியுங்கள்

## பிரதமரிடம் கோருகிறார் செல்வம் எம்.பி.

யாழ்ப்பாணம், செப். 24



அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை எதுவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

நீண்ட காலமாகச் சிறைத் தண்டனை அனுபவித்துவரும் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அரசினதும், மனித உரிமை அமைப்புக்களினதும் கவனத்துக்குத் தமது கோரிக்கைகளைக் கொண்டுவரும் நோக்கிலேயே அவர்கள் இந்த நடவடிக்கையில் இறங்கியுள்ளனர்.

இந்த விடயத்தை மனிதாபிமான முறையில் அணுகி, அவர்களை எதுவித நிபந்தனைகளுமின்றி விடுதலை செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்-என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# கைதிகளின் விடுதலைக்கு காத்திரமான நடவடிக்கை

## வேண்டும் என்கிறார் அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்

யாழ்ப்பாணம், செப் 24

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு நீண்ட காலம் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்குக் காத்திரமான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் தெரிவித்தார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டிலுள்ள பிரதான பிரச்சினைகளுள் காணாமற் போனவர்கள் மற்றும் அரசியல் கைதிகள் விடயம் மிக முக்கியமானதாகும். இது தொடர்பில் கவனம் செலுத்தி தீர்வைப் பெற்றுக் கொடுக்க வேண்டியது நல்லாட்சி அரசின் கடமையாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு எவ்வித விசாரணைகளுமின்றி நீண்டகாலமாகப் பலர் சிறைகளில் வாடுகின்றனர். அவர்களைப் பொதுமன்னிப்பின் அடிப்படையிலோ அல்லது நிபந்தனைகளின் அடிப்படையிலோ விடுதலை செய்ய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறைகளில் வாழ்கின்ற இளைஞர்கள் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும்.

கடந்த காலங்களில் பயங்கரவாத நடவடிக்கைகளில் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் இன்று மன்னிக்கப்பட்டு அரசியல் மற்றும் ஏனைய துறைகளில் ஈடுபட்டுள்ளனர். அவ்வாறான நிலையில், அசாதாரண சூழலில் கைது செய்யப்பட்ட அப்பாவிச் சகோதரர்கள் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை நியாயமற்ற ஒன்றாகும் என்பதுடன் அதனை ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

போர் முடிவடைந்துள்ளது. நாட்டில் அமைதி, சமாதானம் ஏற்பட்டுள்ளது. எல்லோரும் ஒற்றுமையாக வாழும் சூழல் உருவாகியுள்ளது. இந்த ஒற்றுமையான சமாதானமான அமைதியான சூழலில் கடந்த காலப் போர்ச் சூழலில் பிடிக்கப்பட்டு கைது செய்யப்பட்டுச் சிறைகளில் வாடுகின்ற அத்தனை இளைஞர்களும் உடனடியாக விடுதலை செய்யப்பட வேண்டும் - என்றுள்ளது. (த-5)

# கைதிகளின் மறு வாழ்வுக்கு கூட்டமைப்பு வரவேற்பு

யாழ்ப்பாணம், செப். 24

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிக்கு அமைவாக, தமிழ் அரசியல் கைதிகள் 23 பேரை விடுவிப்பதாக எடுக்கப்பட்ட முடிவை கூட்டமைப்பு வரவேற்பதாகத் தெரிவித்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பிரிவினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஓகஸ்ட் 26 ஆம் திகதியன்று நிதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச, சட்ட ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்க மற்றும் சட்டமா அதிபர் உட்பட்ட உயர் அதிகாரிகளுடன் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந் திரனும் நடத்திய பேச்சுகளின் போது அடுத்த கட்டமாக இன் னுமொரு தொகை அரசியல் கைதிகளைப் புனர்வாழ்வு மூலம் விடுவிப்பதென்று உறுதிமொழி கொடுக்கப்பட்டிருந்தது.

அதற்கமைவாக மேலும் 23 கைதிகளை விடுவிப்பதாக எடுக்கப்பட்ட முடிவைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்கின்றது. மீதமாக இருக்கின்ற ஏனைய கைதிகளையும் தொடர்ச்சியான மீளாய்வு மூலமாக விடுதலை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம். அடுத்தடுத்து, எஞ்சியிருக்கிறவர்கள் சார்பாக அரசோடு பேசி இந்த விடயத்தை முழுமையாக நிறைவு செய்வோமென்று மக்களுக்கு உறுதியளிக்கின்றோம்- என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# இடரினால் படகுகளை இழந்த மீனவருக்கு இழப்பீடு இல்லை

## வடக்கு மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் சபையில் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், செப். 24

கிளிநொச்சி வர்த்தகர்களின் இழப்புக்கு இழப்பீடு கொடுக்கப்பட வேண்டும். அதேபோல் மாகாணசபை உருவாகிய ஒரு மாத காலத்தில் இடம்பெற்ற இயற்கை இடரில் படகுகளை இழந்த 60 மீனவர்களின் இழப்பீடு தொடர்பில் இந்தச் சபை கவனத்தில் எடுக்கவில்லை. இது கவலை அளிப்பதாக வட மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

கிளிநொச்சியில் வர்த்த நிலையங்களில் தீ ஏற்பட்டது ஒரு துயர் நிறைந்த சம்பவம். வர்த்தகர்களின் இழப்புக்கு இழப்பீடு கொடுக்கப்படவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. அதேபோல் மாகாணசபை உருவாகிய ஒரு மாதத்தில் இடம்பெற்ற இயற்கை இடரில் படகுகளை இழந்த 60 மீனவர்களின் இழப்பீடு தொடர்பில் இந்தச் சபை இன்று வரை கவனம் செலுத்தாதது கவலை அளிக்கின்றது.

வடமராட்சி கிழக்கு மற்றும் முல்லைத்தீவுப் பிரதேசங்களில் இடம்பெற்ற இடரினால் பாதிக்கப்பட்ட மீனவக் குடும்பங்கள் இன்றுவரை நிர்க்கதி நிலையில் உள்ளனர். இவர்கள் தொடர்பிலும் சபை கவனம் கொண்டிருக்கவேண்டும் - என்றார்.

இதன்போது உரையாற்றிய வட மாகாணசபையின் பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், இடம்பெற்ற இயற்கை இடர் காரணமாகப் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும். முல்லைத்தீவைப் பொறுத்தவரை இடர் இடம்பெற்ற உடன் நாம் பரீட்சித்தபோது 10 முதல் 15 படகுகளே இழப்பு ஏற்பட்டிருந்தது.

அதன் இழப்பீட்டு விவரத்தை வழங்குமாறு மீனவ அமைப்பிடம் கோரியபோது 60 பேரின் பட்டியலைச் சமர்ப்பிக்கின்றனர். இவ்வாறு வழங்கும் பட்டியலில் உண்மையில் பாதித்தவர்களின் பெயர் முன்னுரிமையில் இருந்தாலும் பார்க்கலாம். அந்தப் பெயர்கள் பட்டியலில் இடையிலேயே உள்ளது. உண்மையான பாதிப்பு விவரங்களைச் சமர்ப்பிக்கின்றோம். அவர்களுக்கும் உதவி புரியுங்கள் - என்றார். (த-5-101)

## இன்று மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரையும் கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என வடமாகாண மின் வழங்கல் கட்டுப்பாட்டு நிலைய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

காலை 8.30 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை யாழ். பிரதேசத்தில் நாகர்கோவில், மாமுனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணி, உடுத்துறை, வத்திராயன், ஆழியவளை, வெற்றிலைக் கேணி, கட்டைக் காடு, கேவில், தாளையடி ஐஸ் தொழிற்சாலை ஆகிய இடங்களிலும்,

கிளிநொச்சிப் பிரதேசத்தில் அறிவியல் நகர், விவேகானந்தநகர், பாரதிபுரம், மலையாளபுரம், டொன்பொஸ்கோ, வன்னிவிளாங் குளம், ஒட்டறுத்தகுளம், பாலிநகர், வடகாடு அம்பாள் குளம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத்திட்டம், பாண்டியன்குளம், நட்டாங் கண்டல், கரும் புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மங்கை குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், 66ஆம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க அரிசி ஆலை, மாஸ் இன்ரிமேற், மாஸ் அக்ரிவ், பொறியியல் பீடம், விவசாயபீடம், பார்ம் கவுஸ், நோர்த் கார்கில்ஸ் அக்றிபூட்ஸ் ஆகிய இடங்களிலும்,

வவுனியாப் பிதேசத்தில் புதிய பேருந்துத் தரிப்பு நிலையத்திலிருந்து நேரியகுளம் ஊடாகச் செட்டிக்குளம் வரைக்கும், நெளுக்குளத்திலிருந்து பம்பைமடு வரைக்கும், தெற்கிலுப்பைக்குளம் கிராமம், ஓமேகா லைன், குருமன்காடுயு. என். எச்.சி.ஆர், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசிஆலை, சிறீரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரன் அரிசிஆலை, சயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, பம்பைமடு பல்கலைக் கழகம், தொழில்நுட்பக் கல்லூரி ஆகிய இடங்களிலும் மன்னார் பிரதேசத்தில் அரிப்பு, சவேரியர்குளம், வெள்ளிமலை, சி.ஈ.சி.பி ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்படும். (த-ரி)

# ஒப்பந்த அடிப்படையில் தொழில்நுட்ப அலுவலர்

## வடக்கில் தேங்கியுள்ள அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க மாகாண சபையில் பிரேரணை

யாழ்ப்பாணம், செப். 24

வடக்கு மாகாணத்தில் நிலவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமித்து, தேங்கியுள்ள அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரி வடக்கு மாகாண சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் அமர்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது. ஆளும்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி மேற்படி பிரேரணையை முன்மொழிந்தார்.

தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கடந்த சில வாரங்களாகப் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அபிவி ருத்திப் பணிகளில் இதனால் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்துக்கு உட்பட்ட திணைக்களங்களில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான 70 வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இந்த வெற்றிடங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர்களை நியமித்துத் தேங்கிக் கிடக்கும் பணிகளை நிறைவேற்றவேண்டும் என்று முதலமைச்சரைக் கோருவதாக முன்மொழியப்பட்ட பிரேரணையை, முல்லைத்தீவு மாவட்ட மாகாணசபை உறுப்பினர் கமலேஸ்வரன் வழிமொழிந்தார். பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது. (த-5-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விபத்து, அவசர சிகிச்சைப் பிரிவு கட்டடப் பணி பூர்த்தி நிலையில்

## சாவகச்சேரி வைத்தியசாலையில்

சாவகச்சேரி செப். 24

சாவகச்சேரி வைத்தியசாலை வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கான கட்டட வேலைகள் பூர்த்தியடையும் நிலையில் உள்ளன.

கொழும்பு அரசினால் கடந்த வருடம் 200 மில்லியன் ரூபா செலவில் வைத்தியசாலையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்க நிதி ஒதுக்கப்பட்டு வடக்கு மாகாண சபையினால் மூன்று கட்டங்களாக இந்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

முதல் கட்டமாக 90 மில்லியன் ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்ட கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துவரும் நிலையில் இந்தக் கட்டடத்தில் வைத்திய சேவைகள் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாம் கட்ட வேலைகள் 2017 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கட்டடத்தின் உள்ளக வேலைகளும், மூன்றாம் கட்டமாக 2018 ஆம் ஆண்டு மருத்துவ உபகரணங்கள் கொள்வனவும் இடம்பெற்று அதன் பின்னரே இந்தக் கட்டடத்தில் வைத்திய சேவைகள் பொதுமக்களுக்குக் கிடைக்குமெனவும் நம்பப்படுகின்றது.

தற்போது ஏ-9 வீதி உட்பட தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெறும் வீதி விபத்துக்களில் சிக்கிக் காயமடைவோர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடி சிகிச்சைகளின் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவது குறிப்பிடத் தக்கது. (த-9)

# தபாலகக் கட்டடங்கள் அமைக்க நிதி இல்லை

## 31 நிலையங்கள் வாடகைக் கட்டடங்களில் என்கிறார் வடக்கு உதவித் தபால்மா அதிபர்

யாழ்ப்பாணம், செப். 24

வடக்கு மாகாணத்தில் 52 தபால் நிலையங்கள் உள்ளன. இதில் 31 தபால் நிலையங்கள் இன்னமும் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இதற்கு மத்திய அரசிடம் இருந்து நிதி ஒதுக்கீடு கிடைக்காமையே காரணம்.

இவ்வாறு வடக்கு மாகாண உதவித் தபால்மா அதிபர் என். ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தபால் சேவையானது மிகவும் உன்னதமான ஒரு சேவையாகத் திகழ்கின்றது. ஆரம்ப காலம் தொட்டு அனைத்து மக்களும் பயன்பெறக்கூடிய ஒரு சேவையாக இந்தச் சேவை விளங்குகின்றது. நவீன காலத்திலும் இதன் சேவை மிகவும் தேவைப்படும் ஓர் அம்சமாக உள்ளது. ஆயினும் வடக்கு மாகாணத்தில் சிறந்த சேவையை வழங்கும் தபாலங்களில் பல இன்னமும் சொந்தக் கட்டடத்தில் இயங்காத நிலை காணப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் 31 தபாலகங்களில் 7 தபாலகங்கள் மாத்திரமே சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இராணுவத் தபாலகத்தைத் தவிர்த்து ஏனைய 23 தபால் நிலையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. இதேபோன்று வவுனியா மாவட்டத்தில் 4 தபால் நிலையங்களில் ஒரு தபால் நிலையமும், மன்னார் மாவட்டத்தில் 8 தபால் நிலையங்களில் 4 தபால் நிலையங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 5 தபால் நிலையங்களில் 2 தபால் நிலையங்களும் வாடகைக் கட்டங்களில் இயங்கி வருகின்றன. ஆயினும் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள தபால் நிலையங்கள் நான்கும் சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன.

13 தபால் நிலையங்கள் அமைப்பதற்குக் காணி இருந்தும் அவை வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. யாழ். மாவட்டத்தில் 9 இடங்களும், மன்னார் மாவட்டத்தில் 2 இடங்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 2 இடங்களும் எனத் தபால் நிலையங்களை அமைப்பதற்குக் காணிகள் உள்ளன.

மத்திய அரசிடம் இதற்கான நிதி ஒதுக்கீடு இல்லாமையே தபால் நிலையங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்குவதற்கு உரிய முக்கிய காரணம். இந்தவருடம் கூட இதற்கான நிதி கோரப்பட்டும் கிடைக்கவில்லை. இனி வரும் காலங்களிலாவது தபால் நிலையத்தின் சேவையை உணர்ந்து நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் இந்தச் தேவையை நிறைவு செய்யமுடியும் -என்றார். (த-ரி)



சாவகச்சேரியில் நேற்று அஞ்சல் தலை கண்காட்சி

# சாவகச்சேரியில் நேற்று அஞ்சல் தலை கண்காட்சி

சாவகச்சேரி, செப் 24

உலக அஞ்சல் வாரத்தையொட்டி சாவகச்சேரி அஞ்சல் அலுவலகத்தினர் நேற்று அஞ்சல் தலைகளின் கண்காட்சியை அஞ்சலக வளாகத்தில் நடத்தினர்.

சாவகச்சேரி அஞ்சல் அலுவலக அஞ்சல் அதிபர் அ.இன்பராஜ் லம்பேர்ட் தலைமையில் நடைபெற்ற கண்காட்சியைத் தென்மராட்சி பிரதேச தொழில் அதிபர் த.ஜெயந்தன் நாடா வெட்டி ஆரம்பித்து வைத்தார். பிரதேசத்தைச் சேர்ந்த பாடசாலைகளின் மாணவர்கள், பொது மக்கள் பலர் கண் காட்சியைப் பார்வையிட்டனர். (த-9)



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிசிச்சை பெற்றுவரும் மாற்றுத் திறனாளியொருவர் சவர்க்காரத்தில் வடிவமைத்த பச்சைக் கிளிகளை வைத்தியசாலைக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளார். கால்கள் செயலிழந்த நிலையில் சிகிச்சை பெற்றுவரும் வடமராட்சி கிழக்கு உடுத்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தவராசா என்பவரே இதனை வழங்கியுள்ளார். (த-9)

## கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு நடமாடும் சேவை கிளிநொச்சியில்

யாழ்ப்பாணம், செப் 24

பின்தங்கிய கிராமங்களை முன்னேற்றுதல் என்ற வடக்கு மகாண சபையின் திட்டத்தின் கீழ் கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்கான நடமாடும் சேவை எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்குக் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் அலுவலக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையில், பொதுமக்கள் தங்கள் அடையாள அட்டைகள், பிறப்புச் சான்றிதழ்கள், கடவுச் சீட்டுக்கள் போன்ற இன்னோரன்ன சேவைகளையும் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் வடமாகாண அமைச்சுகளின் கீழ் இயங்கக் கூடிய அனைத்துத் திணைக்களங்களும் அதன் அதிகாரிகளும் அங்கு பிரசன்னமாகவுள்ளனர்.

இதனால் நீண்டகாலக் குறைபாடுகள் இந்த நிகழ்வில் தீர்த்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறு முடிவுக்குக் கொண்டு வரமுடியாத விடயங்கள் குறிப்பிட்ட திணைக்களங்களின் கருத்துக்கு எடுக்கப்பட்டு மிக விரைவில் அவற்றிற்கான தீர்வுகள் பெற்றுக் கொடுக்கப்படும். இந்த நடமாடும் சேவையின் மூலம் பொதுமக்கள் தமது அனைத்துத் திணைக்களங்கள் தொடர்பான பிரச்சனைகளுக்கும் ஒரே கூரையின்கீழ் தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு வாய்ப்பாக அமையும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

## உற்பத்தித் திறன் போட்டி; கிளிநொச்சி 2ஆம் இடம்

யாழ்ப்பாணம், செப் 24

தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் நடத்தப்பட்ட போட்டியில், கிளிநொச்சி மாவட்டம் இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாண மாவட்டம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

பிரதேச செயலக ரீதியில் கரவெட்டிப் பிரதேச செயலகம் தேசிய ரீதியில் இரண்டாவது இடத்தையும், மருதங்கேணி பிரதேச செயலகம் மூன்றாவது இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளன. (த-5)

# ஈ.பி.டி.பியின் சுவரொட்டிக்கும் பேரவைக்கும் தொடர்பில்லை

யாழ்ப்பாணம், செப் 24

கூட்டுப் பேரணி என்று தெரிவிக்கப்பட்டு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியினால் (ஈ.பி.டி.பி) ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகளுக்கும் தமிழ் மக்கள் பேரவைக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்று, தமிழ் மக்கள் பேரவை தமது முகநூலில் தெரிவித்துள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்று பெயரிடப்பட்டு, இன்றைய ஊர்வலம் தொடர்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இது தொடர்பில் ஊர்வலத்தை ஏற்பாடு செய்துள்ள பேரவை தமது முகநூலில்,

"கூட்டுப் பேரணி என்ற வகையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி என்ற பெயர் குறிப்பிடப்பட்ட சுவரொட்டிகள் யாழ்ப்பாண நகரப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளதாகவும் அறிய முடிகின்றது. இத்தகைய சுவரொட்டிகளை யார் வெளியிட்டார்கள் என்பது தெரியவில்லை. இதற்கும் தமிழ் மக்கள் பேரவை முன்னெடுக்கும் ஊர்வலத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதேவேளை, தமிழ் மக்களின் நலன் சார்ந்து பேரவையால் முன்மொழியப்பட்ட கோரிக்கைகளை ஏற்று அதனை ஆதரிப்பவர்கள் எவராயினும் இந்த ஊர்வலத்தில் கலந்து கொள்ளமுடியும்" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கு கல்விச் சுற்றுலா அவசியமானது

## கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 24

கூட்டுறவுப் பணியாளர்கள் வெளிமாட்டங்களுக்கு கல்விச் சுற்றுலா சென்று அங்குள்ள சங்கங்களுடன் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள வேண்டும். சங்க இயக்குனர் சபைகளின் அனுமதியுடன் இந்தச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்யவேண்டும் என்று வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் தெரிவித்தார்.

இது குறித்து அவர் தெரிவித்ததாவது:

கூட்டுறவுப் பணியாளர்கள் கட்டாயம் சுற்றுலாக்களை மேற்கொண்டு வேறு மாவட்டங்களுக்குச் சென்று அங்குள்ள சங்கங்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்ளவேண்டும். பணியாளர்களுடன் அனுபவப் பகிர்வுகளை மேற்கொள்வதன் மூலம் சங்கங்களின் செயற்பாடுகளை விருத்தி செய்ய முடியும். சங்கப் பணியாளர்கள் இயக்குனர் சபைகளின் அனுமதியுடன் இந்தச் சுற்றுலாக்களை மேற்கொள்ள முடியும்.

தெற்கில் இருந்து வடக்குக்குக் கூட்டுறவுப் பணியாளர்கள் சுற்றுலாக்களை மேற்கொள்கின்றனர். இங்குள்ள சங்கங்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்கின்றனர். அதே போன்று வடக்கில் இருந்தும் சங்கங்கள் தெற்கே சுற்றுலாக்களை மேற்கொள்ள வேண்டும்.


கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தின் கல்விச் சுற்றுலாவின் கீழ் அண்மையில் சங்கங்களின் பொது முகாமையாளர்கள் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் கூட கல்விச் சுற்றுலாக்களை மேற்கொண்டுள்ளன.

அதேபோன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் இந்த கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்கு செய்து பணியாளர்களின் ஆற்றலை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்–என்றார். (த-17)

# கிளிநொச்சி தீ விபத்து ரணிலிடம் பதிலில்லை

யாழ்ப்பாணம், செப். 24

கிளிநொச்சிச் சந்தைக் கடைகள் தீ விபத்தில் எரிந்து அழிந்தமை தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியும் எந்தப் பதிலும் கிடைக்கப் பெறவில்லை. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.



வடக்கு மாகாண சபையில் நேற்று முன்தினம் நடந்த அமர்வில், கிளிநொச்சி தீவிபத்துத் தொடர்பில் சிறப்பு அறிக்கையை முதலமைச்சர் சபையில் சமர்ப்பித்து உரையாற்றினார். இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

"கிளிநொச்சிப் பொதுச் சந்தைத் தீ விபத்தினால் 125 கடைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனை நான் நேரில் சென்று பார்வையிட்டேன். நாடாளுமன்ற உறுப்பினர்களும், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களும் சென்று பார்வையிட்டுள்ளனர். இடர் பாதிப்பின் பின்னர் கரைச்சிப் பிரதேச சபையின் ஊடாக வர்த்தகர்களுக்கு தலா 20 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. இந்தப் பாதிப்புத் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்தேன். அவர் இதற்கு எந்தப் பதிலும் வழங்கவில்லை. ஜனாதிபதி மைத்திரிபால நாடு திரும்பிய பின்னர் அவரிடம் நேரடியாகவோ அல்லது கடிதம் மூலமாகவே வலியுறுத்தவுள்ளேன் – என்றார்.

வடக்கு மாகாண வர்த்தக வாணிப அமைச்சர் பா.டெனீஸ்வரன், "2013 ஆம் ஆண்டு பயஸ் புயல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இன்று வரை கொடுப்பனவு வழங்கப்படவில்லை" – என்றார்.

இதற்குப் பதிலளித்த முதலமைச்சர், "இயற்கை இடர்கள், செயற்கை இடர்கள் என்று இரண்டினாலும் பாதிக்கப்பட்ட விவரங்கள் கேட்கப்பட்டுள்ளன. இடர் முகாமைத்துவ அமைச்சுடன் பேசுகின்றேன்" – என்றார்.

கிளிநொச்சி மாவட்ட மாகாண சபை உறுப்பினர் அரியரட்ணம் தெரிவிக்கையில், "நான்கு வருட காலமாகத் தமக்கான கடைகளை அமைத்துத் தரும்படி கரைச்சிப் பிரதேச சபையிடம் சந்தை வர்த்தகர்கள் கோரியிருந்தனர். கரைச்சிப் பிரதேச சபையில் ஐந்து கோடி 80 லட்சம் ரூபா நிதி இருக்கிறது. கடைத் தொகுதி அமைப்பது தொடர்பில், அனுமதி கோரப்பட்டபோதும் அது ஆளுநரால் நிறுத்தப்பட்டிருக்கிறது. கடந்த நான்கு வருட காலமாக நடைபெற்று வருகின்ற பிரச்சினை இது. நாம் எல்லோரும் இடர்கள் ஏற்பட்ட உடனே அதைப் பற்றிக் கதைக் கிறோமே தவிர அதற்கான நிரந்தரத் தீர்வைப் பெறவில்லை" என்றார்.

வடக்கு மாகாண பிரதி அவைத் தலைவர் ம.அன்ரனி ஜெகநாதன், "இவ்வாறான இடர்கள் ஏற்படும்போது நிதி உதவி வழங்குவதற்கு வடக்கு மாகாண சபைக்குத் தனியான நிதியம் வேண்டும்" – என்றார். (த-5-101-ரி1)

# ஒஸ்ரிய அரசின் நிதியுதவி ஐந்து மாவட்டங்களுக்கும்

## பகிர்ந்தளிக்கப்படும் என்கிறார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர்

ஒஸ்ரிய அரசினால் வடக்கு மாகாண சபைக்குக் கிடைக்கும் நிதி, வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். 5 மாவட்டங்களிலும் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படும். இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

ஆளும் கட்சியின் மன்னார் மாவட்ட உறுப்பினர் ஜி.குணசீலன் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஒஸ்ரிய அரசின் நிதி உதவியில் வடக்கின் 5 மாவட்டங்களிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் மேற்கொள்ளப்படவுள்ள செயற்திட்டங்கள், நிதி ஒதுக்கீடுகள் தொடர்பிலான விவரங்களை சபைக்குத் தெரியப்படுத்துமாறு குணசீலன் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் தெரிவித்ததாவது:

"கொழும்பு அரசின் சுகாதார அமைச்சருடன், 9 மாகாண சபைகளின் சுகாதார அமைச்சர்களும் இணைந்து கடந்த மார்ச் மாதம் ஒஸ்ரிய அரசின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தோம். ஒஸ்ரிய அரசு வழங்கவுள்ள 60 மில்லியன் யூரோ நிதியை வடக்கு மாகாணத்துக்கு வழங்குமாறு கேட்டிருந்தேன். ஒஸ்ரிய அரச குழுவினர் வடக்கு மாகாணத்துக்கு மூன்று தடவைகள் பயணம் மேற்கொண்டிருந்தனர். இதனடிப்படையில் 5 திட்டங்களை முன்னெடுப்பதற்கு இணக்கப்பாட்டுக்குவந்துள்ளனர். பருத்தித்துறை பிரதேச வைத்தியசாலையை மேலும் அபிவிருத்தி செய்வது, கிளிநொச்சி வைத்தியசாலையைப் பெண்களுக்கான சிறப்பு வைத்தியசாலையாகத் தரமுயர்த்துவது, மாங்குளத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கான மருத்துவப் புனர்வாழ்வு நிலையம் அமைப்பது, வவுனியா பொது வைத்தியசாலையில் இருதய சத்திர சிகிச்சை மற்றும் சிறுநீரக சிகிச்சை போன்றவற்றை அமைத்தல், மன்னாரில் புதிய சத்திர சிகிச்சைக் கூடமும் அதனுடன் தொடர்புடைய வேறு சிகிச்சைகள் போன்ற முக்கிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன – என்றார்.

மன்னார் வைத்தியசாலைக்கு ஒருதடவை மாத்திரமே ஒஸ்ரியக் குழுவினர் வந்துள்ளனர். இரண்டாம், மூன்றாம் தடவைகள் வடக்குக்கு வந்தபோதும் மன்னாருக்கு வரவில்லை. மன்னார் புறக்கணிக்கப்பட்டதாக அதிகாரிகள் கூறுகின்றனர். திட்டத்தில் மன்னார் உள்வாங்கப்பட்டிருந்தால் ஆதரிப்பதாகவும் புறக்கணிக்கப்பட்டிருந்தால் மன்னாரை உள்வாங்குமாறும் கோருவதாக உறுப்பினர் குணசீலன் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், 5 மாவட்டங்களுக்கும் முதல் தடவை சென்றிருந்தோம். இரண்டாம், மூன்றாம் தடவை நேரப் பிரச்சினை காரணமாக சில இடங்களுக்கு மாத்திரமே சென்றோம் இதனால் மன்னார் ஒதுக்கி வைக்கப்பட்டது என்பது அர்த்தமல்ல. அதுமட்டுமன்றி நாம் தற்பொழுது எமக்குத் தேவையான அபிவிருத்தி நடவடிக்கைகளையும் தேவையான நிதியையும் தருமாறும் தெரிவித்திருக்கின்றோமே தவிர இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை. எம்மால் கோரப்பட்ட 60 மில்லியன் யூரோ நிதி எமக்குக் கிடைக்கும் பட்சத்தில் எந்தப் பாரபட்ச முமின்றி நிதி பகிர்ந்தளிக்கப்படும் என்று தெரிவித்தார். (த-5-101-ரி)

# தொழிற்சாலைகளை மீண்டும் இயக்க நடவடிக்கை வேண்டும்

## கனேடியத் தூதுவரிடம் யாழ். மாவட்டச் செயலர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், செப். 24

யாழ். மாவட்டத்தில் காணப்பட்ட தொழிற்சாலைகள் அழிந்ததன் காரணமாகப் பல இளைஞர்கள் வேலை வாய்ப்பை இழந்துள்ளனர். அவை மீள இயங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.



இவ்வாறு இலங்கை மற்றும் மாலைதீவுக்கான கனேடியத் தூதுவர் ஷெல்லி வைட்டிங் கிடம் வலியுறுத்தியதாக யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்துக்குப் பயணம் மேற்கொண்ட கனேடியத் தூதுவர் யாழ் . மாவட்டச் செயலரை செயலகத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் சந்தித்துக் கலந்துரையாடினார். அதன் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது, வலி. வடக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்குடியேற்றத்தின் தற்போதைய நிலை தொடர்பிலும் தூதுவருக்கு எடுத்துக் கூறியதாக மாவட்டச் செயலர் மேலும் குறிப்பிட்டார். (த-4-ரி)

# 76 இலங்கைத் தமிழ் அகதிகள் வியாழனன்று நாடு திரும்புவர்

யாழ்ப்பாணம், செப். 24

இந்தியாவிலிருந்து 76 இலங்கைத் தமிழ் அகதிகள் எதிர்வரும் 29ஆம் திகதி நாடு திரும்பவுள்ளனர் என்று மீள்குடியேற்ற அமைச்சின் செயலர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

திருச்சியிலிருந்து 18 குடும்பங்களைச் சேர்ந்த 41 பேரும், சென்னையிலிருந்து 13 குடும்பங்களைச் சேர்ந்த 35 பேரும் 29ஆம் திகதி இரண்டு கட்டங்களாக இலங்கை வரவுள்ளனர். இவர்களில் 41 ஆண்களும், 35 பெண்களும் உள்ளடங்குகின்றனர். வவுனியா, மன்னார், மாத்தளை, முல்லைத்தீவு, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு மீள்குடியமர்வதற்காக இவர்கள் வருகை தருகின்றனர். 2011 ஆம் ஆண்டிலிருந்து இது வரை ஆயிரத்து 833 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 35 பேர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். இன்னமும் ஒரு லட்சம் பேர் வரையில் இந்தியாவில் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

தாயகம் திரும்பும் அகதிகளுக்கு வாழ்வாதார உதவியாக ஒரு லட்சம் ரூபா மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்படுகின்றது. மீளக்குடியமரும் மக்களுக்கு 6 மாத காலத்துக்கு உலர் உணவுகளும் வழங்கப்படவுள்ளன – என்றார். (த-5)

# கட்டுரை, கவிதை நூல்கள் இன்று வெளியீடு

யாழ்ப்பாணம், செப். 24

தெல்லிப்பழை கலை இலக்கியக் களத்தின் 30ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கட்டுரை, கவிதை, பாடல் நூல்கள் வெளியீடும் அறிமுகமும் இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

இணுவில் மத்திய கல்லூரி மண்டபத்தில் காலை 9 மணிக்கு ராஜி கெங்காதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் சைவப் புலவர் சு. செல்லத்துரையின் பத்தினித் தெய்வம், இறந்த பின் எங்கள் நிலைமை ஆகிய நூல்களின் அறிமுகமும், மாவை பாரதியின் ஆரண்ய வாசம் கவிதை நூல் வெளியீடும், பண்டிதர் ம.ந.கடம்பேசுவரனின் காப்பியதாசன் கட்டுரைகள் என்னும் கட்டுரை நூல் வெளியீடும், முதுதமிழ்ப்புலவர் மு.நல்லதம்பி பாடல்கள் நூல் அறிமுகமும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் மூத்த எழுத்தாளர்கள் கௌரவிப்பு, கவிதை, சிறுகதைப் போட்டிப் பரிசளிப்பு என்பனவும் நடைபெறும். (த-ரி3)

# ஏழாலை சைவ சன்மார்க்க பரிசளிப்பு இன்று

ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி பி. கிரிதரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக யாழ். பல்கலைக் கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் ஆ.நித்திலவர்ணனும், சிறப்பு விருந்தினராக உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுல குமாரனும் கலந்து கொள்வர். (த-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலம்பெயர்ந்த புத்திஜீவிகளை நாட்டுக்கு வர ரணில் அழைப்பு

## நவீன தொழில்நுட்ப யுகத்தை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குமாறும் கோரிக்கை

கொழும்பு, செப். 24

இலங்கைத் தேசத்தில் பெரிய புரட்சியை மேற்கொண்டு நவீன தொழில்நுட்ப யுகம் ஒன்றை உருவாக்குவதற்கு வெளிநாடுகளில் உள்ள இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட விஞ்ஞானிகளும் புத்திஜீவிகளும் மீளவும் நாட்டுக்கு வருகை தரவேண்டும் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

மெகா பொலிஸ் மாநகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் ஹோமாகம பிரதேசத்தில் தொழில்நுட்ப நகர துரித அபிவிருத்தித் திட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப் பட்டது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

எமது நாட்டில் பிறந்து வளர்ந்த பல விஞ்ஞானிகள் வெளிநாடுகளில் சேவை புரிகின்றனர். இவர்கள் தமது முழுத் திறமையையும் தாம் தஞ்சம் புகுந்து சேவை புரிகின்ற நாட்டுக்கே வழங்குகின்றனர். இதன்காரணமாகக் குறித்த நாடுகள் பெரிய அளவில் வளர்ச்சிக்கு உள்ளாகியுள்ளன.

குறிப்பாக எமது நாட்டவர்கள் வெளிநாடுகளில் முக்கியத்துவமிக்க பட்டம், பதவிகளுக்கும் உரிமை கோருகின்றனர். எனவே இவர்களின் திறமையை இலங்கைக்குப் பெற்றுக்கொண்டாலேயே போதுமானது. இதன்படி அமெரிக்காவில் இலங்கையைச் சேர்ந்த புத்திஜீவிகள் ,விஞ்ஞானிகள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் சேவை புரிகின்றனர். அமெரிக்காவிலுள்ள இலங்கையர்கள் மாத்திரம் வந்து ஒத்துழைப்பு வழங்கினாலே பெரிய மாற்றத்தை எம்மால் செய்து காட்ட முடியும். இதேவேளை, ஐரோப்பிய நாடுகளிலும் இவ்வாறான நிலமை காணப் படுகின்றது. பொருளாதார, விஞ்ஞானத் துறை மற்றும் நிதியியல் சார்ந்த பல்வேறு துறைகளில் புத்திஜீவிகள் ஐரோப்பியாவின் பல நாடுகளில் சேவைபுரிந்து வருகின்றனர். எனவே இலங்கையில் பிறந்து வளர்ந்து வெளிநாடுகளில் தமது திறமைகளை வெளிப்படுத்தக் கூடிய விஞ்ஞானிகள் உட்பட புத்திஜீவிகள் இலங்கைக்கு வருகை தந்து தேசிய அரசினால் முன்னெடுக்கப்படக் கூடிய நவீன தொழில்நுட்ப யுகத்தை நோக்கிய பயணத்துக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும்.

வெளிநாடுகளில் சேவைபுரிந்த புத்திஜீவிகள் பலர் தற்போது எமது நாட்டுக்கு வந்து விட்டனர். எனினும் இன்னும் பலர் வெளிநாடுகளில் உள்ளனர். இவர்கள் அனைவரும் மீளவும் இலங்கைக்கு வந்து முழுமையாக நவீன தொழில்நுட்ப யுகத்தை நோக்கிய மாற்றகரமான அபிவிருத்தித் திட்டத்துக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் – என்றார். (கு)

# தாஜுதீனின் உடற்பாகங்கள் வந்தமைக்கான பதிவில்லை

## கை விரிக்கின்றார் மாலபே மருத்துவக் கல்லூரியின் தலைவர் மருத்துவர் நெவில்

கொழும்பு, செப். 24

படுகொலை செய்யப்பட்டதாகக் கூறப்படும் வசீம் தாஜுதீனின் எந்தவொரு உடற்பாகங்களும் தமது கல்லூரிக்குக் கொண்டு வரப்பட்டதாக எந்தவொரு பதிவுகளும் இல்லை என மாலபே மருத்துவக் கல்லூரியின் தலைவர் மருத்துவர் நெவில் பெர்ணான்டோ தெரிவித்தார்.

உரிய அதிகாரிகளின் ஆவணப்படுத்தல், கண்காணிப்பு மற்றும் உறுதிப்படுத்தல்களின் ஊடாகவே உடற்பாகங்கள் தமது கல்லூரிக்கு கொண்டு வரப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

குறித்த உடற்பாக விநியோகத்தில் தமது கல்லூரிக்கு எந்தவொரு தொடர்பும் இல்லை என்பதுடன், அந்த உடற்பாகங்கள் கல்லூரியின் அருங்காட்சியகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதாகவும், அவை கற்றல் நடவடிக்கைகளுக்கு மாத்திரமே பயன்படுத்தப்படுவதாகவும் மாலபே மருத்துவக் கல்லூரியின் தலைவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும் வசீம் தாஜுதீனின் உடற்பாகங்கள் தமது கல்லூரிக்கு கொண்டு வரப்பட்டமை தொடர்பில் எந்தவொரு பதிவுகளும் இல்லை எனவும் மருத்துவர் நெவில் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு சட்டவைத்திய அதிகாரி அலுவலகத்தில் இருந்து காணாமல் போனதாகக் கூறப்படும் வசீம் தாஜுதீனின் உடற்பாகங்கள் மாலபே மருத்துவக் கல்லூரிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளமை குறித்து விளக்கமளிக்கும் வகையில் அவர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பான விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்குத் தயாராக உள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (கு)

# மதுபோதையில் வாகனம் செலுத்துவது குற்றமல்ல

## இப்படிக் கூறுகிறார் கெஹலிய

கொழும்பு, செப். 24

மதுபோதையில் வாகனம் செலுத்தியமை பெரிய ஒரு குற்றம்ல்ல என முன்னாள் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இலங்கைத் தேசிய கிரிக்கெட் அணியின் வீரரும் கெஹலிய ரம்புக்வெலவின் புதல்வருமான ரம்மித் ரம்புக்வெல மதுபோதையில் வாகனத்தைச் செலுத்தி விபத்தை ஏற்படுத்தினார் எனக் குற்றம் சுமத்தப்பட்டுக் கைது செய்யப்பட்டுப் பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பிலேயே கெஹலிய மேற்கண்ட கருத்தை வெளியிட்டார்.

கொழும்பு சுதந்திரச் சதுக்கத்துக்கு அருகாமையில் இந்த விபத்து இடம்பெற்றது.

விருந்துபசாரமொன்றில் பங்கேற்றால் மது அருந்துவது வழமையானதேயாகும் எனக் குறிப்பிட்டுள்ள கெஹலிய, இந்த விபத்தினால் எவருக்கும் காயங்கள் ஏற்படவில்லை எனவும், மதில் ஒன்றுக்குச் சிறு சேதம் ஏற்பட்டுள்ளது எனவும், வாகனத்துக்கே அதிகளவு சேதம் ஏற்பட்டுள்ளது எனவும் கூறினார்.

இலங்கை, கிரிக்கெட் சுற்றுப் பயணமொன்று மேற்கொண்டு நாடு திரும்பும்போது நடு வானில் விமானக் கதவை திறக்க முயற்சித்தமை, கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் குடிபோதையில் ஒருவரை தாக்கியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்கள் ஏற்கனவே ரம்மித் ரம்புக்வெல மீது சுமத்தப்பட்டிருக்கின்றன (கு)

# அமெ. சென்ற ஐ.தே.கவினர் குறித்து அறிக்கை கோரும் பிரதமர்

கொழும்பு, செப். 24

ஐக்கிய நாடுகள் சபையின் 71 ஆவது பொதுச் சபைக் கூட்டத் தொடரில் கலந்துகொள்வதற்கு அமெரிக்கா சென்ற ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் எவ்வாறு அனுமதி பெற்றுக் கொண்டார்கள் என்பது தொடர்பில் உடன் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்திலுள்ள சபைத் தலைவர் காரியாலயத்திடம் இந்த வேண்டுகோளை பிரதமர் விடுத்தார்.

அமெரிக்கப் பயணத்தில் கலந்துகொண்ட ஐ.தே.க. உறுப்பினர்களின் பெயர்ப் பட்டியல் ஒன்று அவசியம் எனவும், இந்த பயணத்தில் அவர்கள் மேற்கொண்ட இராஜதந்திர நடவடிக்கைகள் தொடர்பிலும் அறிக்கையொன்றை முன்வைக்குமாறும் பிரதமர் கோரியுள்ளார்.

இந்தப் பயணத்தில் இணைந்துகொண்டமை தொடர்பிலும், இதற்கு ஐ.தே.க. உறுப்பினர்கள் அனுமதி பெற்றுக் கொண்ட முறைமை உட்பட சகல விடயங்கள் பற்றியும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்றச் சபைத் தலைவர் காரியாலயப் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார். (கு)

# இலஞ்சம் கோரும் அதிபர்கள் குறித்து உடனே அறிவியுங்கள்

கொழும்பு, செப். 24

பிள்ளைகளை அரச பாடசாலைகளில் சேர்த்துக் கொள்வதற்கு நிதி மற்றும் பாலியல் ரீதியில் லஞ்சம் கோரும் அதிபர்கள் தொடர்பில் தாமதிக்காமல் 1954 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அறிவிக்குமாறு லஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைப் பிரிவின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரியந்த சந்திரசிறி அறிவித்தார்.

தற்போது 2017 ஆம் ஆண்டுக்குப் புதிய மாணவர்களைத் தரம் 1 இற்கு சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றன. இதன்போது, எந்தவொரு அதிபராவது இவ்வாறு லஞ்சம் கோரினால், உடன் அறியத் தருமாறும் பிரியந்த சந்திரசிறி கேட்டுள்ளார்.

சில பெற்றோர்கள் அதிபர்கள் கேட்கும் லஞ்சம் தொடர்பில் தகவல்களை மறைத்து வருகின்றனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த வருடங்களில் தரம் 1 இற்கு பிள்ளைகளை அனுமதிப்பதற்காக லஞ்சம் பெற்றுக் கொண்டதாகக் கூறப்படும் சுமார் 50 அதிபர்கள் ஆணைக்குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார். (கு)

# இந்திய இணை அமைச்சர் திங்களன்று கொழும்புக்கு

புதுடில்லி, செப். 24

இந்தியாவின் வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், நாளை மறுதினம் திங்கட்கிழமை இலங்கைக்குப் பயணம் மேற் கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



நாளை மறுதினம் கொழும்பு வரவுள்ள அவர், 28ஆம் திகதி வரை இங்கு தங்கியிருப்பார். வர்த்தக விவகார அமைச்சர் மலிக் சமரவிக்கிரமவை இந்திய வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் 27ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது, இந்தியா–இலங்கை இடையில் செய்து கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்பாடு குறித்து விரிவாகக் கலந்துரையாடப்படும் என்று தெரியவருகிறது.

கடந்த மாதம் 25ஆம் திகதி இந்திய வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீத்தாராமன் கொழும்பு வந்து பேச்சுக்களை நடத்தத் திட்டமிட்டிருந்தார். எனினும், புதுடில்லியில் இருந்த அவரது பணிகள் காரணமாக அவரது அந்தப் பயணம் பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யால சரணாலயத்துக்குள் ஏன் இரவில் போகிறார் அமைச்சர்?

## கேள்வி எழுப்புகிறது எதிரணி

கொழும்பு, செப். 24

யால சரணாலயம் மூடப்பட்டுள்ள நிலையில் அமைச்சர் ஒருவர் தினமும் இரவில் அங்கு செல்வதன் மர்மம் என்ன? எனக் கேள்வி எழுப்பியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. ஜானக, புதையல் வேட்டையின் ஆரம்பமா என்று மக்கள் சந்தேகம் கொள்வதாகவும் குறிப்பிட்டார்.

பத்தரமுல்லை, நெலும் மாவத்தையில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கை சுற்றுலாத்துறையில் முக்கிய வருமானத்தை ஈட்டுகின்றது. அதிலும் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 90 வீதமானோர் தென் மாகாணத்துக்குச் செல்லாமல் போக மாட்டார்கள். யால சரணாலயமே இதற்குக் காரணம். ஆனால் கடந்த பல மாதங்களாக இந்த சரணாலயம் மூடப்பட்டுள்ளது. பகலில் மூடு விழா காணும் யால சரணாலயத்துக்கு இரவு 9 மணி மற்றும் அதிகாலை 3 மணிக்கு அரசின் முக்கிய அமைச்சர் ஒருவர் செல்வது எதற்காக எனத் தெரியவில்லை.

கடந்த காலங்களில் முக்கிய சந்திஷ்டானங்கள் உடைக்கப்பட்டு புதையல் திருடப்பட்டுள்ளது. அவ்வாறான செயற்பாடுகள் யால சரணாலயத்தில் இரவில் இடம்பெறுகின்றதா என்ற சந்தேகம் தற்போது மக்கள் மத்தியில் காணப்படுகின்றது–என்றார். (கு)



# தமிழ் அன்னையின் ஆத்மாவிடை ஒளிரும் இலட்சிய ஞானம்

லோகதயாளன்

தமிழீழத்தின் உன்னத தியாக வரலாற்றை உலகெங்கும் பறைசாற்றியது அணைதல் அற்ற திலீபனின் ஆன்ம ஒளிர்தல். பல பாடங்களை உலகுக்கு இடித்துரைத்தது.அவனது தாய்த் தேச விடுதலைப் பயணத்தில் நடந்து வந்த பாதைகளின் நிஜ உருவங்கள் எங்கும் நிழலாடியது.பல கதைகளை எம்மிடையே உரையாடியது.இப்போதும் மக்கள் மனங்களிடையே உணர்வால் உரையாடிக்கொண்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஏனைய அமைப்புகளை தடை செய்கின்றனர்.அவர்களை தம்மோடு இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை என்ற பேச்சொலிகள் எங்கும் வதந்தியாக உலவியிருந்த காலமது. 1985 மற்றும் 1986 ஆம் ஆண்டு காலப் பகுதிகளே அவை.எதனையும் கருத்தூன்றி சிந்திக்கும் திலீபன் ஒரு விடுதலைப் போராளியாக இந்த விடயங்களை நேர்த்தியாக கையாண்டு கொள்ள முயற்சிக்கிறான்.1985 ஆம் ஆண்டுகளின் ஆரம்பங்களில் இயங்க ஆரம்பித்த ஆயுத இயக்கங்களில் ரெலி என ஓர் அமைப்பும் ஒன்று.அதன் தலைமையாக ஜெகன் செயற்பட ஆரம்பித்திருந்தான்.

இந்த நிலையிலே திலீபனை நாடி வந்து ஒன்றிணைவது தொடர்பில் பேசினான். இதுவிடயமாக ஆராய்வதாகவும் சொல்லி அனுப்பியிருந்தான். நீண்ட புலனாய்வு நடவடிக்கைகளின் பின்னர் அவர்கள் தொடர்பான முழுமையான தகவல்களையும் திரட்டி கிட்டண்ணாவின் கவனத்திற்கு விடயத்தினைக் கொண்டு சென்றான்.இணைந்து செயற்படுவதற்கான சம்மதம் பதிலுரையாக கிடைக்கிறது.

இந்தச் சந்தர்ப்பங்களிடையே பல சம்பவங்கள் இடம்பெற்றிருந்தன.அதில் ஒரு சம்பவம் கோட்டை முனியப்பர் ஆலயத்துக்கு அருகாமையில் நடந்திருந்தது. வீதிவழியாக ரோந்து சென்றுகொண்டிருந்த இராணுவச் சிப்பாய் ஒருவனை இனம் கண்டு கொண்ட ஜெகன் தனது வாகனத்தினை வேகமாகச் செலுத்தி சிப்பாய் மீது மோதுகின்றான். அவன் நிலை தடுமாறிய சந்தர்ப்பத்தில் எஸ்.எம்.ஜி. ரகத் துப்பாக்கியைக் கைப்பற்றி அதனை எடுத்துக் கொண்டு தப்பி ஓடுகின்றான்.

துப்பாக்கியை கையாள்வது தொடர்பான பூரண அறிவு ஜெகனுக்கு அப்போது இருந்திருக்கவில்லை.திலீபனின் உதவியை நாடினான்.அப்போதைய மன்னார் கட்டளைத் தளபதி விக்டர் அண்ணாவை அழைத்த திலீபன் துப்பாக்கியை இயக்குவதற்கான பயிற்சியினை வழங்கினான்.இதன் தொடர்நிலைகளில் ஜெகன் தலமையிலான ரெலி இயக்கத்தினை தம்மோடு இணைப்பதற்கான முயற்சியில் திலீபன் ஈடுபடுகின்றான். இந்த நிலையிலே இராணுவத்திற்கு எதிரான தாக்குல் ஒன்றை நடத்தி வெற்றி வீரர்களாக வருகின்றோம். அதற்கான பயிற்சிகளை வழங்குங்கள் என ஜெகன் தாழ்மையான வேண்டுகோளை விடுக்கிறான்.அதன்வழி பயிற்சிகளும் வழங்கப்பட்டது.திட்டமிட்ட பல தாக்குதல்களை இராணுவத்திற்கு எதிராக ஒன்றிணைந்து மேற்கொண்டனர்.அந்தச் சந்தர்ப்பங்களில் தலைமைத்துவத்தின் கீர்த்தியாக திலீபன் ஒளிர்ந்தான்.

இவ்வாறு காலத்திற்குக் காலம் போராட்ட வடிவங்கள் மாறிய போதும் இன விடுதலை இலட்சியத்தினை அடைய வேண்டும் என்பதான எண்ண வடிவத்தின் உன்னத செயல் அசைவியாக, இலக்கு வீரனாக அவன் திகழ்ந்தான். கிடைக்கும் உன்னத சந்தர்ப்பங்களை நேர்த்தியான முறையிலே கையாள வேண்டும். அதன்வழி நல் முடிவுகளை தீர்க்க தரிசனமாக எட்ட வேண்டும் என்ற தூர நோக்க சிந்தனையின் ஒத்த வடிவமாகவும் மிளிர்ந்திருந்தான். எல்லோரும் ஒன்றுபட்டு இருக்க வேண்டும்.விடுதலைக்காக் ஒன்றித்துச் செயலாற்ற வேண்டும் என்ற பேராவலை தன் கருத்தியல்களின் வெளிப்படுத்தல்களிடையே எப்போதும் கொண்டிருந்தான்.அவனது தியாகச் சாவின் இறுதிக் கணங்களும் அதனையே உலகுக்கான பாடவிதானமாக மக்கள் ஒன்று திரண்டதை எடுத்துக் காட்டியிருந்தது.இப்போதும் அவனது இலட்சிய ஞானங்கள் தமிழர் தாயகத்தின் ஆத்மாவிலே ஒளிர்ந்து கொண்டுள்ளது.அணைந்துவிடவில்லை.

# கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றும் இலங்கை

## அமெரிக்கா நம்பிக்கை

நியூயோர்க், செப். 24

இலங்கை அரசு அனைத்துலக சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றும் என்று நம்பிக்கை வெளியிட்டுள்ளது அமெரிக்கா.



நியூயோர்க்கில் ஐ.நா பொதுச் சபைக் கூட்டத்தொடரின் பக்க நிகழ்வாக, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரியை, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இந்தச் சந்திப்பின்போதே, சர்வதேசத்துக்கு அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசு நிறைவேற்றும் என்று, அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி, ஜனாதிபதியிடம் நம்பிக்கை வெளியிட்டார் என அமெரிக்க இராஜாங்கச் திணைக்களத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையிலான வலுவான உறவுகள் மற்றும் முதலாவது அமெரிக்க- இலங்கைப் பங்காளர் கலந்துரையாடல் குறித்தும், இரு நாடுகளின் தலைவர்களும் கலந்துரையாடியதாகவும் கூறப்பட்டுள்ளது. (த)

# இந்தியத் தூதுவராக தரன்ஜித்சிங் சந்து

புதுடில்லி, செப். 24

இலங்கைக்கான புதிய இந்தியத் தூதுவராக, தரன்ஜித்சிங் சந்து, நியமிக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளிவிவகார அமைச்சு நேற்று முன்தினம் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.



இவர் தமது கடமையை விரைவில் பொறுப்பேற்பார் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்தியத் தூதுவராகப் பணியாற்றும் வை.கே.சின்ஹாவின் பதவிக்காலம் முடிவடைகின்ற நிலையிலேயே, இலங்கைக்கான புதிய தூதுவரை இந்தியா நியமித்துள்ளது.

இலங்கைக்கான தூதுவராகப் பொறுப்பேற்கவுள்ள தரன்ஜித் சிங் சந்து, 2000ஆம் ஆண்டு டிசெம்பர்மாதம்தொடக்கம், 2004 செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில், கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் அரசியல் விவகாரங்களுக்கானகவுன்சிலராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# நியூயோர்க் சுகாதார மாநாட்டில் மைத்திரி

நியூயோர்க், செப். 24

ஐக்கிய நாடுகள் சபையின் 71 ஆவது பொதுச்சபைக் கூட்டத்தொடருக்குச் சமாந்தரமாக உலக சுகாதார அமைப்பு ஏற்பாடு செய்திருந்த, தொற்றா நோயை முற்றாக இல்லாதொழித்தல் மற்றும் கட்டுப்படுத்தல் தொடர்பான விசேட மாநாட்டில் நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டார்.

நிலையான அபிவிருத்தியின் குறிக்கோளை அடையும் நோக்கத்துக்காகச் சுகாதார சேவையின் இலக்குகளுக்குப் பங்களித்தல் எனும் தலைப்பில் இடம்பெற்று வரும் இந்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி கலந்து கொண்டதை வரவேற்ற உலக சுகாதார அமைப்பின் பணிப்பாளர் நாயகம் மாகிரட் சான், இலங்கையின் முன்னாள் சுகாதார அமைச்சர் என்றவகையில், இலங்கையில் சுகாதார சேவைகளை முன்னேற்றுவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட அர்ப்பணிப்புத் தொடர்பில் தன்னுடைய பாராட்டுக்களைத் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது. (த)

# உங்கள் அமைச்சு பணியை ஒழுங்காகக் கவனியுங்கள்

## அமைச்சர் அர்ஜுன ரணதுங்கவுக்கு தயாசிறி ஜயசேகர ஆலோசனை

கொழும்பு, செப். 24

துறைமுக அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தனது அமைச்சுப் பணிகளை ஒழுங்காகக் கவனிக்கவேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆலோசனை வழங்கியுள்ளார்.

எல்லாச் சந்தர்ப்பங்களிலும் விளையாட்டுத்துறை விடயங்களை விமர்சனம் செய்யாது, தனது அமைச்சின் பணிகளைச் செவ்வனே அர்ஜுன மேற்கொள்ளவேண்டுமெனத் தெரிவித்துள்ள அவர், எவ்வாறு விமர்சனங்களைச் செய்தாலும் அர்ஜுன ரணதுங்க விளையாட்டுத்துறை அபிவிருத்திக்குப் பங்களிப்பை வழங்கவில்லை எனவும் கூறியுள்ளார்.

தமது அமைச்சின் பணிகளை விடவும் விளையாட்டு விடயங்களை விமர்சிப்பதற்கே அர்ஜுன கூடுதல் நேரத்தைச் செலவிடுவதாகத் தெரிவித்துள்ள தயாசிறி ஜயசேகர, தமக்கு அவ்வாறு நேரத்தை விரயமாக்க விருப்பம் கிடையாது எனவும் கூறியுள்ளார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சிந்தித்துச் செயற்படுவது தமிழ் மக்களின் கடமை

தமிழ் மக்களின் நலன்களுக்காக இன்று ஊர்வலம் நடத்தப்படுவதாக தமிழ் மக்கள் பேரவை அறிவித்துள்ளது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனும் இதன் இணைத் தலைவராக இருக்கிறார். அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் ஆகிய கட்சிகளும் இதில் அடக்கம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு - இப்போது அது தமிழரசுக் கட்சி மட்டுமே - மைத்திரி, ரணில் தலைமையிலான கொழும்பு அரசுடன் நடத்திவரும் நிரந்தரத் தீர்வுக்கான முயற்சிகளைத் தமிழ் மக்கள் பேரவை சந்தேகிக்கிறது. கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும், நாடாளுமன்ற உறுப்பினரான எம்.ஏ.சுமந்திரனும் சேர்ந்து ஒரு அரைகுறைத் தீர்வைப் பெற்றுவிடப்போகிறார்கள் என்று கணிக்கின்றது. அதனால் அது தமிழ் மக்களைப் போராட்டம் நடத்த அழைக்கிறது.

அதற்கு முன்பாக, இந்தக் கூட்டில் உள்ளவர்கள் ஒருவரைப்பற்றி ஒருவர் என்னென்ன சொல்லிக் கொண்டார்கள் என்று பார்ப்பது அறிவார்த்தம்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் முடிந்த கையோடு அமைச்சரவைப் பங்கீட்டில் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனுக்கும் முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் முறுகல் ஏற்பட்டது. முதலமைச்சர் பக்கச்சார்பாக நடக்கிறார் என்று சுரேஷ் குற்றஞ்சாட்டினார். அவர் தன் தம்பிக்காக அமைச்சுப் பதவி கேட்கிறார் என்று பதிலடி கொடுத்தார் முதலமைச்சர்.

அதன் பின்னர் அவர் சொன்னதுதான் மிக மிக முக்கியமானது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பில், "ஈ.பி.ஆர். எல்.எவ், புளொட், ரெலோ போன்ற ஆயுதமேந்திய வன்முறைக் கட்சிகளுடன் சேர்ந்திருக்க முடியாது; ஆகவேதான் நான் தமிழரசுக் கட்சியைச் சார்ந்திருக்கிறேன்" என்றார் முதலமைச்சர். இதனை அவர் சொல்லி மூன்று வருடங்கள்கூட முழுமையாக முடிவடையவில்லை.

இதே ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் இயக்கங்களுடன் சேர்ந்து இயங்குவது குறித்து தமிழ்த் தேசிய முன்னணி (தமிழ்க் காங்கிரஸ்) ஒரு வருடத்திற்கு முன்னர் சொன்னவைகள் எமது காதுகளில் இன்னமும் ரீங்காரமிட்டுக்கொண்டிருக்கின்றன.

இலங்கை அரசுடன் ஒட்டுப்படைகளாகச் சேர்ந்தியங்கி விடுதலைப் புலிகளை அழித்த புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ்., ரெலோ இயக்கங்கள்தான் கூட்டமைப்பில் இருக்கின்றன; அவர்களுடன் எப்படிச் சேர்ந்தியங்குவது? கூட்டமைப்பைவிட்டு அவர்களை வெளியேற்றினால் நாம் அதில் இணையத் தயார் என்று தேர்தல் மேடை மேடையாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முழங்கியது. இலகுவில் மறந்து விடக்கூடிய வசனங்களா அவை?

இன்று தம் வசதிக்காக அந்த வசனங்களை எல்லாம் ஒளித்துவிட்டார்கள். ஒட்டுக் குழுக்களும், ஆயுதக் குழுக்களும் இப்போது எப்படித் தமது ஆசைக்குரிய குழுக்களாகின என்பதை முதலமைச்சராவது விளக்கிச் சொல்லியிருக்கலாம், அல்லது முன்னணியோ அந்தக் குழுக்களோகூட எடுத்துச் சொல்லியிருக்கலாம். எதுவும் நடக்கவில்லை.

இப்படிச் சந்தர்ப்பவாதிகளாக நடப்பவர்களை நம்பித் தமிழ் மக்கள் எப்படிப் பின்னால் போக முடியும்? தமிழரசுக் கட்சிதான் சரி என்று சொல்லிக்கொண்டு நாளை அங்கே போய் ஒட்டிக்கொள்ள மாட்டார்கள் என்று நம்புவதற்குமில்லை. இத்தகைய சந்தர்ப்பவாத மண் குதிரைகளை நம்பி ஆற்றில் கால்களை வைக்கலாமா என்பதைத் தமிழ் மக்கள் நன்றாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.



# அமைச்சர் மகிந்த அமரவீரவுடனான நேர்காணல்

எம்.ஐ.முபாறக்

தேசிய அரசைக் கலைத்துவிட்டு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் ஒன்றிணைந்து ஆட்சி அமைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும்-அது தொடர்பில் இரகசியப் பேச்சுக்கள் இடம் பெறுகின்றன என்றும்-பரப்பப்படும் செய்திகளில் எந்தவித உண்மையும் இல்லை என்று- ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

தெற்கிலோ, வடக்கிலோ, அடிப்படைவாத-பிரிவினைவாத சிந்தனைகொண்ட எவருடனும் சுதந்திரக் கட்சி கூட்டுச் சேராது என்றும் அவர் கூறினார்.

சிங்களத் தொலைக்காட்சி ஒன்றில் இடம்பெற்ற அரசியல் நேர்காணல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.அந்த நேர்காணலில் அவரால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**கேள்வி:** குருநாகலில் இடம் பெற்ற சுதந்திரக் கட்சியின் 65 ஆவது மாநாடு வெற்றியாக அமையவில்லை என்று சொல்லப்படுகின்றதே?

**பதில்:** குருநாகலின் வரலாற்றில் இடம்பெற்ற பொது நிகழ்வுகளில் அதிக அளவிலான மக்கள் கலந்து கொண்ட நிகழ்வு அதுதான் என்று அந்த மாவட்ட மக்களே கூறுகின்றனர்.இத்தனை லட்சம் மக்கள் கலந்துகொண்டனர் என்று நான் சொல்லமாட் டேன். ஆனால்,நிகழ்வு இடம்பெற்ற இடம் நிரம்பி வழியும் அளவுக்கு மக்கள் கலந்துகொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேடைக்குள் நுழைய முடியாதவாறு மக்கள் வெள்ளம் அலை மோதியது.நூற்றுக்கணக்கான பஸ்களில் எல்லா ஊர்களில் இருந்தும் வந்து மக்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டில் கலந்துகொள்வதில்லை என்று இரண்டு கைகளையும் உயர்த்தித் தீர்மானம் நிறைவேற்றிய கூட்டு எதிர்க்கட்சிகளின் உறுப்பினர்கள் சிலரும் மாநாட்டுக்கு வருகை தந்திருந்தனர். அவர்களை நான் சந்தித்து இது பற்றிக் கேட்டபோது, "நாங்கள் ஒரு கையைத்தான் உயர்த்தினோம்; இரண்டு கைகளையும் அல்லவே" என்று கூறினர். ஆனால், மாநாட்டின் வெற்றியைப் பொறுக்க முடியாதவர்கள் போலிக் கதைகளை அவிழ்த்து விடுகின்றனர். அவ்வாறு கூறுபவர்கள் எவர் என்று அனைவருக்கும் தெரியும். அரசியல் வங்குரோத்து நிலையை அடைந்துள்ளவர்களின் கதையை எவரும் பெரிதாக எடுக்கத் தேவை இல்லை.

**கேள்வி:** இந்த ஆட்சிக்கு எதிராக நிற்பவர்கள் குறிப்பாக, மகிந்த தரப்பினர் ஊழல்,மோசடி குற்றச்சாட்டின் பேரில் தொடர்ந்தும் கைது செய்யப்படுகின்றனர்.இது அரசியல் பழி வாங்கல் என்று சொல்லப்படுகின்றதே.?

**பதில்:** கைது செய்யப்படுகின்றவர்கள் எம்முடன் ஒன்றாக இருந்து அரசியல் செய்தவர்கள். அனைவரும் நண்பர்கள். அவர்கள் இவ்வாறு கைது செய்யப்படுவதை நான் விரும்பவில்லை. இதையிட்டு நான் மிகவும் கவலையடைகின்றேன்.

ஆனால்,குற்றம் செய்தவர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் தண்டிக்கப்படத்தான் வேண்டும். இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து தேசிய அரசை அமைத்ததன் நோக்கம்கூட திருடர்களை பிடிக்க வேண்டும்; மற்றும் இனிமேல் திருட்டு இடம் பெறாது தடுக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

இந்த அரசு நீதித்துறையில் தலையீடு செய்வதில்லை.பொலிஸாரைக் கட்டுப்படுத்துவதில்லை. பொலிஸாருக்கு வழங்கப்பட வேண்டிய சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளது.இதனால் சட்டம் அதன் கடமையைச் செய்கிறது.


எமது நண்பர்கள் இவ்வாறு கைது செய்யப்படுவது எமக்குக் கவலைதான்.ஆனால், எம்மால் எதுவும் செய்ய முடியாது. அரசியல் தலையீடுகளை மேற்கொள்ள முடியாது.

குமார் குணரட்ணம் செய்த குற்றம் ஒன்றுக்காக நீதிமன்றம் அவருக்குத் தண்டனை வழங்கியுள்ளது. அதே குற்றத்தைச் செய்த விமல் வீரவன்சவுக்கு தண்டனை இல்லை.

அதேபோல் வாகன மோசடி செய்தவர்கள் சிறையில்.அதே மோசடியைச் செய்த விமல் வீரவன்ச வெளியில். இவ்வாறு விமல் வீரவன்ச இந்த அரசிலும் சலுகைகளைப் பெறுகிறாரா என்ற சந்தேகமும் எனக்கு எழுகின்றது. இது தொடர்பில் நான் தேடிப்பார்க்கிறேன்.

**கேள்வி :** இரண்டு வருடங்களுக்கு மாத்திரமே தேசிய அரசை நிர்வகிப்பது என்ற தீர்மானம் ஐந்து வருடங்கள் என்று மாற்றப்பட்டது ஏன்?

**பதில் :** இரண்டு வருடங்கள் என்றுதான் ஒப்பந்தம் செய்தோம்.ஆனால்,வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இது தொடர்பில் கலக்கமடையத் தொடங்கி விட்டனர்.இரண்டு வருடங்களுக்கு மாத்திரம்தான் எமது முதலீடு செல்லுபடியாகுமா? இரண்டு வருடங்களின் பின் எந்த அரசு பதவிக்கு வரும்? எமது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரக் கட்சியுடன் இணைகிறதா

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு?

"குமார் குணரட்ணம்செய்த குற்றம் ஒன்றுக்காக நீதிமன்றம் அவருக்குத் தண்டனை வழங்கியுள்ளது. அதே குற்றத்தைச் செய்த விமல் வீரவன்சவுக்கு தண்டனை இல்லை. அதே போல் வாகன மோசடி செய்தவர்கள் சிறையில்.அதே மோசடியைச் செய்த விமல் வீரவன்ச வெளியில். இவ்வாறு விமல் வீரவன்ச இந்த அரசிலும் சலுகைகளைப் பெறுகிறாரா என்ற சந்தேகமும் எனக்கு எழுகின்றது.இது தொடர்பில் நான் தேடிப் பார்க்கிறேன்.

முதலீட்டுக்கு என்ன நடக்கும் என்ற கேள்விகளைத் தொடுக்கத் தொடங்கினர்.
வெளிநாட்டுத் தூதுவர்கள்கூட இது தொடர்பில் அச்சமடைந்தனர்.இதனால் நாம் ஐந்து வருடங்களுக்கு தேசிய அரசை நீடிப்பதற்குத் தீர்மானித்தோம்.நாட்டின் நன்மை கருதியே இந்தத் தீர்மானத்தை எடுத்தோம்.
வரலாற்றில் முதல் தடவையாக இருபெரும் கட்சிகளும் இணைந்து தேசிய அரசை உருவாக்கி இருக்கின்றன. இதனால் நல்லதொரு நிலைமை இந்த நாட்டில் ஏற்பட்டிருக்கின்றது. இதனை ஐந்து வருடங்களுக்கு நீடிப்பதன்மூலம் இந்த நாடு மேலும் பல நன்மைகளை அடையும்.

**கேள்வி:** சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சேர்ந்து ஆட்சி அமைக்கப் போவதாகக் கதை அடிபடுகிறதே?

**பதில் :** அதில் எந்தவித உண்மையும் இல்லை.எமக்கு எதிரான கட்டுக் கதைகளில் இதுவும் ஒன்று. இது தொடர்பில் இரகசியப் பேச்சுக்கள் இடம்பெற்றன என்று கூறப்படுவதும் பொய். ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் செயலாளராகிய எனக்குத் தெரியாமல் எப்படி பேச்சுக்கள் இடம்பெறும்?
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைக்கு உடன்படுகின்ற கட்சிகளை மாத்திரமே நாம் சேர்த்துக்கொள்வோம்.தெற்கிலோ, வடக்கிலோ பிரிவினைவாதத்தை-அடிப்படைவாதத்தைக் கொண்டிருப்பவர்களை நாம் சேர்த்துக் கொள்ளமாட்டோம்.

**கேள்வி :** இனிவரும் தேர்தல்களில் சுதந்திரக் கட்சியின் சின்னமான கைச் சின்னத்தில்தான் போட்டியிடுவதென்று தீர்மானித்ததன் நோக்கம் என்ன?

**பதில் :** எமது கட்சி அதை விரும்புகிறது. பொதுஜன ஐக்கிய முன்னணியாக இருந்தபோது கதிரைச் சின்னத்தில் போட்டியிட்டோம்.ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பாக மாறியபோது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிட்டோம். இப்போது சுதந்திரக்கட்சியின் சின்னமான கையில் போட்டியிட விரும்புகிறோம்.
இது ஒரு யோசனை மட்டும்தான். இறுதித் தீர்மானம் அல்ல. இந்த யோசனையை எமது கூட்டணிக் கட்சிகளுக்கு அறிவிப்போம். அவர்கள் விரும்பினால் கைச் சின்னத்தில் போட்டியிடுவோம்.

**கேள்வி :** தேசிய அரசு மீது அதிருப்தியடைந்துள்ள சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் பலர், தமது அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்துவிட்டு கூட்டு எதிர்க்கட்சியில் அதாவது மகிந்த தரப்பில் இணையப் போவதாகத் தெரிவிக்கப்படுகிறதே?

**பதில் :** அப்படியான சம்பவம் எதுவும் நடக்காது.தேசிய அரசு தொடர்பில் நாம் அனைவரும் திருப்தியடைகிறோம்.மகிந்த தரப்பில் இருப்பவர்களுள் அதிகமானவர்கள் இன்னமும் சுதந்திரக் கட்சியை நேசிப்பவர்கள். அங்கிருந்து இங்கு வருவார்களே தவிர இங்கிருந்து அங்கு செல்லமாட்டார்கள்.
தேசிய அரசின் உருவாக்கத்தைத் தடுப்பதற்கு முயற்சித்தவர்களே மகிந்த தரப்பில் இருக்கும் இரண்டு முக்கியஸ்தர்கள்தான். கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி 106 ஆசனங்களையும் சுதந்திரக் கட்சி 95 ஆசனங்களையும் பெற்றன. இதனால் ஐக்கிய தேசியக் க்ட்சிக்கு தனித்து ஆட்சி அமைக்க முடியாமல் போனது.
அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்கள் ஆறும், இராஜாங்க அமைச்சுக்கள் இரண்டும், பிரதி அமைச்சுக்கள் மூன்றும், தந்தால் ஐக்கிய தேசியக் கட்சி தனித்து ஆட்சி அமைப்பதற்கு ஆதரவு தருவோம் என்று-அந்த இருவரும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் பேச்சு நடத்தினர்.அந்த முயற்சி வெற்றியளிக்காததால் இப்போது தேசிய அரசை அவர்கள் குறை கூறுகின்றனர்.

**கேள்வி:** சுதந்திரக் கட்சியின் அடுத்த இலக்கு என்ன?

**பதில் :** 2020 இல் தனித்து ஆட்சி அமைப்பதுதான்.

## வடமராட்சி வடக்குக் கலாசார மண்டப நிர்மாணப் பணி தாமதப்படுவதேன்?

ஆத்தியடி இளைஞர் கல்வித் தேர்ச்சிச் சங்கத்தின் (Y.M.C.A) பழைய மண்டபம் அமைந்த காணி கலாசார மண்டபம் அமைப்பதற்கென, ஆத்தியடிப் பிள்ளையார் கோயில் தர்ம பரிபாலன சபையினால் குத்தகை அடிப்படையில் நீண்ட காலத்துக்கு முன்னர் வழங்கப்பட்டது.
இன்றுவரை இந்தப் பணி பூர்த்தியடையவில்லை. நிர்வாகம், கொள்முதல், பராமரிப்பு போன்ற விடயங்கள் தொடர்பான நடவடிக்கைகள் யாவும் தீர்மானிக்கப்பட்டு விட்டதாகக் கேள்வியுறுகின்றோம்.
வடமராட்சி வடக்கின் கலாசார நிகழ்வுகள் பருத்தி நகரில் சிறப்புற அரங்கேற உரிய பிரதேச நிர்வாகம் தேவையான நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டி நிற்கிறோம்.

வ.சி.ஸ்ரீஸ்கந்தராசா
ஆத்தியடி, புலோலி.

## விபத்துக்களைத் தடுப்போம்

அதிகரித்து வரும் வீதி விபத்துக்களினால் பல உயிர்களை நாம் இழந்து கொண்டு வருகிறோம். இடம்பெற்று வரும் விபத்துக்களுக்குப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டாலும், ஒரு காரணம் மட்டுமே செய்திகளில் முக்கியத்துவம் பெறுகிறது. வேகக் கட்டுப்பாட்டை இழந்ததால் ஏற்பட்ட விபத்து என்பதே அது. தனியார் பஸ்ஸும், அரச பஸ்ஸும் ஒன்றை ஒன்று முந்திச் செல்வதற்கு முயல்வதால் ஏற்படும் விளைவே இத்தகைய அவசியமற்ற விபத்துக்களாகும்.
பல உயிர்களைக் காக்க வேண்டிய ஒரு மருத்துவரின் உயிரை அண்மையில் பறித்தது அதிவேகமல்ல. அலட்சியப் போக்குடன், கவனமின்றி வாகனம் செலுத்தப்பட்டமையே. மோட்டார் சைக்கிள்களில் வலம் வரும் இளவட்டங்கள் வீதிகளில் பல சாகசங்கள் புரிகின்றனர். கையைவிட்டு விட்டு ஓடுதல், வரிசையில் செல்லுதல், ஒரு மோட்டார் சைக்கிளில் ஐவர் பயணித்தல் எனப் பல தவறுகளை மேற்கொள்கின்றனர்.
எமது போக்குவரத்துப் பொலிஸாரும் எத்தனை நாளைக்குத்தான் இவர்களுக்கு விதிமுறைகள் குறித்து எடுத்து விளக்குவார்கள். வாகனம் ஓட்டும் ஒழுங்குமுறை தெரியாத சாரதிகள் கூட வாகனம் ஓட்டுவதைக் காணமுடிகின்றது. முன்பெல்லாம் தூரப் பயணத்துக்கு ஒரு வாகனத்தை ஓட்டிச்செல்ல இரண்டு சாரதிகள் இருப்பார்கள்.
தற்போது தூக்கக் கலக்கத்தில் விபத்து நடந்தது என்ற செய்தி வருகின்றது. இடம்பெற்று வரும் விபத்துக்கள் குறைவதாகக் காணப்படவில்லை. எனவே போக்குவரத்துத் துறைசார் அதிகாரிகளும், பொலிஸாரும், அதிகரித்து வரும் விபத்துக்களைக் குறைக்க ஆவன செய்ய வேண்டும் என்பது பொதுமக்களின் வேண்டுகோளாகும். பொதுமக்களும் வீதி ஒழுங்கைக் கடைப்பிடித்து சட்டத்துக்கு அமைவாக நடந்து உயிரிழப்புக்களைத் தடுக்க ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

ந.மரியநாயகம்
கொழும்புத்துறை

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதுபவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எகிப்துக் கடலில் அகதிகள் படகு விபத்து 51 பேர் சாவு: 300 பேரைக் காணவில்லை



கெய்ரோ, செப்.24
எகிப்திய கடற்கரை நகரமான றொசெற்றாவில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் அகதிகள் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 51 பேர் சாவடைந்தனர். 163 பேர் மீட்கப்பட்டனர். கிட்டத்தட்ட 300 பேரைக் காணவில்லை.
றொசெற்றோ நகரிலிருந்து எகிப்தியர்கள், சூடானியர்கள், எத்தியோப்பியர்கள், சிரியர், ஈரானியர் என பல நாடுகளையும் சேர்ந்த கிட்டத்தட்ட 500 இற்கும் அதிகமான அகதிகளை ஏற்றிக்கொண்டு இத்தாலியை நோக்கிப் புறப்பட்ட படகே அவ்வாறு விபத்துக்குள்ளானது. சம்பவ இடத்தில் 51 பேர் சாவடைந்தனர். கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த அகதிகளில் 163 பேரை எகிப்திய மீனவர்கள் காப்பாற்றினர். கிட்டத்தட்ட 300 இற்கும் அதிகமானோரைக் காணவில்லை. எனவே உயிரிழப்பு அதிகரிக்கலாம் என்று அச்சம் வெளியிடப்பட்டது. அகதிகளைக் கொண்டுசென்ற நால்வர் மனிதக் கடத்தல் குற்றத்துக்காக பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். 2014 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 10 ஆயிரத்துக்கும் அதிகமான அகதிகள் இவ்வாறு படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாவடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-ரி4)

# சீனா–பாக். நட்பைப் பிரிக்க இயலாது

## சீனப் பிரதமர்

பாகிஸ்தானுடன் சீனா கொண்டிருக்கும் நட்புறவைப் பிரிக்க முடியாது என்று சீனப் பிரதமர் லி கெகியாங் தெரிவித்தார்.
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்சபைக் கூட்டம் நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது. இதன்போது சீனப் -பிரதமர் லி கெகியாங்,



பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரிப் இருவரும் சந்தித்துப் பேசியுள்ளனர். இதனையடுத்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே கெகியாங் இவ்வாறு தெரிவித்தார்.
சீனாவும் பாகிஸ்தானும் எப்போதும் ஒன்றுக்கொன்று பரஸ்பர உதவி செய்துகொள்ளும் நாடுகள். சீனா - பாகிஸ்தான் உறவைப் பிரிக்க முடியாது.
பாகிஸ்தானின் வளர்ச்சிக்கு அனைத்து வகையிலும் சீனா உறுதுணையாய் இருக்கும்.
காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தானின் நிலைப்பாட்டை சீனா ஆதரிக்கிறது. இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் விரிசலை சரி செய்ய சீனா உதவும் என்று கெகியாங் மேலும் தெரிவித்தார். (ம-ரி4)



# தொட...
# சிரிய...

## சமாதான உ...

டமஸ்கஸ், செப். 24
சிரிய விவகாரத்தைத் தீர்மானிக்கும் இரு...
சக்திகளான அமெரிக்கா, ரஷ்யா நாடுக...
இடையே நடைபெற்ற சமாதான உட...
கைக்கான பேச்சுவார்த்தை தோல்வியில்...
ததையடுத்து சிரிய அரசு தரப்பு-ஆயுதக்...
கள் இடையிலான போர் மீண்டும் ஆரம்பம...
நிகழ்கால உலகின் போர்க்களம் என ...
விவரிக்கப்படும் அளவுக்கு அங்கு தற்...
போர்கள் நடைபெற்று வருகின்றன. ...
ஜனாதிபதியான அசாத்தைப் பதவி நீ...
செய்யும் முனைப்பில் தோற்றம்பெற்ற ...
சிக்குழு படிப்படியாக ஆயுதக்குழுவாக ம...
பெற்றது. இதனால் சிரிய அரசு–அரசுக்...
ரான கிளர்ச்சிக் குழு ஆகியவற்றுக்கு இ...
நீண்டகாலமாக உள்நாட்டுப் போர்கள் ...
பெற்று வருகின்றன. அரசுக்கு ஆத...
ரஷ்யாவும், கிளர்ச்சிக் குழுவுக்கு ஆத...

# கரோலினாவில் ஊரடங்கு சட்டம் மக்கள் போராட்டத்தின் எதிரொலி




வொஷிங்ரன், செப். 24
அமெரிக்காவின் வட கரோலினா பகுதியில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கறுப்பினத்தவரைச் சுட்டுக் கொன்றதை அடுத்து அங்கு கடும் பதற்ற நிலை நிலவுகிறது. இதனையடுத்து குறித்த பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
வட கரோலினா பகுதியில் இந்த வார ஆரம்பத்தில் கறுப்பினத்தவர் ஒருவர் பொலிஸாரால் காரணம் ஏதுமின்றிக் கொல்லப்பட்டார். சமீப காலங்களாக கறுப்பினத்தவர்களின் கொலைகளுக்கு எதிராக பல்வேறு தரப்பட்ட போராட்டங்களும் அமெரிக்காவில் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில், தற்போது இடம்பெற்ற சம்பவம் மக்களின் ஆதங்கத்தை மேலும் தூண்டியுள்ளது. இதனையடுத்து வடகரோலினா பகுதியில் பொலிஸாருக்கு எதிராக கடந்த மூன்று தினங்களாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் இதில் பங்கெடுத்து வருகின்றனர். பொலிஸார் தடியடி நடத்தியும், கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும் ஆர்ப்பாட்டக் காரர்களை விரட்டிவிட முடியவில்லை. இதனால் குறித்த பகுதியில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ம-ரி4)

# ஜப்பானில் நிலநடுக்கம்

ஜப்பானில் கடலுக்கடியில் நேற்று அதிகாலை நிலநடுக்கம் ஏற்பட்டது. டோக்கியோ பகுதியிலிருந்து 226 கிலோ மீற்றர் தொலைவில், 10 கிலோ மீற்றர் ஆழத்தில் உள்ள கடல் பரப்பிலேயே இந்த நில அதிர்வு உணரப்பட்டதாக பசுபிக் பிராந்திய சுனாமி எச்சரிக்கை நிலையம் தெரிவித்தது. 6.4 ரிச்டர் அளவில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால் சுனாமி உட்பட எந்தவித பாதிப்பும் ஏற்படாது எனவும் குறித்த அமைப்பு மேலும் தெரிவித்தது. (ம-ரி4)

# ஆடம்பரத் தோற்றத்துடன் அகதிகளிடம் செவ்வி; வேலையைப் பறிகொடுத்தார் ஊடகவியலாளர்

பீஜிங், செப்.24
சீனாவில் பெண் ஊடகவியலாளர் ஒருவர் ஆடம்பரத் தோற்றத்துடன் சென்று அகதிகளைச் செவ்வி எடுத்தமைக்காக வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.
சீனாவை கடந்த சில நாள்களுக்கு முன்னர் மெறாண்டி என்ற புயல் தாக்கியது. இதனால் ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்து தற்காலிக குடியிருப்புக்களில் தங்கவைக்கப்பட்டனர். அவ்வாறு பாதிக்கப்படட மக்களைச் சந்திக்கச் சென்ற பெண்



ஊடகவியலாளர் ஒருவர், கூலிங் கிளாஸ், வர்ணக் குடை, முக ஒப்பனை என ஆடம்பரத் தோற்றத்துடன் செவ்வி கண்டார். இது ஒரு தொலைக்காட்சி நேரலை நிகழ்ச்சியென்பதால் குறித்த ஊடகவியலாளர் ஏகப்பட்ட மக்களின் கவனத்துக்கு இலக்கானார். மிகவும் வேதனையில் இருக்கும் மக்களிடம் இவ்வாறா சென்று செய்தி சேகரிப்பது என பலரும் அவரை விமர்சித்தனர். இத்னை அடுத்து குறித்த தொலைக்காட்சி நிறுவனம் அவரை வேலையிலிருந்து நீக்கியது.
எமது விதி முறைகளை அவர் மதிக்கவில்லை. அவரது சொகுசு உடைகளுக்கும் எமக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. அவரது செயற்பாட்டுக்கு எம்மைச் சாட வேண்டாம் என அந்த நிறுவனம் தெரிவித்தது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தற்காலிக போர் நிறுத்த காலப்பகுதியில் போரின் எச்சத்திலிருந்து தனது நகரைப் பார்வையிடும் சிரியச் சிறுவன்

# டர்கதையாகிறது
# யாவின் அவலம்
## ன உடன்படிக்கை கைவிடப்பட்டது

க்கும் இருபெரும் யா நாடுகளுக்கு தான உடன்படிக் தால்வியில் முடிந் பு–ஆயுதக்குழுக் ம் ஆரம்பமானது. ளம் என சிரியா அங்கு தற்போது கின்றன. சிரிய ப் பதவி நீக்கம் றம்பெற்ற கிளர்ச் குழுவாக மாற்றம் ரசு–அரசுக்கு எதி ற்றுக்கு இடையில் போர்கள் நடை க்கு ஆதரவாக வுக்கு ஆதரவாக அமெரிக்காவும் செயற்பட்டு வருகின்றன.

ஈராக் மற்றும் சிரியா நாடுகளின் சில பகுதிகளைக் கைப்பற்றி அவற்றை ஓர் தனிநாடாக பிரகடனம் செய்த ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பும் அங்கு நிலை கொண்டுள்ளது. இந்த அமைப்புக்கு எதிராக உலக நாடுகள் பலவும் போர் புரிகின்றன. இத னால் குண்டு மழையால் சிரியா நனைகிறது.

இந்த இருமுனைப் போரையும் சேர்த்து இதுவரை மூன்று இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் சாவடைந்துள்ளனர். எனவே சிரிய அரசு–அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழு இரண் டுக்கும் இடையில் சமாதான உடன்படிக்கை மேற் கொள்ளப்பட வேண்டும். இதற்கு அமெரிக் காவும் ரஷ்யாவும் ஒத்துழைக்க வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியது. நீண்ட காலத்துக்குப் பின்னர் அண்மையில் ஒரு தற் காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. சிரியக் குழந்தைகள் தமது வீடுகளை விட்டு வெளியே வந்து போரின் எச்சங்களிடையே விளையாடுவது போன்ற படங்கள் வெளியாகி உலகை உலுக்கின. எதுஎப்படியோ ஒருவழியாக சிரியாவுக்குள் கொஞ்சமாவது அமைதி திரும்பு கிறது என்று கருதப்பட்ட நிலையில் அமெரிக் காவும், ரஷ்யாவும் சாமாதான ஒப்பந்தத்தை கைவிடுவதாக அறிவித்தன. இருநாடுகளும் ஒன்றுக்கொன்று விதித்த நிபந்தனைகளை இரண்டுமே ஏற்றுக்கொள்ளாத நிலையிலேயே இந்த ஒப்பந்தம் கைவிடப்பட்டது.

இதனையடுத்து ஆயுதக்குழுவின் கட்டுப்பாட் டில் இருக்கும் அலப்போ நகரை (2 இலட்சத்து 50 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள்) மீட்க ரஷ்யா வின் உதவியுடன் சிரிய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

நேற்றுமுன்தினம் நடத்தப்பட்ட தாக்குதலில் நகரின் பிரதான நீர் வழங்கி தகர்க்கப்பட்டதுடன் 20 பேர் சாவடைந்தனர். (ம–ரி4)



பிரிட்டனில் முற்றுமுழுவதுமாகக் கண்ணாடியைப் பயன்படுத்தி கண்காட்சியொன்று இடம்பெற்றது. பல்வேறு தள நிலைகள், வடிவமைப்புகள், கட்டுமானங்கள் என விஞ்ஞானமும், கலையும் சேர்ந்த கலவையாக குறித்த கண்காட்சி இருந்ததாக அதைப் பார்வையிட்டவர்கள் தெரிவித்தனர். (ம–ரி4)

அமெரிக்காவில்

# ஆபத்தை எதிர்நோக்கியுள்ள உயிரினங்களில் தேனீக்கள்

வொஷிங்ரன், செப். 24

அமெரிக்காவில் அதிக ஆபத்தை எதிர்நோக்கியுள்ள உயிரினங் களின் பட்டியலில் தேனீக்களும் உள்ளடங்கவுள்ளன.

அமெரிக்காவில் சிகா வைரஸ் பரவி வருவதால் குறித்த வைரஸைப் பரப்பும் நுளம்புகளை கொல் வதற்காக மருந்துகள் பரவலாக விசிறப்பட்டன. இந்த மருந்து களின் விளைவால் மில்லியன் கணக்கான தேனீக்கள் உயிரிழந் தன என்று சொல்லப்படுகிறது. இதைத்தவிர 1990 ஆம் ஆண்டி லிருந்து தற்போதுவரை ஏற்பட் டுள்ள பருவமாற்றம், இயற்கை இடர் கள், நோய்கள் என்பனவும் தேனீக் களின் அழிவுக்குக் காரணம் என அமெரிக்க கடல், வன உயி ரியல் துறையினர் தெரிவித்தனர். இத னால் எதிர்வரும் நவம்பர் மாதம் முதல் அமெரிக்காவில் அருகி வரும் உயிரினங்கள் பட்டியலில் தேனீக் களையும் சேர்க்கப் பரிந்துரை செய்யவுள்ளோம் என குறித்த அமைப்பு மேலும் தெரிவித்தது.

அமெரிக்காவில் விவசாயத்தில் தேனீக்கள் அதிக பங்கு வகிக்கின் றன. குறிப்பாக பாதாம் பருப்பு உற் பத்தியில், மகரந்தச் சேர்க்கைக் காக தேனீக்களைக் களத்துக்கு எடுத்துச் செல்வார்கள். எனவே தேனீக்களின் இழப்பு இவ்வாறான விவசாய நடவடிக்கைகளை மந் தமாக்கும் என அஞ்சப்படுகிறது. (ம–ரி4)



சீனா

# பாதுகாப்புக் கடமையில் பொலிஸ் ரோபோக்கள்


பீஜிங், செப். 24

சீனாவில் முதல் முறையாக பாதுகாப்புக் கடமையில் ரோபோக்கள் ஈடுபடுத்தப்பட்டன. பொலிஸ் ரோபோக்கள் என அழைக்கப்படும் அவை, ஸென்சென் விமானநிலையத்தில் கடமையாற்ற ஆரம்பித்துள்ளன. ரோபோக்களின் 4 பக்கங்களிலும் டிஜிட்டல் கமராக்கள் பொருத்தப்பட்டுள் ளன. பொது மக்களின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கவும், முகஅடையா ளங்களைப் பகுத்தறியவும், புலனாய்வு நடவடிக்கையில் ஈடுபடவும், அவசர நேரங்களில் உத வவும் இவை வடிவமைக் கப்பட்டுள்ளன. கடமையில் ஈடுபட்ட ரோபோக்களை பொதுமக்கள் ஆர் வத்துடன் பார்வை யிட்டனர். (ம–ரி4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்கள் கண்களின் நிறம்



## உங்களைப் பற்றி என்ன சொல்கிறது?

ஒருவரின் உடலில் தோற்றத்தை அழகுப்படுத்திக் காட்டுவதில் முக்கிய பங்கை வகிக்கிறது கண்கள். ஒருவரின் ஆத்மாவின் ஜன்னல்களாக கண்கள் விளங்குகின்றன எனவும் சொல்லப்படுகிறது. ஆத்மாவைப் போலவே அனைவருக்குமே ஒரே நிறத்திலான கண்கள் இருப்பதில்லை. ஒருவரின் உணர்ச்சிகளை கண்கள் சிறப்பாக வெளிப்படுத்தும். அவரின் மனநிலையையும் அது தெளிவாக வெளிக்காட்டும். நம் கண்களின் மூலமாகவே அன்பு, பாசம், கவனிப்பு, காதல், அலட்சியம், வெறுப்பு என பல விதமான உணர்வுகளைக் காட்டலாம்.

**பழுப்பு நிறக் (பிரவுன்) கண்கள்** - பலருக்கும் உள்ள பொதுவான கண்களின் நிறம் பழுப்பே. மற்ற நிற கண்களைக் கொண்டவர்களை விட இவர்கள் நல்ல குணத்துடன் பாசமிக்கவராக இருப்பார்கள். ஈர்க்கும் படியாக இவர்கள் இருப்பார்கள். இவர்களுடன் சுற்றுவது மிகவும் சந்தோசத்தை அளிக்கும். நடக்க போவதை எண்ணி அவர்கள் மிகவும் அரிதாகவே கவலை கொள்வார்கள். அதே மாதிரி நண்பர்களை அமைத்துக் கொள்வதிலும் அவர்கள் வல்லவர்களாவார்கள்.

**சாம்பல் நிறக் கண்கள்** - சாம்பல் நிறக் கண்களைக் கொண்டவர்கள் அமைதியானவர்களாக, புத்திசாலித்தனமாக மற்றும் ஒழுக்கத்துடன் இருப்பார்கள். முக்கால் வாசி எதையும் அவர்களுக்குள் வைத்துக் கொள்வார்கள். ஆனால், மிகவும் நம்பிக்கைக்கு பாத்திரமானவர்களாக விளங்குவார்கள். சாம்பல் நிறக் கண்களைக் கொண்டவர்கள். அவர்களின் உட்புறவலிமை, பகுத்தறிவு சிந்தனை போன்றவற்றைப் பேசுவார்கள். அவர்கள் மிகப்பெரிய தலைவர்களாக மாறுவார்கள்.



**கருப்பு நிறக் கண்கள்** - இந்த நிறக் கண்கள் பொதுவான ஒன்றாக கருதப்பட்டாலும் கூட இவை அரிதான ஒன்றே. கருப்பு நிறக் கண்களைக் கொண்டவர்கள் ரகசியமிக்கவர்களாகவும், எளிதில் உணர்ச்சிக்கு ஆட்பட்டவர்களாகவும் இருப்பார்கள். எளிதில் யாரையும் நம்பி விடமாட்டார்கள். ஆனால் நண்பராகி விட்டால், அவர்களை கண்டிப்பாக நம்பலாம். பொறுமை இல்லாதவர்களாக இருந்தாலும் கூட நேர்மறையான நம்பிக்கை அதிகளவில் இருக்கும்.

**பச்சை நிறக் கண்கள்** - பச்சை நிறக் கண்களைக் கொண்டவர்கள் புத்திசாலியாக இருப்பார்கள். ஓர் உறவில் அவர்கள் எளிதில் உணர்ச்சிக்கு ஆட்பட்டவர்களாக இருப்பார்கள். நண்பர்களாக இருக்கும்போது, ஒரு கோமாளியாக இருந்து உங்களை வயிறு வலிக்கச் சிரிக்க வைப்பார்கள். முழுமையான வாழ்க்கையை வாழ அவர்கள் ஆசைப்பட்டாலும் கூட, அதிகமான பொறாமைக் குணத்துடனும் இருப்பார்கள்.

**நீல நிறக் கண்கள்** - உலகத்தில் பலருக்கும் பிடித்த கண்களின் நிறம் என்றால் அது நீல நிறம் தான் என வாக்குவாதமே இல்லாமல் சொல்லி விடலாம். பொதுவாகவே நீல நிறக் கண்களைக் கொண்டவர்கள் அழகாகவும், அன்பாகவும், அறிவாளியாகவும் இருப்பார்கள். கூர்ந்து கவனிக்கும் ஆற்றல்களுக்கும், பிறருக்குத் தேவைப்படும் போது கைகொடுப்பதிலும் இவர்கள் நன்றாக அறியப்படுவார்கள். அவர்கள் கண்களின் நிறம் அவ்வளவு அழகாக இருப்பதால், பார்ப்பதற்கும் வசீகரத்துடன் நல்ல நண்பனைப்போல் தெரிவார்கள்.

**தங்க நிறக் கண்கள்** - மர்மமாகக் கருதப்படும் தங்க நிறக் கண்களைக் கொண்டவர்கள் யாரையும் சாராமல் இருப்பார்கள். அழகுடைய, அன்புடைய, சந்தோசமான மற்றும் தனித்துவமான குணங்களைக் கொண்டவர்களாக இருப்பார்கள் இவர்கள். தன்னிச்சையாக செயற்படுபவர்களாக அறியப்படும் இவர்களுடன் இருப்பது கொஞ்சம் கஷ்டமாகத் தான் இருக்கும்.

# புதிய நற்பலன்கள் தருகின்ற புரட்டாதிச் சனி விரதம்

கலாபூசணம் இராசையா ஸ்ரீதரன்

எமது வாழ்வின் சுபீட்சத்துக்கு மூலகாரணராக விளங்குகின்ற சனீஸ்வர பகவானைக் குறித்து அனுஷ்டிக்கப்படும் விரதம் புரட்டாதிச்சனி விரதமாகும். இந்த விரதம் மகிமையும் மகோன்னதமும் மிக்க புதிய பல நற்பலன்களைத் தருகின்ற ஒரு புண்ணிய நல்விரதமாகும். வாழ்க்கையின் மேடு பள்ளங்களை அறிந்து நல்வாழ்வு தருகின்ற இந்தப் புரட்டாதிச் சனி விரதம் அனுட்டிக்க விரும்புவோர் காலை எழுந்து புனித புண்ணிய நீராடி, தோய்த்துலர்ந்த வஸ்திரத்தைத் தரித்து, நீறணிந்து சந்தியாவந்தனம் முடித்து ஏதாவது ஒரு சிவன் கோயிலில் சனீஸ்வர பகாவானைக் கும்பிட்டு அர்ச்சனை செய்து விநாயக வணக்கத்துடன் விரதத்தை ஆரம்பிக்கலாம்.

நெற்றியில் விபூதி தரித்து சனீஸ்வரனை வணங்க வேண்டும். காலையில் எதுவித ஆகாரமும் உட்கொள்ளக்கூடாது. புரட்டாதிச்சனி நன்னாளிலே நோன்பிருந்து மத்தியானம் மட்டும் உணவு எடுக்கலாம். இரவு பால்,பழம் அருந்தலாம் மதிய வேளை உணவு உண்ணும்போது ஒரு பிடி அன்னம் மட்டும் எடுத்துக் காகத்துக்கு வைக்கவேண்டும்.காகம் சாப்பிட்ட பின்னரே சனிபகவானை வணங்கி நாமும் சாப்பிட வேண்டும்.

இந்தச் சனீஸ்வரன்போல் கெடுப்பவரும் இல்லையாம். அவரைப்போலவே அள்ளிக் கொடுப்பவரும் இல்லையாம். கெடுப்பதும் கொடுப்பதும் சனீஸ்வரின் உத்தரவுப்படியேதான் நடக்க வேண்டும். ஓர் அணுவும் அசையக்கூடாது. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சமும் தந்தவர் சனீஸ்வரர். இவருடைய பரிபூரண கிருபா கடாட்சத்தினால்தான் நாம் பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். சூரிய பகவானுக்கும் சாயாதேவிக்கும் தோன்றிய புதல்வர்தான் சனீஸ்வர பகவான். ஆயுள் காரகனாகிய இவர் மானிட வாழ்வில் மும்முறை வருகின்றார். ஏழரைச்சனி மூன்றுமுறை எம்மை ஆட்டிப் படைக்கின்றது. இவரை வணங்குவதற்கு இன்றைய புரட்டாதிச் சனி விரதநாளே உகந்ததாகும். இவருடைய பிரீதியைப் பெறுவதற்கு எள் நெய் சுட்டி தீபம் ஏற்றி வணங்க வேண்டும். காகத்துக்கு எள் சாதம் வைத்து வணங்குதலும் நல்லது. பொதுவாக இன்றைய புரட்டாதிச் சனி நாளில் விரதம் நோற்று எள்நெய்சுட்டிதீபம் ஏற்றி வழிபாடியற்றலே முறைமையாகும். கோயிலிலே நவக்கிரகத்துக்கும் பூசை செய்து சனீஸ்வர பகவானை வழிபாடியற்றி எம் தலைவிதியை மாற்றியமைக்கலாம். எமது பூலோக வாழ்வில் மங்கலமும் சுபீட்சமும் வரவேண்டுமாயின் சனி வழிபாடு முக்கியமாகும்.ஆகவே சனீஸ்வரனைப் பிரீதி செய்து வாழ்வில் நலம் பெற நம்மை,நாமே தயார்படுத்திக் கொள்வோமாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா.தனபாலன்



# நேரான வகுப்பறை முகாமைத்துவமும் ஆசிரியரும்

ஒரு நாட்டின் எதிர்கால அபிவிருத்தியை அந்த நாட்டின் நிகழ்கால பாடசாலை வகுப்பறைகளே தீர்மானிக்கின்றன. வகுப்பறையானது நித்தம் பல்வேறு மாணவர் நடத்தைகள் நிறைந்து காணப்படும் ஓர் இடமாகும். ஆசிரியர் கற்பித்தலில் ஈடுபடும்போது உயிரோட்டமாகப் பங்கேற்கும் மாணவர்களும், பங்குபற்றாமல் புறழ்வான நடத்தைகளை மேற்கொள்பவர்களும் உண்டு.

பதற்றம், அசாதாரண சூழல் காரணமாக வெளிப்படும் வன்முறைகள், கட்புல, செவிப் புல இழப்புக்கள், உடல் உளக்குறைபாடு கள். விசேட தேவையுடைய நிலை, வறுமை, ஆசிரியர் பெற்றோர் தொடர்பான காரணிகள் இவை யாவும் நேரான வகுப்பறை முகாமைத்துவ வினைத்திறன்களைக் குறைக்கின்றன. வகுப்பறை வாழ்க்கையின் பிரதிபலிப்பாக அமைவதே வகுப்பறை முகாமைத்துவமாகும். வகுப்பறை வாழ்க்கை முழுவதும் நிலைத்துவிடும் ஓர் இடமாக விளங்குவதற்கான காரணம் எல்லோருக்கும் பிடித்தமான அதன் தன்மையே ஆகும். உலகின் பெரிய மகான்களாகத் திகழ்ந்தவர்கள் தம் பாடசாலைப்பராய வகுப்பறையைமிகுந்தவிருப்போடு நினைவு கூருகின்றார்கள். வகுப்பறை மீது தம் பக்தியை வெளியிடுகின்றார்கள். அவர்களது உன்ன தத்தன்மையை அவர்களுக்கு உரித்தாக்கியவர்கள் சிறந்த நேரான வகுப்பறை முகாமைத்துவத்தைப் பின்பற்றிய அவர்களது ஆசிரியர்களாலேயே ஆகும். இந்த ஆசிரியர்கள் நேரான வகுப்பறை முகாமைத்துவத்தைப் பிர யோகிக்க,

1. வகுப்பறையில் பயனுறுதி வாய்ந்த நேரான முகாமைத்துவ அம்சங்களைப் பிரயோகிக்கும் திறனைப் பெற்றிருக்க வேண்டும்.
2. உள நெருக்கீடுகளுக்கு உள்ளான பிள் ளைகளின் நடத்தை மாற்றங்கள் இருக்கலாம் என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
3. வகுப்பறையில் பிள்ளைகளின் விருப்பத்துக்கு அமைய நேரான நடத்தை மாற்றத்தைக் கொண்டு வரும் தேர்ச்சியைப் பெறல்.
4. கவர்ச்சிகரமான, உயிர்ப்பான கற்றல் கற்பித்தல் திறன்களை பிரயோகிக்கும் ஆற்றலைக் கொண்டிருத்தல்.
5. மாணவர்களின் நடத்தைப் பிரச்சினைகள் அவதானிக்கப்படும்போது உடல் உள ரீதியான தண்டனை வழங்காது எவ்வாறு அவர்களைக் கையாளலாம் என்ற ஆற்றலைப் பெற்றிருத்தல் என்பவை நேரான வகுப்பறை முகாமைத்துவ அம்சங்களாகவுள்ளன.

**“வினைத்திறனுள்ள ஆசிரியர் மாணவர்களு டன் நல்லுறவையும், தொடர்பாடலையும் உயிர்த்துடிப் பாக்குவார். இவ்வுயிர்த் துடிப்பான உறவு இருவழிப் பாதையாக இருப்பதுடன் ஒத்துழைப்பும் சிறப்பாக இருக்கும். உயிர்த்துடிப்பு மிக்க கற்றல் செயற்பாடுகளை எப்போதும் ஊக்கு விப்பார். பின்னூட்டகளை உடனுக்குடன் வழங்கித் தனது உயர்ந்த எதிர்பார்ப்பை வெளிப் படுத்துவார்.”**

## ஆசிரியர் ஆளுகை

ஏனைய தொழில் வாண்மையாளர்கள் போலன்றி ஆசிரியர்கள் மாணவர்களுடன் பணிபுரிகின்றார்கள். மாணவர்களோ விரைவாகத் திருப்தியடையக்கூடியவர்கள். வேறுபாடுகளுக்கு ஆளாகக் கூடியவர்கள். வெறுப் படையக்கூடியவர்கள், உணர்ச்சி வசப்படுபவர்கள். குறைந்த அனுபவம் உடையவர் கள், கல்வி எண்ணக்கருக்களை ஆட்படுத்திக் கொள்வதில் பல்வேறு மட்டங்களை உடையோர், அபிவிருத்தி அடையும் பருவங்களை வெவ்வேறு விதத்தில் கடக்கும் முதிர்ச்சியடையாத கூட்டத்தவர். இவர்களை ஆளுகை செய்ய முன்கூட்டியே மேற்கொள்ளும் தீர்மானத்தோடு மாத்திரம் வகுப்பறையில் செயற்படமுடியாது. எனவே கற்பவராகவும், உளவியலாளராகவும், ஆய்வாளராகவும் அவர் செயற்படவேண்டும். அப்போதே சிறந்த ஆளுகை உள்ளவராகச் செயலாற்ற முடியும்.

நேரான வகுப்பறை முகாமைத்துவத்தில் ஆசிரியரானவர் வகுப்பறையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை ஆரம்பிக்கவுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அமைதியான மனதுடன் அதனை ஆரம்பிக்க வேண்டும். அதற்கு முன்னர் ஒருவேளை எமது உள்ளத் திலிருந்த பயம், பதற்றம், கோபம், வெறுப்பு போன்ற எதிரான உணர்வுகளில் இருந்து விடுபட்டு, சாந்தம் நிறைந்த மனத்துடன் வகுப்பறையை ஆரம்பிக்க வேண்டும்.

## நேரான வகுப்பறையில் ஆசிரியர் வகிபங்குகள்

1. ஆசிரியர் சிந்தனை, சொல், செயல் என்பவற்றில் கொள்கை மாறாதவராக இருக்கவேண்டும்.
2. மாணவர்களின் தனிப்பட்ட விருப்பங்கள், பிரச்சினைகள் பற்றிக் கதைப்பதற்கு பாட நேரத்துக்கு அப்பால் நேரம் ஒதுக்குதல்.
3. எடுத்துக்காட்டாகவும் முன்மாதிரியாகவும் நடந்து கொள்ளல்.
4. தற்செயலாக இடம்பெறும் தவறுக்கு ஒருபோதும் தண்டனை வழங்காதிருத்தல்.
5. சரீரதண்டனை ஒருபோதும் வழங்காதிருத்தல்.
6. மாணவர்கள் திருந்தி நடப்பதற்கும் சந்தர்ப்பம் கொடுத்தல்.
7. ஆசிரியருடைய அறிவுறுத்தல்கள் எப்போதும் நேர்மயமானதாக இருக்க வேண்டும்.
8. மாணவர்களின் ஆக்கத்திறன் முயற்சி என்பவற்றுக்குப் பாராட்டுதல்கள் வழங்க வேண்டும்.
9. அடிக்கடி மாணவர்களிடம் கேள்வி கேட்க வேண்டும்.

மாணவர் விடையளிக்க முயலும்போது அதற்கு உதவுதல் நன்று.

இந்தவகையில் நேரான வகுப்பறை முகாமைத்துவத்தைப் பின்பற்றும் ஆசிரியர் திட்டமிடுபவராக-நண்பராக-வளவாளராக-கணிப்பீட்டாளராக-தகவல் தருபவராக-உபகரண ஆக்குநராக-வழிகாட்டியாக-கற்க உதவுபவராக-முன்மாதிரியாளராக-வளர்ப்புப் பெற்றோராக-ஆசிரியர் பல நேரான வகிபாகங்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆசிரியர் மாணவர் உறவு நல்ல அன்பு நெறியூடாக மனித உறவுகளை மேம்படுத்துகின்றது. நல்லாசிரியர்களை, நல்லதிபர்களை மாணவர்கள் நேசிக்கின்றார்கள். அந்த வகுப்பறை பாடசாலைச்சூழலில் பொருத்தமான அமைதிச் சூழல் நிலவுகின்றது. அந்த அமைதிச் சூழலில் கல்விப்பணி சிறக்கின்றது.

1. அங்கு தண்டனைக்குதடிதேவையில்லை.
2. உருட்டலும் மிரட்டலும் தேவையில்லை.
   உடலில் மனிதனாகத் தோன்று பவனை உள்ளத்திலும் மனிதனாக மாற்றுவதே ஆசிரியர் வழங்கும் கல்வி.

1. மாணவன் இவ்வுலகைச் சரியாகப் புரிந்து கொள்வதற்கு சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும்.
2. அதே நேரம் அவன் அவ்வாறு புரிந்து கொள்வதற்குச் சாதகமான சூழ்நிலையை வழங்கவேண்டும்.
3. அங்கு சுயகட்டுப்பாடு இனம் தெரியாமல் இயங்க வேண்டும்.

இவ்வாறு மாணவர்கள் வகுப்பறைகளில் சுதந்திரமாகக் கற்றிட நேரான வகுப்பறை முகாமைத்துவ உத்திகள் வழிகாட்டுகின்றன. வினைத்திறனுள்ள ஆசிரியர் மாணவர்களுடன் நல்லுறவையும், தொடர்பாடலையும் உயிர்த்துடிப்பாக்குவார். இவ்வுயிர்த்துடிப்பான உறவு இரு வழிப்பாதையாக இருப்பதுடன் ஒத்துழைப்பும் சிறப்பாக இருக்கும். உயிர்த்துடிப்பு மிக்க கற்றல் செயற்பாடுகளை எப்போதும் ஊக்குவிப்பார். பின்னூட்டல்களை உடனுக்குடன் வழங்கித் தனது உயர்ந்த எதிர்பார்ப்பை வெளிப்படுத்துவார். மாணவர்களின் தனிப் பட்ட திறன்களுக்கும் வித்தியாசமான கற்றல் முறைகளுக்கும் மதிப்பளிப்பார். நல்ல ஆளுமையும் பொறுமையும் உள்ள ஆசிரியராக இருப்பார்.

இவ்வாறு இருக்க வேண்டிய ஆசிரியர்கள் இவ்வாறு இருக்க முடியாதுள்ளனர். பாடசாலை முகாமைத்துவக் குறைபாடுகள் பொருத்தமற்ற பயிற்சிப் பட்டறைகளும் செயலமர்வுகளும் மேற்பார்வைக் குறைபாடுகள் மாணவர்களுடன் பல மணி நேரமிருந்து செயலாற்ற முடியாத நிர்வாக வேலைகள் சுயகற்றல், சுயஆற்றல்களைப் பின்பற்றாமை என்பன இதற்குக் காரணங்களாகவுள்ளன.

## மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகள்

ஒரு மாணவனது நடத்தை அவரது நாளாந்த வாழ்வைப் பாதிக்குமாயின், அவர் வகுப்பறை பாடசாலையுடன் இணைந்து முன்னேறத் தடையாக அமையுமாயின், மற்றவர்களின் உரிமைகள் மதிப்பைப் பாதிக்குமாயின் அது பொருத்தமற்ற நடத்தையாகும். மாணவர் களின் பொருத்தமற்ற நடத்தைகளுக்கு வீடு, பாடசாலை, சமூகச் சூழல் காரணமாக அமையலாம். இந்தப் பொருத்தமற்ற நடத்தைகள் தொடர்பாக இன்று பாடசாலைகளிலும் வகுப்பறைகளிலும் பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. இவற்றை நீக்க தண்டனை முறையைத் தவிர்த்து, சரியான ஆலோசனை வழிகாட்டலை வழங்க வேண்டும். இதற்கு முதலில் ஆசிரியர் வகுப்பறையில் நேரான வகுப்பறை முகாமைத்துவ விடயங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

1. மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகளை அவதானித்து அது தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடல்
2. மாணவர்கள் சொல்வதை உற்றுக் கேட்டல்

பொருத்தமற்ற நடத்தையுடைய மாணவர் மீது நிபந்தனையற்ற அக்கறையை வெளிப்படுத்தல்.

3. ஒரு மாணவனை இன்னொரு மாணவருடன் ஒப்பிடாதிருத்தல்.
4. ஒவ்வொரு மாணவரையும் கௌரவத்துடனும், மரியாதையுடனும் நடத்துதல்.
5. மாணவர் தம் கற்றல் இலக்கை அடைய ஆசிரியர் நம்பிக்கை ஊட்டல்.
6. நல்ல புரிந்துணர்வு, தொடர்பாடல் உறுதி, பொறுமை ஆகிய பண்புகளை மாணவர் மீது பிரயோகித்தல்.

சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விழுமியங்களான அன்பு, சமாதானம், சுதந்திரம், பாதுகாப்பு, மரியாதை கொடுத்தல், சமஉரிமை நீதியும் நேர்மையும் ஆகியவற்றை வகுப்பறையில் முழுமையாக ஆசிரியர் பிரயோகிக்க வேண்டும். சிறப்பான பின் னூட்டல்கள் நல்ல நோக்கமுள்ள விமர் சனங்கள் மாணவர்களின் பொருத்தமற்ற நடத்தைகளை மாற்றும். இதற்கு ஆசிரியர்கள் பெற்றோர்களுடன் பொருத்தமான உயிர்த்துடிப்பான உறவைப் பேண வேண்டும்.

1. வீட்டுத் தரிசிப்பு வீட்டுக்குறிப்பு அனுப்புதல்.
2. குடும்பத்தின் நன்மை தீமைகளில் பங்கு கொள்ளல்.
3. பெற்றோர், பிள்ளைகள் வளர்ப்பில் கவனிக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல்களை மேற்கொள்ளல்
4. பெற்றோர்களுடன சேர்ந்து சில பாடங்களைக் கள வேலைகளைத் திட்டமிடல், கற்பித்தலில் பெற்றோரின் உதவி பெறல்.
5. மாணவர்களின் விருப்பு,வெறுப்புத் தொடர்பாகப் பெற்றோருடன் கலந்துரையாடல்.

என்ற வகையில் ஒருநாட்டின் எதிர்கால அபிவிருத்தியைத் தீர்மானிக்கும் உன்னதமான வகுப்பறைகள் மிகவும் முக்கியமானவை. இதில் ஆசிரியர்களின் பங்கே முதன்மையானது. இப்பங்கை வலுவூட்டுபவர்களாக பாடசாலை அதிபர்,கல்விப் பணிப்பாளர்கள், பெற்றோர்கள், சமூகத்தவர்கள், அரசும் திகழ வேண்டும்.

கட்டுரையாளர்:
நிபுணத்துவ ஆலோசகர்
விழுமிய கல்விப்பிரிவு
கல்வியமைச்சு பத்திரமுல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "குயில்"



குக்கூ எனக் கூவும் குயில்
கூடு கட்டத் தெரியாத குயில்
காக்காக் கூட்டில் முட்டையிடும்
காலையில் கூவும் சோலைக்குயில்

மாந்தளிர் கோதி விளையாடும் குயில்
மாலையில் கூவிடும் புள்ளிக்குயில்
குன்றிமணி போல் சிவப்புக் கண்களால்
குறுகுறுவெனப் பார்க்கும் குயில்


பறந்து செல்லும் திரும்பி வரும்
பஞ்சு போன்ற புள்ளிக்குயில்
காலையில் கூவிடும் கறுப்புக் குயில்
சோலையில் வாழும் சோடிக்குயில்

குக்கூ என நாங்கள் கூவினால்
தானும் சேர்ந்து கூவும் குயில்
சுறுசுறுப்பாய் அங்குமிங்கும்
சுற்றிச் சுற்றிப் பறக்கும் குயில்

*கந்த பேரின்பம் – தீவான்*



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....



# வரலாற்றில் இன்றைய தினம்

1674 - சத்திரபதி சிவாஜி மன்னனின் முடிசூட்டு விழா

1841 - போர்னியோ தீவிலுள்ள சரவாக் பகுதியை, ஐக்கிய இராச்சியத்திடம் புரூணை சுல்தான் கையளித்தார்.

1932 - தாழ்த்தப்பட்ட சமூகத்துக்கு இட ஒதுக்கீடு செய்யும் புனே ஒப்பந்தத்தை காந்தியும், அம்பேத்கரும் ஏற்றுக் கொண்டனர்.

1946 - ஹொங்கொங்கில் கதே பசுபிக் எயர் விமானசேவை தொடங்கப்பட்டது.

1948 - ஹொண்டா மோட்டார் கம்பனி தொடங்கப்பட்டது.

1950 - கனடா மற்றும் நியூ இங்கிலாந்து பகுதியில் காட்டுத் தீயினால் சூரிய வெளிச்சம் மறைக்கப்பட்டதுடன் தொலை தூர ஐரோப்பிய நாடுகளில் சந்திரன் நீல நிறமாகத் தென்பட்டது.

1957 - ஐரோப்பாவிலேயே பெரியதான விளையாட்டரங்கு பார்சிலோனாவில் திறந்து வைக்கப்பட்டது.

1973 - போர்த்துக்கலிடமிருந்து கினியா பிஸ்ஸா சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்தியது.

2002 - கண்காணிப்புக் குழுவின் தலையீட்டையடுத்து நெடுந்தீவில் முகாம் அமைக்கும் முயற்சியைக் கடற்படை கைவிட்டது.

- முஸ்லிம்களுக்கெனத் தனி அலகு கேட்டு வற்புறுத்த மாட்டாராம் ஹக்கீம்.

- இஸ்ரேலியப் படைக்கு எதிரான தீர்மானம் ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நிறைவேறியது. "வீட்டோவைப் பயன்படுத்துவதைத் தவிர்த்துக் கொண்டது அமெரிக்கா.

2006 - ஐ.நா.நிறுவனங்களின் கருத்துக்கு ஆணையாளர் திலகரத்னா மறுப்பு, யாழ்ப்பாணத்தில் மனித அவலம் எதுவுமில்லையெனத் தெரிவிப்பு.

- யாழ்.மாணவர்களின் கல்வி நடவடிக்கை தொடர அரசும் படையினரும் வழிவிட வேண்டுமென யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் கோரிக்கை.

- பழம்பெரும் நடிகை பத்மினி தனது 74 வயதில் மாரடைப்பால் காலமானார்.

- பேச்சுக்கு உறுதியான நடவடிக்கை எடுக்க அமெரிக்கா வற்புறுத்து. அமெரிக்கா வெளிவிவகார அமைச்சர் கொண்டலிச ரைஸ் இலங்கை வெளியுறவு அமைச்சர் மங்களவிடம் தெரிவிப்பு.

2007 - பர்மா யங்கனில், 100,000 பேர் வரை அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் பங்கெடுத்தனர். 20 ஆண்டுகளில் நிகழ்ந்த மிகப்பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இதுவாகும்.

2014 - இந்தியாவின் இஸ்ரோவினால் செவ்வாய் சுற்றுவட்டப் பாதையில் வெற்றிகரமாகப் புவிச் சுற்றுப் பாதையிலிருந்து மங்களயான் எனும் கலம் செலுத்தப்பட்டது.

2015 - சவுதி அரேபியாவில் புனித ஹஜ் இன்போது சன நெரிசலில் சிக்குண்டு 1100 பேர் வரை உயிரிழந்ததுடன் 934 பேர் காயமடைந்தனர்.

# மனம் திருந்திய சுப்பிரமணி



ஒரு ஊரில் சுப்பிரமணி என்ற தனவந்தன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு தங்க வியாபாரி. அவனும் மனைவியும் மட்டும்தான் வீட்டில் இருந்தனர். இருந்தும் எச்சிற் கையால் காகம் துரத்த மாட்டான். அப்படி ஒரு கஞ்சன். அதனால் அவனை ஊரில் எவரும் மதிப்பதில்லை. அவனது அயல் வீட்டில் ராமு, சோமு என இரு குழந்தைகள் இருந்தனர். அவர்கள் சுப்பிரமணியின் மனைவி இலட்சுமியுடன் மிகுந்த பாசமாக நடந்து கொள்வர். ஏனெனில் இலட்சுமி குழந்தைகள் மீதுபிரியமுடையவள். இதனால் அயல் வீட்டு ராமுவையும், சோமுவையும் அழைத்து உணவு கொடுப்பாள். சுப் பிரமணிக்குத் தெரியாமல் அவர்களது கல்விக் குண்டான செலவுகளுக்கும் உதவி செய்து வந்தாள்.

அதனால் அவர்களது குடும்பம் இலட்சுமிக்கு எந்த உதவி தேவைப்பட்டாலும் ஓடி வந்து உதவுவார்கள். அவர்களுடன் அவர் களது செல்ல நாய்க்குட்டி ஜிம்மியும் வந்து போகும். இதனைக் காணும்போது சுப்பிரமணி அவர்களின் மனம் நோகும்படி பேசுவான். இலட்சுமியோ சமாளித்து அனுப்பி விடுவாள்.

ஒருநாள் வழக்கம் போல வியாபாரம் முடித்துப் பெருந்தொகைப் பணத்துடன் வீடு நோக்கி வந்த சுப்பிரமணியைப் பின் தொடர்ந்தவாறு திருடன் ஒருவன் வந்தான். வீட்டருகே வந்ததும் லபக்கெனப் பணப் பையைப் பறித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தான். சுப்பிரமணி "ஐயோ! எனது பணப்பை" எனக் கத்தினான்.

ஜிம்மி சத்தம் கேட்டுத் திருடனைத் துரத்திச் சென்றது. பின்னர் திருடன் மேல் பாய்ந்து பணப்பையைக் கவ்விக் கொண்டது. திருடன் பயத்தில் ஓட்டம் பிடித்தான். ஜிம்மிக்குட்டி ராமுவையும், சோமுவையும் நோக்கி ஓடி வந்தது.

அவர்கள் பணப்பையை ஜிம்மியிடம் வாங்கி விட்டு "நீ கெட்டிக்காரன்டா" என்று முதுகில் தடவினர். அது வாலை ஆட்டி மகிழ்ந்தது.

பின்னர் பணப்பையைப் பத்திரமாகக் கொண்டு வந்து சுப்பிரமணியிடம் கொடுத்தனர். சுப்பிரமணியின் கண்களில் இருந்து ஆனந்தக் கண்ணீர் சொரிந்தது. வார்த்தை வரவில்லை. மௌனித்து வெட்கத்தில் தலைகுனிந்தான்.

ஜிம்மியையும் ராமு மற்றும் சோமுவையும் இலட்சுமி, பாராட்டினாள். "பார்த்தீர்களா... இப்பவாவது அவர்களின் பாசத்தைப் புரிஞ்சு கொள்ளுங்கோ" என்றாள்.

"இலட்சுமி நீ சொல்வது சரிதான். நான்தான் தப்புச் செய்து இவர்களை மனம் நோகும்படி பேசிவிட்டேன். அதுதான் இப்படி ஒரு சோதனை" எனத் தன்னை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டான் சுப்பிரமணி.

ராமுவும், சோமுவும் "சீச்சீ.. அப்படிச் சொல்லாதேங்கோ மாமா மாமி எங்கள் மீது காட்டும் அன்பைவிட இது பெரிதல்ல." எனப் பெருந்தன்மையுடன் கூறினர். ஜிம்மி தனது மகிழ்ச்சியை வாலாட்டிக் காட்டியது. ராமுவும், சோமுவும் தலையாட்டிப் புன்னகைத்தனர்.

அன்றிலிருந்து சுப்பிரமணி அவர்களுடன் பாசமாகப் பழகுவான். அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியில் திளைத்து நின்றனர்.

*எஸ்.நிலானி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கக் கோரிக்கை தவறில்லையா?

மருத்துவர்கள் தமது பிள்ளைகள் கல்வி கற்க முன்னணிப் பிரபல பாடசாலைகளில் அனுமதி வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து கல்வி அமைச்சு முன்பாக சில நாள்களுக்கு முன்னர் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

தமக்கு இடமாற்றங்கள் உள்ளிட்ட பல காரணங்களால் தாம் எங்கெல்லாம் இடம்மாறுகின்றோமோ அங்கெல்லாம் தமது பிள்ளைகள் கல்வி கற்க பிரபல தேசிய பாடசாலைகளில் அனுமதி வழங்க வேண்டும் என்பது அவர்களது கோரிக்கையாக உள்ளது.

மருத்துவர் சங்கத்தின் இந்தக் கோரிக்கையை அரசு மிக மோசமான செயற்பாடாக வர்ணித்துள்ளது. அரசின் அமைச்சர்கள் மருத்துவர் சங்கத்தின் இந்தக் கோரிக்கையைக் கண்டித்துள்ளதோடு வெட்கப்பட வேண்டிய விடயம் என்றும் கடிந்துகொண்டுள்ளனர்.

மருத்துவர் சங்கத்தின் அண்மைக்கால செயற்பாடுகள் விமர்சனத்தை ஏற்படுத்துவதாகவே உள்ளன. வெளிப் படையாக அனைவரும் உணரக்கூடியதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கோரிக்கைகளும், அறிக்கைகளும் உள்ளன.

சட்டம், நீதி, நியாயம், உரிமை உள்ளிட்ட இன்னோரன்ன விடயங்களும் மனிதர்கள் அனைவருக்கும் பொதுவானவை. உனக்குக்கூட எனக்குக் குறைய என்றோ, இன்ன விடயங்கள் எனக்கு உண்டு, உனக்கு இல்லை என்றெல்லாமோ கேட்க எவருக்கும் அருகதையில்லை.

சங்கத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் மகிந்த ராஜ பக்ச ஆட்சிக் காலத்தில் இருக்கவில்லை. மகிந்த ஆட்சி கவிழ்ந்த பின்னர்தான் சங்கத்தினர் இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர். அது ஏன்? அது அவர்கள் இரு தரப்பினருக்கும் உரியதாக இருக்கலாம். ஆனால் சங்கத்தினரின் கோரிக்கைகள் எந்தளவுக்கு நியாயமானவை என்பதனை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்த்தால் உணரமுடியும்.

லட்சக்கணக்கில் இங்கு அரச உத்தியோகத்தர்கள் பணியிலுள்ளனர். அதிபர்கள், ஆசிரியர்கள், நிர்வாக அதிகாரிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள், அரச திணைக்களங்கள், அமைச்சுக்களில் பணிபுரியும் அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் தமது பிள்ளைகளுக்கு முன்னணிப் பாடசாலைகளில்தான் அனுமதி தரவேண்டும் என்று கேட்க முற்பட்டால் என்ன நடக்கும்? இங்குள்ள பாடசாலைகள் போதுமானதா?

போதாக்குறைக்கு முப்படையினரும் அவ்வாறு கேட்டுப் போராட்டம் நடத்தினால் நாட்டின் பாதுகாப்புக்கு என்ன நிலை? என்று அமைச்சர் ரஞ்சித் மத்துமபண்டார கேட்பதும் நியாயமானது தான்.

எல்லோரும் தம்மால் இயன்றளவு செயற்பட்டுவரும் நிலையில் மருத்துவர்களின் பிள்ளைகள் மட்டும் என்ன வானத்தில் இருந்து குதித்து வந்தவர்களா? அவர்களை மட்டும் முன்னணிப் பாடசாலைகளில் சேர்க்க வேண்டும் என்று சங்கம் கோருவதனை என்ன அடிப்படையில் ஏற்றுக் கொள்வது? மருத்துவர்களின் பிள்ளைகள் மட்டும் முன்னணிப் பாடசாலைகளில் படிக்கவேண்டும், ஏனைய உத்தியோகத்தர்களின் பிள்ளைகளோ பொதுமக்களின் பிள்ளைகளோ எங்கு வேண்டுமென்றாலும் படிக்கலாம் என்றா சங்கம் கருதுகிறது? அப்படிக் கருதினால் அவர்கள் சுயநலமுடையவர்கள் என்பதனை வெளிப்படையாகக் கூறுவது தவறா?

மகிந்த ராஜபக்சவின் ஆட்சி மாறிய பின்னர் சங்கத்தினர் தற்போதைய அரசுடன் முரண்பட்டுக்கொண்டுள்ளதையும் காணலாம். அதிகளவில் சுகாதார அமைச்சர் ராஜிதவுடன் முரண்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சரும், இடையிடையே பதிலடி கொடுத்து சுயநலச் செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்காது இதுவரை இருந்து வந்துள்ளார்.

தற்போது ஏனைய அமைச்சர்களும் மருத்துவர் சங்கத்தைக் கண்டிக்கத் தொடங்கியுள்ளனர். அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம், அரச தாதிய உத்தியோகத்தர் சங்கம் என்பனவே நாட்டில் மிகப்பெரிய சங்கங்கள் என்று கூறப்படுகிறது. அப்படியிருக்க, மருத்துவர் சங்கத்தினர் தமது பிள்ளைகளுக்கு முன்னணிப் பாடசாலை வேண்டும் என்று கோருவது சரியானதா?

சகலரும் கல்வி கற்க வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை என்ற திட்டம் உருவாக்கப்பட்டுள்ள நிலையில், முன்னணிப் பாடசாலைகளில்தான் தமது பிள்ளைகள் படிக்க வேண்டும் என்பது ஏனைய அரச உத்தியோகத்தர்களின் பிள்ளைகளும், சாதாரண பிள்ளைகளும் தரம் குறைந்தவர்களா என்ற போட்டியை உருவாக்கி விடும். ஏன் அனைவருக்குமே கல்வி புகட்டும் ஆசிரியர்கள்கூட தமது பிள்ளைகளை முன்னணிப் பாடசாலைகளில்தான் கற்க அனுமதிக்கவேண்டும் என்று கோரவில்லை என்பது குறிப்பிடடேயாக வேண்டும்.




# பணி நயப்பு விழாக் காணும் பேராசிரியர் செ. யோகராசா

நூபிவலன்ரீனா பிரான்சிஸ்

பேராசிரியர் செ. யோகராசாவின் பணி நயப்பு விழா இன்று மட்டக்களப்பில் நடைபெறுவதனையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.

பேராசிரியர் செ.யோகராசா யாழ்ப்பாணம், கரணவாய் என்னும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். செல்லையா – இலட்சுமி தம்பதியினரின் கனிஷ்ட புதல்வாரன இவர், தனது ஆரம்பக் கல்வியை யாழ் /கரணவாய் வித்தியாலயத்திலும்,உயர்தரக் கல்வியை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திலும் கற்றார். கலைமாணி தமிழ் சிறப்புக் கற்கைநெறியையும், இளந்தத்துவ மாணிக் கற்கையையும் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மேற்கொண்டார். 1972 தொடக்கம் 1975 வரை கொழும்பு அஞ்சலகத்திலும் 1976இல் மாகோஅஞ்சலகத்திலும் பணிபுரிந்தார். 1976இல் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று நு/கோல்புறூக் தமிழ் வித்தியாலயத்திலும் பின்னர் யாழ்/விக்னேஸ்வராக் கல்லூரியிலும் பணியாற்றினார். 1984இல் தலவாக்கலையைச் சேர்ந்த விஜய திலகி என்பவரைத் திருமணம் செய்தார். இவர்களின் ஏகபுதல்வி சுவஸ்திகா ஆவார். 1984இல் பட்டமேற் கல்வி டிப்ளோமாவையும், 1990இல் முதுகலைமாணிப் பட்டத்தினையும் பூர்த்திசெய்தார்.



1991இல் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் மொழித்துறை விரிவுரையாளராக சேவையில் இணைந்து கொண்ட பேராசிரியர் செ.யோகராசா கடந்த இருபத்தைந்து வருடங்களாக மட்டக்களப்பை வாழ்விடமாக்கி வாழ்ந்து வருகின்றார். ஈழத்துத் தமிழ் இலக்கியத்தில் அதிலும் நவீன இலக்கியத்தில் ஈடுபாடுள்ள இவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆய்வுத்துறைக்குக் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார். குறிப்பாக கிழங்கிலங்கைத் தமிழ் இலக்கியவரலாறு மற்றும் இலக்கிய ஆளுமைகள் தொடர்பான இவரது ஆக்கங்கள் பெறுமதிமிக்கவை.

**ஈழத்துத் தமிழ் இலக் கியத்தில் அதிலும் நவீன இலக்கியத்தில் ஈடுபாடுள்ள இவர் ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஆய்வுத்துறைக்குக் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளார். குறிப்பாக கிழங்கிலங்கைத் தமிழ் இலக்கியவரலாறு மற் றும் இலக்கிய ஆளுமைகள் தொடர்பான இவரது ஆக்கங்கள் பெறுமதிமிக்கவை.**

இருபதுக்கும் மேற்பட்டநூல்களையும் நூற்றுக் கணக்கானகட்டுரைகளையும் இவர் எழுதியுள்ளார். இவற்றை விட தொகுப்பு மற்றும் பதிப்பு முயற்சிகளிலும் பங்காற்றியுள்ளார். இவரது நூல்களுள் பின்வருவன குறிப்பிடத்தக்கன. ஈழத்துத் தமிழ் நாவல் வளமும் வளர்ச்சியும்,
ஈழத்துநவீன கவிதை புதிய உள்ளடக்கங்கள் புதியதரவுகள், புதிய போக்குகள்
ஈழத்து முச்சந்தி இலக்கியம்,
ஈழத்துவாய்மொழிப்பாடல் சார்ந்தமரபு
சிறுபிரசுரங்களாக இவரால் வெளியிடப்பட்டவற்றுள் பின்வருவனகுறிப்பிடத்தக்கன.
இலக்கியத் தேட்டம்: ஈழத்துநவீன இலக்கியம்,
ஈழத்தமிழ்ச் சூழலில் நவீனமயவாக்கமும் இலக்கியத்தினூடானஅதன் வெளிப்பாடுகளும்,
இன்றைய இலக்கியங்களில் இதிகாசப் பெண்பாத்திரங்கள்,
புலம்பெயர் இலக்கிய வளர்ச்சிக்கு வடமரட்சியின் பங்களிப்பு,
பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை,
ஈழத்து இலக்கியமும் இதழியலும்,
ஈழத்துநவீன இலக்கியஉருவாக்கத்தில் மண்டூர் பாரதியின் பங்களிப்பு,
ஈழத்துதமிழியல்சார் ஆய்விதழ்கள்,
சுவாமி விபுலாநந்தரும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரும்,
ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் வ.அ.இராசரத்தினத்தின் தடங்கள்,
கிழக்குப் பல்கலைக் கழகத்திலே மௌன குருவின் தடங்கள்,

இவற்றைவிட மாற்று நோக்கில் சில கருத்துக்களும் நிகழ்வுகளும், புதுத்துளிர் நூறு, ஈழத்து சிறுவர் அறிவியல், ஈழத்து சிறுவர் இலக்கியக் களஞ்சியம் ஆகிய நூல்கள் இவரால் தொகுக்கப்பட்டவை.

தெளிவத்தை ஜோசப்பின் 'காலங்கள் சாவதில்லை' என்னும் நாவலையும், எம். சித்திலெப்பையின் 'அசன் பேசரித்திரம்' என்னும் நாவலையும் காலத்தின் தேவை கருதி பதிப்பித்துள்ளார். ஏறத்தாழ எண்பது நூல்களுக்கு இவரால் அணிந்துரை வழங்கப்பட்டுள்ளமைகுறிப்பிடத்தக்கதாகும்.

இவரதுநூல்களுள் 'ஈழத்துநவீனகவிதை: புதிய உள்ளடக்கங்கள், புதியதகவல்கள், புதியதரவுகள்' என்னும் நூலுக்கு 2007 இல் தேசிய சாகித்திய விருது கிடைத்தது. அதேபோல 'ஈழத்துநாவல் வளமும் வளர்ச்சியும் என்னும் நூலுக்கு 2007இலிலும், 'ஈழத்து இதழியலும் இலக்கியமும்' என்னும் நூலுக்கு 2008இலிலும் வடமாகாண சபை விருதுகிடைத்தது.

1999இல் கலாநிதிப் பட்டத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பெற்றுக் கொண்ட இவர், 2009இல் பேராசிரியராக நியமனம் பெற்றார். எளிமையானவாழ்வும் யாவருடனும் இனிமையாகப் பழகும் பண்பும் உடைய இவர் 'கலைவாரிதி', 'தேனகக் கலைச் சுடர்' ஆகியவிருதுகளைப் பெற்றவர்.

பேராசிரியர் செ.யோகராசாவின் இலக்கிய மற்றும் கல்விப் பணிகளைப் பாராட்டி மட்டக்களப்பில் எடுக்கப்படும் பணி நயப்பு விழாவில் 'கருணையோகம்' என்னும் சிறப்புமலரும் வெளியிடப்படவிருக்கின்றது. ஏறத்தாழ 260 பக்கங்களில் அமைந்துள்ள இம் மலர் அவரது ஆய்வுகள் குறித்த கனதியான கட்டுரைகளையும் அவரது நண்பர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலதரப்பட்டோரால் எழுதப்பட்ட நெகிழ்ச்சி மிகுந்த அவரது வரலாற்றுப் பக்கங்களையும் உள்ளடக்கியுள்ளது. இவற்றை ஆவணப்படுத்தியதன் மூலம் பேராசிரியரின் ஆளுமையைத் தமிழுலகு அறியச் செய்வதில் இச் சபை பெருமை கொள்கின்றது.

பேராசிரியர் செ.யோகராசா உடல், உளநலத்துடன் வாழ்ந்து தமிழ்ப் பணி புரிய வாழ்த்துகின்றோம்.

தலைவர்,
மொழித்துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கோல்டன் குளோப் விருதுக்குத் தெரிவான தமிழ்ப் படம்

விருதுக்கென்றே படம் இயக்கும் ப்ரியதர்ஷன், எய்ட்ஸ் விழிப்புணர்வை மையப்படுத்தி இயக்கிய 'சில நேரங்களில்' என்ற படம் 'கோல்டன் குளோப்' விருதுக்கான திரையிடலுக்குத் தெரிவாகியுள்ளது.

ப்ரியதர்ஷன் விருதுக்கென்றே 'காஞ்சீவரம்' என்ற படத்தை இயக்கினார். இந்தப் படம் எதிர்பார்த்ததுபோல் சில விருதுகளையும் பெற்றது. அதேபோல் சமீபத்தில் தமிழில் அவர் இயக்கிய படம், 'சில நேரங்களில்' இந்தப் படத்தில் பிரகாஷ்ராஜ், ஸ்ரேயா ரெட்டி, நாசர், அசோக் செல்வன் ஆகியோர் நடித்திருந்தனர். இளையராஜா இசையமைக்க இயக்குநர் விஜய்யும், பிரபுதேவாவும் இணைந்து தயாரித்திருந்தனர்.

எய்ட்ஸ் விழிப்புணர்வை மையப்படுத்திய இந்தப் படம் கோல்டன் குளோப் விருதுக்கான திரையிடலுக்கு தெரிவாகியுள்ளது. அடுத்த மாதம் 6ஆம் திகதி இந்தப் படம் அமெரிக்காவில் திரையிடப் படவுள்ளது' என சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | | 5 | | | | | |
| 8 | | | | | 7 | | | |
| | | | | | 4 | | 3 | 7 |
| | 6 | | 8 | | 2 | | 1 | |
| | | 8 | | | | 2 | | |
| | 4 | | 9 | | 3 | | 6 | |
| 2 | 1 | | 6 | | | | | |
| | | | 4 | | | | | 1 |
| | | | | | 9 | | 5 | 8 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 3 | 8 | 4 | 1 | 6 | 7 | 5 |
| 5 | 1 | 4 | 9 | 6 | 7 | 2 | 8 | 3 |
| 8 | 7 | 6 | 3 | 5 | 2 | 1 | 9 | 4 |
| 3 | 5 | 9 | 4 | 1 | 8 | 7 | 6 | 2 |
| 7 | 6 | 2 | 5 | 3 | 9 | 8 | 4 | 1 |
| 1 | 4 | 8 | 2 | 7 | 6 | 5 | 3 | 9 |
| 4 | 8 | 7 | 1 | 9 | 5 | 3 | 2 | 6 |
| 6 | 3 | 1 | 7 | 2 | 4 | 9 | 5 | 8 |
| 9 | 2 | 5 | 6 | 8 | 3 | 4 | 1 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்கரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்படவேண்டும். அவ் வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

'செல்போன்'ல எப்படி எப்படியோ தொழில் நுட்பம் கண்டு பிடிக்கிறாங்க; கருமம் இந்தச் 'சார்ஜ்' வயரை அரை மீற்றருக்கு மேல தர மாட்டேங்கிறாங்க! எவ்வளவு நேரம்தான் 'ப்ளக்' பக்கத்தில உட்கார்ந்து இருக்கிறது!



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?



**மேடம்:** சுயநலத்துடன் சிலர் உதவி செய்ய முன் வருவர். தொழில், வியாபாரத்தில், எதிர்பார்த்த முன்னேற்றம் உண்டாகும். நிலுவைப் பணம் வசூலாகும். ஆரோக்கியம் பலம் பெறும். எதிர்பார்த்த சுபச் செய்தி வந்து சேரும்.

**இடபம்:** முக்கிய பணியை பிறரிடம் ஒப்படைக்க வேண்டாம். தொழில், வியாபாரம் சீர்பெறக் கூடுதல் உழைப்புத் தேவைப்படும். பண வரவை விட செலவு அதிகரிக்கும். வாகனப் பயணத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மிதுனம்:** பலரும் உங்கள் மீது நல்ல எண்ணம் கொள்வர். தொழில், வியாபாரத்தில், உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். வருமானம் உயரும். மனைவி விரும்பிய பொருளை வாங்கித் தருவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும்.

**கடகம்:** வாக்குறுதி நிறைவேறத் தாமதமாகலாம். பொறுமையுடன் செயல்படுவது நல்லது. தொழிலில், சுமாரான லாபம் கிடைக்கும். பெண்களுக்கு, வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல் நலனில் அக்கறை தேவை.

**சிங்கம்:** நல்லவர்களின் நட்பால் உதவி கிடைக்கும். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். தொழில், வியாபாரம் செழிக்கும். மிகுதி வருமானம் கிடைக்கும். பெண்கள், வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர்.

**கன்னி:** வாழ்வில் குறுக்கிடும் சிரமத்தை சரி செய்ய முயல்வீர்கள். குடும்பத்தினரின் ஒத்துழைப்புக் கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். பணக்கடனில் பெரும்பகுதியைச் செலுத்துவீர்கள்.

**துலாம்:** நண்பர்களின் செயலால் அதிருப்தி உருவாகலாம். தொழில், வியாபாரத்தில், அளவான மூலதனம் போதும். லாபம் சுமாராக இருக்கும். திடீர் வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடலாம்.

**விருச்சிகம்:** சொந்தப் பணிகளில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலக்கை அடைய விடாமுயற்சி தேவைப்படும். வருமானம் சுமார். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**தனுசு:** சிறிய முயற்சியிலும் பெரிய நன்மை காண்பீர்கள். விலகிச் சென்ற நண்பரும் அன்பு பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில், வருமானம் அதிகரிக்கும். குடும்பத்தின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** கடந்த கால உழைப்பின் பலனைப் பெற்று மகிழ்வீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால், லாபம் உயரும். பெண்கள், புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. பிள்ளைகளின் செயல்பாடு பெருமையளிக்கும்.

**கும்பம்:** வழக்கத்திற்கு மாறாக பணிச்சுமை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில், மூலதனம் அதிகம் தேவைப்படும். நண்பரால் உதவி உண்டு. பெண்கள், வீட்டுச் செலவுக்காக கடன் வாங்க நேரிடலாம்.

**மீனம்:** பிறருக்காக தகுதிக்கு மீறி வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில், வருமானம் சராசரி அளவில் இருக்கும். உறவினர் வருகையால் வீட்டுச் செலவு அதிகரிக்கும். உடல் நலனுக்காக மருத்துவச் சிகிச்சை தேவைப்படலாம்.

"மனைவியை சமாளிப்பது எப்படி...?" புத்தகம் வெளியீடு... இது முதல் பாகம் மட்டுமே...!





பெண்: என் பிறந்தநாளுக்கு என்ன தருவாய்?
ஆண்: என்ன வேணும்?
பெண்: ஒரு 'ரிங்' கொடு அது போதும்.
ஆண்: ம்ம்... ஓகே,
ஆனால் எடுத்துக் கதைக்கக்கூடாது...
காசு போயிடும்... சரியா...

நாங்க கட்டிக்கப் போற பொண்ணு எப்பவும் 'அடுப்படி'லேயே இருக்கனும் என்று சொல்லல...



எப்பவும் 'ஒன்லைன்'லேயே இருக்க வேணாம் என்றுதான் சொல்றோம்...!



விமலா: அவசரமா ஒரு வாட்ஸ்அப்மெசேஜ் ஒண்ணு அனுப்பணும், உங்க வீட்டு வைஃபை 'பாஸ் வேர்ட்' கொஞ்சம் சொல்லுங்களேன்., எங்க வீட்ல பணம் கட்டாம கட்டாகிக் கிடக்கு!
கமலா: "அட சாவுகிராக்கி"!
விமலா: பாருங்க! தர முடியா துன்னா, இல்லேன்னு சொல்லுங்க..., இப்படி கண்டபடி எல்லாம் திட்டாதீங்க!
கமலா: மன்னிச்சுக்கொள்ளுங்க, தப்பா எடுத்துக்காதீங்க..., என் வீட்டுக்காரர் பாஸ் வேர்ட்டை அப்படி வைச்சிருக்கிறாரு...!
விமலா:...?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 650 | 500 | 700 | 600 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 300 | 300 | 600 |
| கணவாய் | 600 | 700 | 400 | 600 | 600 | 600 | – |
| பாரை | 550 | 600 | 400 | 800 | 500 | – | 440 |
| சுறா | 500 | 600 | 500 | 800 | 700 | – | 600 |
| சீலா | 300 | 500 | 300 | 600 | 400 | 400 | – |
| விளை | 650 | 500 | 300 | 600 | 400 | – | 500 |
| முரல் | 300 | 400 | 300 | 500 | 300 | – | – |
| கும்பிளா | 400 | 400 | 400 | 400 | 400 | – | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 500 | – | – |
| ஓரா | 400 | 400 | 300 | – | 250 | 300 | – |
| திரளி | 300 | 300 | 100 | 150 | 150 | 200 | 350 |
| நகரை | 250 | 300 | 100 | 250 | 200 | 300 | 350 |
| சூடை | 150 | 250 | 100 | 200 | 120 | 150 | – |
| ஒட்டி | 300 | 250 | 200 | – | 200 | 300 | – |
| திருக்கை | 150 | 400 | 200 | 400 | 300 | – | 150 |
| மதனம் | 150 | 300 | – | 400 | 200 | – | 300 |
| கொய் | 100 | 200 | 50 | 70 | 80 | 100 | – |
| பாலை | 400 | 200 | 300 | 400 | 300 | – | – |
| வாழை | 100 | 200 | – | 400 | 200 | – | – |







சிறுவர்களுக்கு சிலேடாகவும் பயன்படுத்தும் அதேநேரம் மறுபுறத்தில் நேரத்தை விளக்கும் கருவியும் ஒரே தகட்டில் அறிமுகமாகியுள்ளது. சிறிய பிளாஸ்டிக் எழுது கருவியும், பின் பகுதியில் மணி பார்க்கும் விதமும் சிறுவர்களுக்குரிய விதத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளன. இது 350 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.

# கோவா பொரியல்

தேவையான பொருள்கள்

**கோவா – 2 ½ கப்**
பெரிய வெங்காயம் – 2
கடுகு – 1/2 தேக்கரண்டி
உளுத்தம் பருப்பு – ஒரு தேக்கரண்டி
கடலைப் பருப்பு – ஒரு தேக்கரண்டி
மிளகாய் வற்றல் – 5
துருவிய தேங்காய் – 1/2 கப்
கறிவேப்பிலை – 2 கொத்து
உப்பு – ஒரு தேக்கரண்டி



செய்முறை

தேவையான பொருள்களைத் தயாராக எடுத்து வைத்துக் கொள்ளவும். வெங்காயத்தை நீளவாக்கில் நறுக்கிக் கொள்ளவும். கோவாவை கரட் துருவியால் துருவிக் எடுத்துக் கொள்ளவும். சட்டியில் எண்ணெய் ஊற்றி காய்ந்ததும் கடுகு, உளுத்தம் பருப்பு, கடலைப் பருப்பு, நறுக்கிய வெங்காயம், மிளகாய் வற்றல், கறிவேப்பிலை போட்டு தாளித்து அதனுடன் கோவாவையும் போட்டு வதக்கவும்.

கோவா நன்கு வதங்கியதும் அதில் அரை கப் தண்ணீர் ஊற்றி உப்புச் சேர்த்து, மூடி போட்டு வேக விடவும். வெந்ததும் அதில் துருவிய தேங்காயை மேலே தூவி விடவும். தேங்காய்த் துருவலையும் கோவாவையும் ஒன்றாகச் சேரும்படி கிளறி விட்டு ஒரு நிமிடம் வைத்திருந்து இறக்கி விடவும். கோவாப் பொரியல் தயார்.

# வீட்டுக் குறிப்புகள்

- அந்துப் பூச்சி வராமலிருக்க நெல் மூட்டையைச் சுற்றிலும், அதன் இடுக்குகளிலும் புங்கை இலை, வேப்ப இலைகளை பறித்துப் போட்டு வைக்கவும்.
- பயறு வகைகளை சிறிது விளக்கெண்ணெய் சேர்த்துக் கிளறி வைப்பதால் அவை பல நாள்கள் வரை புழுத்துப் போகாமல் இருக்கும்.
- புளியை நீண்ட நாள்கள் வைத்துக் கொள்ள பானையில் போட்டு வைக்கவும். பானையின் அடியில், புளியைப் போட்டு அதன் மேல் கொஞ்சம் உப்பைத் தூவினால் புளி கெடாமல் இருப்பதோடு, காய்ந்து போகாமலும் இருக்கும்.
- மாங்காய், எலுமிச்சம்பழம் போன்றவற்றை நீண்ட நாள்கள் பாதுகாக்க வேண்டுமாயின் நறுக்கி, வெயிலில் காய வைத்து வற்றல் போல் உலர்த்திக் கொள்ளவும். பின் எப்போது ஊறுகாய் வேண்டுமோ அப்போது வெந்நீரில் ஊற வைத்து ஊறுகாய் மாதிரி தாளித்து உபயோகிக்கலாம்.
- தேங்காய் எண்ணெயில் சுத்தமான உப்புக் கல்லைப் போட்டு வைப்பதால், பல நாள்கள் கெடாமல் இருக்கும்.



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 50 | 40 | 60 | 40 | 40 | 30 | 30 |
| கத்தரி | 60 | 50 | 60 | 60 | 40 | 40 | 90 | 30 |
| கரட் | 80 | 100 | 120 | 100 | 100 | 120 | 110 | 100 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 80 | 60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 50 | 60 | 160 | 40 | 40 | 40 | 100 | 80 |
| பாகல் | 100 | 70 | 200 | 100 | 80 | 120 | 150 | 80 |
| கருணைக்கிழங்கு | 100 | 120 | 100 | 160 | 80 | 100 | 120 | 100 |
| பெ.வெங்காயம் | 100 | 110 | 90 | 90 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 80 | 80 | 100 | 80 | 80 | 100 | 90 | 80 |
| பூசணி | 40 | 40 | 50 | 30 | 30 | 40 | 70 | 30 |
| தக்காளி | 50 | 50 | 60 | 50 | 60 | 80 | 120 | 50 |
| வாழைக்காய் | 80 | 70 | 80 | 80 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 20 | 30 | 40 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 100 | 80 | 80 | 100 | 60 | 100 | 200 | 80 |
| புடோல் | 50 | 40 | 60 | 60 | 30 | 60 | 70 | 50 |
| கோவா | 80 | 90 | 100 | 80 | 100 | 100 | 90 | 50 |
| வெண்டி | 80 | 60 | 80 | 80 | 40 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 160 | 180 | 120 | 120 | 160 | 200 | 130 | 130 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 100 | 100 | 100 | 90 | 90 |
| தேங்காய் | 40 | 25 | 40 | 35 | 30 | 30 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 130 | 100 | 100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 180 | 200 | 350 | 220 | 300 | 200 | 120 | 250 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 120 | 100 | 100 | 120 | 100 | 100 | 200 | 80 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 160 | 140 | 160 | 120 | 140 | 200 | 80 | 80 |

## நாளை

புரட்டாதி-09
ஞாயிற்றுக்கிழமை
-25.09.2016
திதி: தசமி பி.இ.04.44
நட்சத்திரம்:
புனர்பூசம் மு.இ.07.11
ராகுகாலம்:
04.32-06.02 வரை
சுபநேரம்:
09.02-10.32 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 18 . 11 . 1940 | 21 . 09 . 2016 |



## வைத்திலிங்கம் வைரமுத்து திருச்செல்வம்


யாழ்ப்பாணம் வதிரி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் தயா வீதி, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் வைரமுத்து திருச்செல்வம் (ஓய்வுபெற்ற தபாலதிபர் மற்றும் மொழிபெயர்ப்பாளர், இந்திய உயர் ஸ்தானிகராலயம் கொழும்பு) அவர்கள் இறைபதம் எய்தினார். அன்னார் அமரர்கள் வைரமுத்து மாணிக்கம் தம்பதிகளின் அன்பு மகனும் அமரர்கள் முத்துக்குமாரு பாக்கியம் தம்பதிகளின் மருமகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், Dr. சிறிஹரன் (Neuroscientist, USA) பவதாரிணி (HNDA, UK), திருக்குமரன் (Engineer, Singapore) குன்றக்குமரன் (Engineer, Singapore) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், அமரர் ஜெனிபர் (District Manager, Regis, USA) உமாகாந்தன் (Engineer, UK) ஹம்ஷா (Engineer, Singapore) ஜனார்த்தனி (Engineer, Singapore) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷ்கா, தீக்ஷா, திக்ஷிதாவின் அன்பு பேரனும் அமரர் நவரத்தினம், பொன்னம்மா, மகேஸ்வரி, அமரர் புவனேஸ்வரி, அமரர் துரைராசா ஆகியோரின் சகோதரரும், உமா, நடேஸ்வரியின் மாமனாரும், Dr. தங்கரூபன் (UK), ஜெயரூபனின் (UK) சித்தப்பாவும், அமரர் சண்முராசா, அமரர் கோவிந்தராசா, அமரர் சிவஞானசுந்தரம், தவமணி, ருக்மணி, கோவிந்தராசா, ஜெயமணி, மனோன்மணி, ரதிமணி, திருமால்மருகன், மாயோன்மருகன், சிவகுமாரன், தவகுமாரன், சாந்தமணி ஆகியோரின் மைத்துனரும், இராமகிருஷ்ணன், திருச்செல்வம், சிவசிதம்பரம், இரத்தினசிங்கம், Dr. சுதோகுமார் ஆகியோரின் சகலனும் கிருஷ்ணமணி, ரேணுகா, உஷாநந்தினி, விஜயலக்சுமி, ஜெயசிறி ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிமுதல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 11.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று பி.ப 1.30 மணியளவில் கல்கிசை இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

**தகவல்: குடும்பத்தினர். தொலைபேசி:0766975354, 0728989959**

# மரண அறிவித்தல்

## திருமதி சின்னம்மா சின்னையா

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 03 . 04 . 1924 | 20 . 09 . 2016 |



உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சின்னம்மா சின்னையா 20.09.2016 செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை - வைரவி தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்ற சின்னையாவின் மனைவியும் காலஞ்சென்றவர்களான அரியகுட்டி, கந்தையா, செல்லையா ஆகியோரின் சகோதரியும் மனோகரி (இளைப்பாறிய ஆசிரியை யா/ ஊரெழு கணேச வித்தியாசாலை, மன்/ அடம்பன் ம.ம.வி.), மனோகரன் ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சற்குணம் மற்றும் இந்திராணி ஆகியோரின் மாமியும் மெலோன் (லண்டன்), சுபா (கனடா), ஷோபிதா (வைத்தியர்-யாழ் போதனா வைத்தியசாலை), தறோஷன் (சுவிஸ்), அனோஜா, தஷீதா (Admin Asst BCAS Jaffna Campus) ஆகியோரின் பேர்த்தியும், சிண்டி, சிலீன், தமிஸ், லிதுஷன் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**உரும்பிராய் தெற்கு,**
**கோப்பாய் வீதி.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**


**மனோகரி (001647 2624515)**
**மனோகரன்: (077 6154235**

(Re/4832)(12.18)

# மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## கந்தையா திருநாவுக்கரசு
### (பத்தர்)



நாவற்குழி கிழக்கைப் பிறப்பிடமாகவும் கைதடி தெற்கை வசிப்பிட மாகவும் கொண்ட கந்தையா திருநாவுக்கரசு 20.09.2016 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மனோன்மணி தம்பதிக ளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பவளம் தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற பூமணியின் அன்புக் கணவரும், இந்திராணி (இந்திரா - நல்லூர்), விக்கினேஸ்வரன் (விக்கி -கனடா), மோகனதாஸ் (மோகன் - கைதடி), திலகராணி (சோபனா - சங்கானை), இந்துமதி (உஷா - கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் மற்றும் குமாரலிங்கம் (பேபி), செல்வராஜா (மணி), கோமதி (ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கேதீஸ்வரன் (கேதீஸ் - சாருணி நகையகம் - கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்), குணசேகரம் (குணம், ஆசைப்பிள்ளை அன்சன் நகைமாடம் - சங்கானை), சசிக்குமார் (ராஜா - கொழும்பு), யூடித் (கனடா), காமினி (பேபி - கைதடி) ஆகியோரின் அருமை மாமனாரும், பிரியதர்சினி, நீகன்,திலீபன், கோபிகன், வினோஜா , தாரணி, பிரியசாருணி, றெபேக்கா, ஜெய்ஷன், ஆதீஸ், துஷாந், பிரகாஸ், கிருஷாந், கோபிகா, பிரியங்கா, நேர்த்திகா, ஷஜீன் ஆகியோரின் அன்புப் பேரனும், ஹரீஷனின் பூட்டனும், காலஞ்சென்ற யோகராஜா மற்றும் சிவபாலன் (பாலு), சிவகுருநாதன் (கிளி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.09.2016) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கைதடி ஊரியன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கைதடி தெற்கு,**
**கைதடி.**

(J/4811)
(11,17,18)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 704 1563**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டன்...

நீதிமன்றில் நேற்று அனைவராலும் கவர்ந்து நோக்கப்பட்ட இந்த விடயம் தொடர்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

உரும்பிராய் நபர் லண்டனை வதிவிடமாகக்கொண்டுள்ளார். அவர் விடுமுறையில் அண்மையில் தனது சொந்த ஊருக்கு வந்திருந்தார். அவர் தனது சகோதரனுடன் தமது உறவினர் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளார். இந்த நேரமே பொலிஸார் மறித்து சோதனையிட்டுள்ளனர்.

தனக்கு நடந்த சித்திரவதை தொடர்பில் அவர் சாட்சிக் கூண்டில் நின்று நீண்ட நேரம் சாட்சியமளித்தார்.

நேற்றுமுன்தினமிரவு தெல்லிப்பழைப் பொலிஸார் மறித்து சோதனையிட்டனர். அதன்போதே மோட்டார் சைக்கிளின் ஆவணங்களை விட்டுவந்தமையை இருவரும் உணர்ந்துகொண்டோம். ஆவணங்கள் வீட்டில் உள்ளன. எடுத்துவந்து தருகிறோம். அல்லது சொல்லி எடுத்துக் காண்பிக்கிறோம் என்று கூறினேன்.

ஆனால் பொலிஸார் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. அந்த இடத்தில் வைத்து ஆங்கிலத்தில் கதைக்கிறாயா என்றும் கேட்டு தாக்கினர். தவறான வார்த்தைகளால் ஏசினர். பெற்றதாயையும் தொடர்புபடுத்தி மிகக்கேவலமாக ஏசினர். அப்பொழுது சுமார் 6 பொலிஸார் நின்றிருந்தனர். அவர்களில் அநேகமானவர்கள் போதையில் நின்றதாகவே தெரிந்தது.

அதன் பின்னர் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர். அங்கு வைத்துக் கடுமையாகத் தாக்கினர். ரோச் லைற், கை,கால்கள், சப்பாத்துக் கால்களாலும் தாக்கி மிதித்தனர். அதனால் கடுமையாகப் பாதிக்கப்பட்டேன். அதன் பின்னர் பொலிஸார் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குச் சிகிச்சைக்குக் கொண்டு சென்றனர். எனக்கு ஒரு பிரச்சினையுமில்லை என்று மருத்துவ அறிக்கை தருமாறு மருத்துவரிடம் பொலிஸார் கோரினர். ஆனால் உரிய முறையில் பரிசோதிக்காது நீங்கள் கூறுவது போல மருத்துவ அறிக்கை தரமுடியாது என்று மருத்துவர் கூறவே தாம் யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று என்னைக் காட்டுவதாகக்கூறி வைத்தியசாலையிலிருந்து அழைத்துச் சென்றனர். ஆனால் அவர்கள் மீண்டும் தெல்லிப்பழை பொலிஸ் நிலையத்திற்கே கொண்டு சென்றனர்.

எனக்கு ஏற்கனவே இரத்த அழுத்த நோய் உள்ளது. அதற்கு மருந்து கட்டாயம் போட வேண்டும். மாத்திரை தருமாறு கேட்டேன். தரவில்லை. எனது வீட்டிலிருக்கிறது எடுக்க அனுமதியுங்கள். அல்லது என்னுடன் நீங்கள் வீட்டுக்கு வந்து மாத்திரை எடுக்க உதவுங்கள் என்று கேட்டும் பொலிஸார் சம்மதிக்கவில்லை. பின்னர் ஏதோ ஒரு மாத்திரையைத் தந்தனர். அதனைப் போட்டவுடன் இரவிரவாக வாந்தியெடுத்துக் கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அங்கு மலசல கூடத்துக்குச் சென்றபோது, ஏற்கனவே யாரோ அதனைப் பாவித்த நிலையில் அங்கு செல்ல முடியாதளவுக்கு மிகமோசமாக அது காணப்பட்டதனால் இயற்கைக் கடன்களைக்கூடக் கழிக்கவில்லை.

நேற்றுக்காலை வரை பொலிஸ் தடுப்பில் வைத்திருந்தனர். இரவு உணவு தண்ணீர் எதுவுமே வழங்கவில்லை. குடிக்கத் தண்ணீர்கூடத் தரவில்லை என்று சித்திரவதைக்குள்ளானவர் நீதிமன்றில் தெரிவித்தார்.

அதன் பின்னர் பொலிஸாரை நீதிவான் கடுமையாக எச்சரித்தார். கௌரவமாக நடந்துகொள்ள வேண்டிய பொலிஸார் இவ்வாறு மோசமாக நடந்துகொண்டுள்ளனர். அவர்களை மனிதர்கள் போன்று நடத்தாது மிருகங்களைப் போல நடத்தியிருக்கிறார்கள். சித்திரவதைக்கு உட்படுத்தியுள்ளார்கள் என்று நீதிவான் குறிப்பிட்டார்.

சித்திரவதை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளதனால், அந்தப் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக விரைவில் உரிய விசாரணை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்யுமாறு வடக்கு மாகாண மூத்த பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு நீதிவான் உத்தரவிட்டார். சித்திரவதைக்குள்ளானதாகக் கூறப்படும் நபரை தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்த்து மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு நீதிமன்றப் பதிவாளர் ஊடாக வைத்தியசாலை அத்தியட்சகருக்கு அறிவிக்குமாறும் நீதிவான் கட்டளையிட்டார். அதேவேளை, சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டதாகக் கூறப்படும் நபரை நேற்றுமுன்தினம் தெல்லிப்பழை வைத்தியசாலையில் மருத்துவரிடம் முற்படுத்தி பொலிஸார் கூறியவாறு அறிக்கை கோரப்பட்ட விடயத்தை நாளை மறுதினம் திங்கட்கிழமை மன்றில் சாட்சியமளிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன், பிரிட்டன் வாசி மற்றும் அவரது சகோதரர் மீது திருட்டுக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு பொலிஸாரினால் செய்யப்பட்ட வழக்கை நிராகரித்த நீதிவான், அவர்கள் இருவரையும் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்தார். அந்த வழக்கை பொலிஸாரின் சித்திரவதை வழக்காகப் பதிவு செய்து தொடர்வதற்கு நீதிமன்றம் தீர்மானித்தது. (வ-4)

## தவறாகப்...

அந்த மாணவர்களின் தரத்துக்கு அடுத்த நிலையிலுள்ள மாணவர்களுக்கு அந்த வாய்ப்புக் கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பல்கலைக்கழகத்துக்கான முதலாவது விண்ணப்பப் படிவத்தில், தமது புள்ளிகளின் அடிப்படையில் தாம் தெரிவு செய்யும் கற்கை நெறிக்கான உரிய பல்கலைக்கழகத்தை தெரிவு செய்யத் தவறியதனாலேயே சிறந்த பெறுபேற்றுப் புள்ளிகள் பெற்ற மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் கணிதப்பிரில் சித்தியடைந்து மாவட்டத்தில் மூன்றாவது நிலை பெற்ற மாணவனான இராசரட்ணம் ஹர்ஜுன் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளார்.

பல்கலைக்கழக அனுமதிக்கான முதலாவது விண்ணப்பப் படிவத்தில் சகல விடயங்களையும் முழுமைப்படுத்தி பல்கலைக்கழகங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டபோதும், ஒலுவில் பல்கலைக்கழத்தைத் தெரிவு செய்யவில்லை. அதனால் அடுத்த நிலையில் உள்ள மாணவன் ஒலுவில் பல்கலைகழகத்தை தெரிவு செய்திருந்தமையால், அந்த மாணவனுக்கே பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளது.

மல்லாவி மத்திய கல்லூரியில் மருத்துவப்பிரிவில் சித்தியடைந்து மாவட்டத்தில் நான்காவது நிலைபெற்ற மாணவி மகாலிங்கம் அகத்தியா பல் மருத்துவத் துறைக்கு விண்ணப்பித்திருந்தார். எனினும், அவரும் பல பல்கலைக்கழகங்களைத் தெரிவு செய்தபோதும், அவர் மட்டக்களப்பு பல்கலைக்கழகத்தைத் தெரிவு செய்திருக்கவில்லை. அதனால் அவருக்கு அடுத்த இடத்திலிருந்த மாணவிக்கு அங்கு பல் மருத்துவத் துறைக்கு அனுமதி கிடைத்துள்ளது.

கடந்த வருடங்களில் இந்த நடைமுறை இருக்கவில்லை. கூடிய புள்ளிகளைப் பெற்றிருந்தவர்கள் எப்படியாவது பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். ஆனால் இந்தமுறை புதிய மாற்றத்தால் பல மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியை இழந்துள்ளதாக அறிந்துள்ளேன். இந்த முறையைப் பார்த்தால், பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்கும் அனைத்து மாணவர்களும் அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் விண்ணப்பிக்க வேண்டுமோ? என்ற கேள்வி எழுந் துள்ளது என்று முல்லைத்தீவு வித்தியானந்தக் கல்லூரி அதிபர் வி.கே.சிவலிங்கம் தெரிவித்தார். (வ-4,ரி7,102)

## இன்று...

தங்களுடைய தோசங்களுக்கான பரிகாரமாக சனீஸ்வரருக்கு விரதம் இருந்த இந்துக்கள், எள்ளெண்ணெய் சிட்டி ஏற்றி விரதத்தை நிறைவு செய்தனர். இன்று இரண்டாவது சனிக்கிழமை ஆகும். இந்த சனிக்கிழமையும் வழமை போன்று சனி விரதம் இருந்து எள்ளெண்ணெய் விளக்கேற்றி வழிபட முடியும். இந்தச் சனிக்கிழமையை தவறவிட்டால் ஐந்தாவது சனிக்கிழமையே எள்ளெண்ணெய் எரித்து வழிபட முடியும் என்று இந்து குருமார்கள் தெரிவித்தனர்.

நவராத்திரி விரதம் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாக உள்ளதால் இந்து ஆலயங்களில் கும்பம் வைக்கப்படும். இவ்வாறு கும்பம் வைத்தால் எள்ளெண்ணெய் எரித்து வழிபட முடியாது என்ற காரணத்தினாலேயே இன்று பக்தர்களை அந்த வழிபாட்டை செய்யுமாறு அவர்கள் கேட்டுள்ளனர். தவறும் பட்சத்தில் 5ஆவது சனிக்கிழமையான எதிர்வரும் 15ஆம் திகதியே இந்த வழிபாட்டைச் செய்ய முடியும் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

யாழ். குடாநாட்டிலுள்ள பிரசித்தி பெற்ற ஆலயங்களான வடமராட்சி வல்லிபுர ஆழ்வார் ஆலயம், பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம், யாழ்ப்பாணம் வரதராஜப் பெருமாள் ஆலயம், வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் ஆலயம், சுன்னாகம் கதிரமலைச் சிவன் ஆலயம், சித்தன்கேணிச் சிவன் ஆலயம், நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயம், உட்படப் பல்வேறு ஆலயங்களிலும் சிறப்பு வழிபாடுகளுடன், மண் சிட்டியில் எள்ளெண்ணைத் தீபமேற்றி வழிபாடும் இடம்பெற உள்ளது.

இதில் நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் இன்று காலை சனீஸ்வர ஹோமம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது. குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இன்று மண்சிட்டி மற்றும் எள்ளுப் பொட்டலம் ஆகியவற்றின் வியாபாரம் களை கட்ட உள்ளன. (வ-21)

## கிளிநொச்சி...

திகதி கிளிநொச்சி சந்தைக் கட்டடத்தில் ஏற்பட்ட தீ விபத்தினால் 220 மில்லியன் ரூபா வரையில் நட்டம் ஏற்பட்டது. 125 வர்த்தக நிலையங்கள் பாதிப்புக்கு உள்ளாகியிருந்தன.

இந்தத் தீ விபத்தில் பாதிக்கப்பட்ட வர்த்தகர்களுக்கு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும். மீளவும் சந்தைக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவிடமும், சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோரை நேற்று ஒன்றாகச் சந்தித்து இராஜாங்க அமைச்சர் கலந்துரையாடினார். நூறு மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. சிறப்பு அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக நிதி வழங்கப்படும் என்று குறிப்பிடப்பட்டதாக, இராஜாங்க அமைச்சர் விஜயகலா குறிப்பிட்டார்.

இதேவேளை கரைச்சிப் பிரதேச சபையினால், கிளிநொச்சி பொதுச் சந்தை தீ விபத்து மதிப்பீட்டு அறிக்கை வடக்கு முதலமைச்சரிடம் முன்வைக்கப்பட்டது. இதற்கு அமைவாக தற்காலிக கடை அமைப்பதற்கு 9 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது. (வ-5-ரி3-33-35)

## ஐ.நா...

மன்றத்தின் சுயாதீனம் ஆகிய நல்லாட்சி எண்ணக் கருக்களை நடைமுறைப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இன்று ஒரு மிகச் சிறந்த கோணத்தில் பன்னாட்டுச் சமூகம் இலங்கையைப் பார்க்கின்றது. தற்போதைய அரசின் நோக்கம் இலங்கையில் வாழும் மக்களுக்கு சிறந்த எதிர்காலத்தையும் உலகம் போற்றும் வகையிலான நல்லாட்சி எண்ணக்கருக்களின் அடிப்படையில் அமைந்த ஒரு அரச நிர்வாகத்தையும் முன்னெடுப்பதேயாகும்.

நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடிகளில் இருந்து நாட்டைக் கட்டியெழுப்பி, எல்லாத் துறைகளையும் அபிவிருத்தி செய்து நட்பு நாடுகளின் ஒத்துழைப்புகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் 71 ஆவது கூட்டத்தொடருடன் இணைந்ததாக நடைபெற்ற கலந்துரையாடல்களின் மூலம் சாதகமான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ மூன், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் இளவரசர் சையிட் அல் ஹுசேன் இலங்கை தொடர்பாக மிகத் தெளிவான நிலைப்பாட்டுடன் கலந்துரையாடினர். அவர்கள் எல்லோரினதும் உதவி இன்று இலங்கைக்கு கிடைத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா, ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் ஆகியோர் விரைவில் விடைபெறவுள்ள நிலையில் அவர்களுடனான இலங்கையின் உறவில் மாற்றம் ஏற்படுமா என்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த ஜனாதிபதி, இந்த எல்லா உறவுகளும் தனிப்பட்ட வகையில் அன்றி கொள்கை அடிப்படையிலேயே கட்டியெழுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கடந்த அரசின் காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையுடனான உறவுகளில் ஏற்பட்டிருந்த விரிசல் நிலமைகளுக்கு கொள்கை சார்ந்த அம்சங்களே காரணமாகும். அரசின் கொள்கைகள் நாட்டு மக்களுக்கும் பன்னாட்டுச் சமூகத்திற்கும் தெளிவாக இருக்குமானால், நாட்டின் அங்கீகாரம் தொடர்பில் பிரச்சினைகள் எழ வாய்ப்புகள் இல்லை என்றார். (வ-5)

## போக்குவரத்துக்கு...

மறுப்புத் தெரிவித்தார். தனிப்பட்ட ரீதியில் ஊர்வலத்தில் கலந்து கொள்பவர்கள் தமது கடைகளை மூடி விட்டுச் செல்லலாம் என்று அவர் குறிப்பிட்டார்.

மேலும் பிரதேச வர்த்தக சம்மேளனங்கள், தமது வர்த்தக நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும் என்று தெரிவித்தன. இதேவேளை, யாழ். நகரப் பகுதி வர்த்தகர்களிடம், கடைகளை முழுமையாக மூடுமாறு நேற்று முன்தினம் ஊர்வலத்தின் ஏற்பாட்டாளர்கள் சிலர் கோரிக்கை விடுத்தனர். நேற்றைய தினம் ஊர்வலத்தின் மற்றொரு தொகுதி ஏற்பாட்டாளர்கள், ஊர்வலம் இடம்பெறும் இரண்டு மணி நேரம் மாத்திரம் வர்த்தக நிலையங்களை மூடுமாறு கோரியுள்ளனர். அவசர சேவைகள் தவிர்ந்த ஏனைய வர்த்தக நிலையங்களை மூடுமாறு ஒலிபெருக்கி ஊடாக ஏற்பாட்டாளர்கள் எனத் தெரிவிக்கப்படுவோரால் அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இதனால் நகரப் பகுதி வர்த்தகர்களிடம் குழப்பம் நீடிக்கிறது.

(வ-5-35-ரி)

## 3ஆவது...

நாளாகவும் தமது உணவு ஒறுப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். சோர்வடைந்த நிலையிலேயே இந்தப் பட்டினிப் போராட்டம் நடத்தப்பட்டது.

வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா நேற்று மாலை 3 மணியளவில், உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபடும் கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 21 தமிழ் அரசியல் கைதிகள் கடந்த புதன் கிழமை 21ஆம் திகதி உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தனர். நேற்று மூன்றாவது நாளாகவும் அவர்கள் முன்னெடுத்த போராட்டத்தை அரசு கண்டுகொள்ளவில்லை.

நேற்று மாலை அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்ற சி.தவராசா, உணவு ஒறுப்பில் ஈடுபடும் 7 அரசியல் கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன் போது அரசியல் கைதிகள், நாம் எமது விடுதலையை வலியுறுத்தவில்லை. எமது வழக்குகளை விரைவுபடுத்துங்கள். அநுராதபுரம் சிறப்பு நீதிமன்றத்தில் உள்ள வழக்குகளை யாழ்ப்பாணம் அல்லது வவுனியா நீதிமன்றத்துக்கு மாற்றுங்கள் என்றே கோருகின்றோம்.

அநுராதபுரம் சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டு இதுவரையில் 6 வழக்குகள் மாத்திரமே விசாரணை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இன்னமும் அந்த வழக்குகளின் விசாரணை முடியவில்லை. அநுராதபுரத்தில் வழக்கு நடைபெறுவதால் வழக்கில் என்ன பேசப்படுகின்றது என்பது எமக்குத் தெரியாது. இதனாலேயே தமிழ் மொழியில் வழக்கு இடம்பெறும் யாழ்ப்பாணம் அல்லது வவுனியாவுக்கு மாற்றுமாறு கோருகின்றோம்.

திருகோணமலை குமாரபுரம் படுகொலையில் குற்றம் சுமத்தப்பட்ட படையினர் திருகோணமலை நீதிமன்றில் தமிழ் மொழியில் வழக்கு நடைபெறுவதால், அநுராதபுரத்துக்கு வழக்கை மாற்றக் கோரினர். அதனை சட்டமா அதிபர் திணைக்களம் செய்து கொடுத்தது. அதைப் போன்று எமது வழக்கையும் நாம் மாற்றக்கோருகின்றோம் என்று அரசியல் கைதிகள் தன்னிடம் தெரிவித்ததாக, சி.தவராசா குறிப்பிட்டார்.

(வ-5-106)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
23.09.2016 | 2034 | சிவப்பு
மீனம்
வெற்றி இலக்கங்கள்
08 39 48 58
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 27,70,740 /-

சீட்டிழுப்பு வாரம்: 48
வர்ணம் : செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 23.09.2016
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 95,378,300/=
K 44 64 75 77

499
2016.09.23
வெற்றி இலக்கங்கள்
06 22 46 58 I
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 14,024,840/=

## வேலைவாய்ப்பு

கிளிநொச்சியில் இயங்கும்
பிரபல தனியார் நிறுவனம் ஒன்றுக்கு
கீழ்க்காணும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

**முகாமையாளர்**

- அரச அல்லது தனியார் நிறுவனத்தில் ஓய்வு பெற்றவர்கள் விரும்பத்தக்கது.

**சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்கள்**

- சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் அவசியம்.
- மோட்டார் சைக்கிள் இருத்தல் வேண்டும்.

**பணம் வசூலிப்பவர்கள்**

- முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேசங்களுக்கு சென்றுவரக்கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
- சாரதி அனுமதிப்பத்திரம் இருத்தல் அவசியம்.
- மோட்டார் சைக்கிள் இருத்தல் வேண்டும்.

27.09.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல்
10.00 – 03.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
கரடிப்போக்கு சந்தி, கிளிநொச்சி.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர் திருமதி
சரஸ்வதி
கனகேஸ்வரன் B.A
(ஓய்வு நிலை ஆசிரியர்,
தெல்லிப்பழை
மகாஜனக் கல்லூரி)

தோற்றம்
11.12.1937

மறைவு
25.08.2016

கடந்த 25.08.2016 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (24.09.2016) சனிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தொடர்ந்து 25.09.2016 ஞாயிற்றுக்கிழமையன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

7ஆம் கட்டையடி,
கே.கே.எஸ். வீதி, மல்லாகம்.
குடும்பத்தினர்.

**விற்பனைக்குண்டு**

BCQ இலக்க புதிய Lancer 90 ரக மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.
T.P : 077 3946826

**காணி விற்பனைக்கு**

யாழ் மானிப்பாய் வீதி ஐந்துசந்தி பள்ளிக்கு பின் உள்ள காணி (3 பரப்பு) கொல் ஒழுங்கை (Black Smith Lane) நன்னீர் கிணறு உள்ளது.
விலை பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு : 077 3490642

**காணி விற்பனைக்கு**

கல்வியங்காடு டச்சு வீதியில் அமைந்துள்ள 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 077 9361432
077 4682361

**வாடகைக்கு**



KDH
223
வாகனம்
வாடகைக்கு
உண்டு.
தொடர்பு - 077 7165230

**IPS கல்வி நிறுவனம்**

சான்றிதழ் வழங்கும் நிகழ்வு
பிரிவு - III
இடம் - IPS கல்வி நிறுவனம் திருநெல்வேலி
திகதி - 25.09.2016 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - மாலை 3.30 pm

*தலைவர் திரு. S.சிவபாலன்
(இயக்குநர் ஓய்வு பெற்ற வங்கியியலாளர்)
*பிரதம விருந்தினர் கௌரவ K.சாந்தகுமார்
(மேலதிக பணிப்பாளர் தொழில்நுட்பக்கல்லூரி, கொக்குவில்)
*சிறப்பு விருந்தினர்கள்
கௌரவ திருமதி லோகேஸ்வரி சூரியகுமாரன்
(விரிவுரையாளர் உயர் தொழில்நுட்பவியல் நிறுவனம், குருநகர்)
கௌரவ R. அருணகிரிவாசன்
(உபஅதிபர் கோண்டாவில் இந்துக்கல்லூரி, கோண்டாவில்)
அனைத்து மாணவர்கள் ,பெற்றோர்கள், நலன்விரும்பிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

மாணவர்கள்,
IPS கல்வி நிறுவனம் திருநெல்வேலி.
(விஞ்ஞானபீடத்திற்கு அருகில்)

**வடக்கின் பாரம்பரிய உணவு தயாரிக்கும் போட்டி மற்றும் விற்பனை**

**Northern Authentic Food Festival and Competition**

சர்வதேச சுற்றுலா தினத்தினை முன்னிட்டு, சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ மத விவகார அமைச்சின் அனுசரணையுடன், வட மாகாண சபையின் முதலமைச்சரின் அமைச்சினால் **வடக்கின் பாரம்பரிய உணவு தயாரிக்கும் போட்டி மற்றும் விற்பனை** என்பவற்றினை நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. எமது மாகாணத்தின் பாரம்பரிய உணவு வகைகளை பிரபல்யப்படுத்துவதுடன், அவற்றினை உற்பத்தி செய்வோருக்கு சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதும் இந்நிகழ்வின் முக்கிய நோக்கங்களாகும். இப்போட்டியின் முக்கிய **நிபந்தனைகள்:**


- இப்பாரம்பரிய உணவுகளின் விற்பனை மாலை 4.00 மணிமுதல் இரவு 8.30 மணிவரை நடைபெறும்.
- வட மாகாணத்தினை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட தனிநபர் அல்லது குழுக்கள் (ஆகக்கூடியதாக 3 நபர்கள் இணைந்து) இப்போட்டியில் பங்குபற்றலாம்.
- போட்டி நடைபெறும் பகுதியில், அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் உணவுகள் தயாரிக்கப்பட்டு, காட்சிப்படுத்தப்பட்டு, விற்பனை செய்யப்பட வேண்டும். அடுப்பு உட்பட சகல பொருட்களையும் போட்டியாளர்களே கொண்டுவருதல் வேண்டும்.
- தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் வட மாகாணத்தின் பாரம்பரிய உணவுகளாக இருந்தால் மட்டுமே போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படும்
- உணவு தயாரித்தல், அதனை காட்சிப்படுத்துதல், பரிமாறுதல் மற்றும் விற்பனைக்கூடத்தின் அலங்கரிப்பு என்பன வெற்றியாளரைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக கருதப்படும்
- அத்துடன் சுத்தமானதும் சுகாதாரமானதுமான செயற்பாடுகளும் கருத்திலெடுக்கப்படும்.
- நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது

1ம் பரிசாக ரூபா 25,000/-, 2ம் பரிசாக ரூபா 15,000/-, 3ம் பரிசாக ரூபா 10,000/- வெற்றியாளர்களுக்கு வழங்கப்படும்.

**இப்போட்டி தொடர்பான அறிமுக நிகழ்வு: 29-09-2016 வியாழக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு மாநாட்டு மண்டபம், முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை, A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.**

ஆர்வமுள்ளவர்கள் இந்நிகழ்வில் கலந்து கொண்டு விரிவான விபரங்களையும், போட்டி நடைபெறும் திகதி மற்றும் இடம் போன்ற தகவல்களையும் பெற்றுக் கொள்ள முடியும். மேலதிக தகவல்களுக்கு 021-2057114 எனும் தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

திருமதி.வி.கேதீஸ்வரன்,
செயலாளர், முதலமைச்சரின் அமைச்சு, வட மாகாண சபை



# பன்னாட்டுத் திரைப்பட விழா யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 24

யாழ்ப்பாண பன்னாட்டுத் திரைப்பட விழா நேற்று மாலை 4.30 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமானது.

படைப்பும், பிரமிப்பும், கண்களையும் செவிகளையும் தழுவிக் கொள்ள உணர்வுகளின் ஊற்றாய் அமைந்தது சினிமாக் கலையின் பன்னாட்டுத் தரம்வாய்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

நேற்று ஆரம்பமான யாழ்ப்பாண பன்னாட்டுத் திரைப்பட விழா தொடர்ந்து நான்கு நாள் நடைபெறவுள்ளது. யாழ்ப்பாண கைலாசபதி கலையரங்கிலும், காகில்ஸ் மஜிஸ்ரிக் திரையரங்கிலும், யாழ்ப்பாணப் பொதுநூலக கேட்போர்கூடத்திலும் காட்சிப்படுத்தல்கள் இடம்பெறுகின்றன.

நேற்று ஆரம்பமான திரைப்பட விழாவில் இலங்கைக்கான கனடா தூதுவர், யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர், பிரஞ்சு நாட்டு நட்டுபுறவு கழகத்தினர், யாழ்ப்பாணப் பல்லைகலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இசைவாணர் கண்ணனின் இசைநிகழ்வும், போர்காரணமாக காணாமற்போனவர்களின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் லெபனான் நாட்டுத் திரைப்படமான வோஜட் (ஷாலிஷ்-) திரையிடப்பட்டது. (வ-ரி7)

# 47 மருந்துகளின் விலை குறைப்பு

கொழும்பு, செப்.24

முதற் கட்டமாக 47 வகை அத்தியாவசிய மருந்துகளின் விலைகள் குறைக்கப் பட்டதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதயம் மற்றும் நீரிழிவு நோய்களுக்குரிய மருந்துகள் உள்ளிட்ட மருந்துப் பொருள்களின் விலையே குறைக்கப் பட்டதாக அவர் குறிப்பிட்டார்.

தேசிய ஔடத கொள்கைக்கு அமைவாக இந்த விலைக் குறைப்பு அமைவதாகவும் சுகாதார அமைச்சர் தெரிவித்தார். (வ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியால் ஒன்றுபட்டு தமிழராக வாழும் காலம் வெகு தொலைவிலில்லை

## மன்னாரில் வடக்கு முதலமைச்சர் தெரிவிப்பு

மன்னார், செப். 24
எம் மிடையே காணப்படக்கூடிய மத, இன, வர்க்க வேறுபாடுகளைக் கடந்து நாம் அனைவரும் தமிழ் மொழியால் ஒன்றுபட்டு தமிழர்கள் எனக் கூறிக்கொள்வதில் பெருமையடையும் காலம் வெகு தொலைவிலில்லை.
இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.
மன்னார் நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்ற வடக்கு மாகாண பண்பாட்டு பெருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழர் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு' என்றான் பாரதிதாசன். தமக்கே உரிய கலை, பண்பாட்டு, இலக்கிய விழுமியங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும் மரபுவழி பண்பாட்டு இலக்கியங்களின் இலக்கண புருசர்களாக வாழ முனைவதிலும் ஆர்வம் கொண்டவர்கள் தமிழர்கள். அதனால் தானோ என்னவோ எமது இனம் இத்தனை இன்னல்களுக்கு மத்தியிலும் தமது பாரம்பரிய பண்பாட்டுச் சுவடுகளை விட்டு விடாது அதன் வழி நடக்க முனைந்துள்ளது.
ஏனைய சமூகங்கள் எம்மை அடக்க முற்படும் போது வீறு கொண்டு எழுகின்ற தமிழினமாக மாறவும் அவர்கள் பின்னின்றதில்லை. தோல்விகள் தரையில் அல்ல. எமது மனத்தில்த்தான் தோன்றுகின்றன. மனதைப் பண்பட்டதாக மாற்ற எமது பண்பாடுகள், பாரம்பரியம், வரலாறு பற்றிய அறிவு மிக முக்கியம். அதே நேரத்தில் ஒற்றுமையின் அத்தியாவசியத்தையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். 'ஒன்று பட்டால் உண்டு வாழ்வே ஒற்றுமை இன்றேல் அனைவருக்குந் தாழ்வே' என்கின்றது.
நாம் மதத்தினால் வேறுபட்டாலும் மொழியினால் ஒன்றுபட்டவர்களாகவே இருக்கின்றோம். எமது பண்டைய மக்களும் இயற்கையோடு வாழ்ந்தவர்கள். அவர்களின் அறிவும் உணர்வுகளும் படிப்பால் அல்லாமல் அவதானங்களால் உருவாகியிருந்தன. பல கால அனுபவங்கள் அவதானிப்புக்கள் எம் மக்களை சில விடயங்களில் விற்பன்னர்கள் ஆக்கி விடுகின்றன. அவர்களின் அனுபவங்கள் தற்போது எம்முடன்பகிர்ந்து கொள்ளப்படாமலே, ஆனால் அவர்களுடன் மறையும் ஒரு சூழல் உதயாமாகி வருகின்றது.
பல புலவர்கள் பண்டிதர்கள் மற்றும் கல்விமான்கள் வாழ்ந்து கல்விப் பணியும், இலக்கியபணியும், கவிதைப் பணியும் ஆற்றியுள்ள இந்த மண்ணில் இன்றும் பல கலைஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் படைப்பாளிகள்



இலை மறை காயாக சமூகத்தில் அடையாளப்படுத்தப் படாதவர்களாக சமூகத்தை விட்டு ஒதுங்கி வாழ்வதை நாம் அவதானித்திருக்கின்றோம்.
அவ்வாறான அறிஞர்களை இனம் காண்பதற்கும் அவர்களை ஏனையவர்களுக்கு வெளிச்சம் போட்டுக்காட்டுவதற்கும் அவர்களின் படைப்புக்களை வெளிக்கொணர்வதற்கும் இவ்வாறான தேடல்களும் ஊக்குவிப்புக்களும் தேவைப்படுகின்றன. இன்றைய எமது அரசியல் முன்னெடுப்புக்களில் தமிழ் மக்கள் ஐக்கிய இலங்கையினுள் சுதந்திரமாகவும் சுயகௌரவத்துடனும் தமது தனிப்பட்ட அடையாளங்கள் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைப் பேணி அவற்றின்பால் ஒழுகுவதற்கு உரித்துடையவர்கள் என்ற கருத்தை வலியுறுத்திக் கொண்டிருக்கின்றோம்.
ஏனைய இனங்களின் அடக்கு முறைகளோ அதிகாரப் பிரயோகங்களோ எம்மைப் பாதிக்கக் கூடாது என்று கேட்டுக் கொண்டிருக்கின்றோம்.
சுதந்திரமாகவும் சகோதரத்துவத்துடனும் இந்த மண்ணில் சகல இனங்களும் வாழ்வதற்கான ஒரு கூட்டாட்சி முறையிலான ஆட்சி முறையை தோற்றுவிக்கக் கேட்டுக் கொண்டிருக்கின்றோம். புதியஅரசமைப்புத் திருத்தங்களுக்கான முன்னெடுப்புக்கள் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தக் காலப் பொழுதில் எமது வாழ்வியல் உறுதிப்பாடுகளையும் அடையாளங்களையும் மற்றும் இன்னோரன்ன பண்பாட்டுவிழுமியங்களையும் பாதுகாத்து அவற்றை எமது அடுத்த சந்ததிக்கு எடுத்துச் செல்லக் கூடிய வழிவகைகளையும் நாம் ஆராய வேண்டும் - என்றார். (வ-21,109,56)



போரினால் பாதிக்கப்பட்ட குடும்பம் ஒன்றுக்கு வாழ்வாதார உதவியும் வறுமையில் கல்வியை தொடரும் இரண்டு மாணவர்களுக்கு துவிசக்கரவண்டிகளும் வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக நேற்று அன்பளிப்பாக வழங்கபட்டன. (வ)

## பலஸ்தீன மாணவர்களுக்கு இலங்கையில் புலமைப்பரிசில்

கொழும்பு, செப் 24
பலஸ்தீன மாணவர்களுக்கு மருத்துவம் மற்றும் பொறியியல் தவிர்ந்த பல்வேறு துறைகளில் 2017/2016 கல்வி ஆண்டுக்கான புலமைப் பரிசில்கள் இலங்கையில் வழங்கப்படவுள்ளதாக பலஸ்தீன கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சு நேற்று முன் தினம் வியாழக்கிழமை அறிவித்ததாக அந்த நாட்டுச் செய்திகள் தெரிவித்தன.
அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் ஊடாக ஆர்வமுள்ள மாணவர்கள் விண்ணபிப்பதற்கும், இந்தப் புலமைப்பரிசில் திட்டத்துக்கான நிபந்தனைகள் மற்றும் மேலதிக விவரங்களைத் தெரிந்து கொள்வதற்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பலஸ்தீனக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (து)

### பகிடிவதையால்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாணவர் ஒன் றி யம், ஆசிரியர் சங்கம் என்பவற் றுடன் பல்கலைக்கழ நிர்வாகம் என்பன சிறப்புக் கவனம் செலுத்துமாறும் கோரிக்கை விடுப்பதாக அவர் தெரிவித்தார்.
இந்த விடயத்தை இங்கே எடுத்துக் கொள்வது, பல்கலைக்கழகத்தை நாம் தரம் தாழ்த்துவதாக அமையாதா என்று உறுப்பினர் அஸ்மின் கேள்வி எழுப்பினார். இது தீர்மானம் அல்ல, சிறப்புக் கரிசனையே என்று மீண்டும் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் பதிலளித்தார்.
இதன்போது குறுக்கிட்ட உறுப்பினர் க.சர்வேஸ்வரன், குறித்த மாணவன் பல்கலைக்கழகம் செல்லாமல் விட்டதற்குப் பகிடி வதைதான் காரணமா என்று முதலில் ஆராயவேண்டும். அதில் உடல் ரீதியான வதை எனில் பொலிஸாரை நாடவேண்டும். பல்கலைக்கழகத்திலேயே பல பொறிமுறைகள் உள்ளன. அதற்குச் செலவாகாது. அதனால் பல்கலைக்கழகமே இந்த விடயத்தை ஆராயலாம்–என்றார்.
இது பல்கலைக்கழகத்துக்கு எதிரான தீர்மானம் அல்ல. இதில் உள்ள பொது நன்மை கருதிப் பல்கலைக் கழகத்திடம் கோரல் மட் டுமே. இது தொடர்பான தீர்மானத்தைப் பல்கலைக்கழக நிர்வாகமே மேற்கொள்ளும் - என்றார் அவைத் தலைவர். (வ-த-5-101)

### தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூத்த நிலைப் பிரிவு மாணவர்கள் முதலாமிடத்தையும் இளைய நிலைப் பிரிவு மாணவர்கள் மூன்றாமிடத்தையும் பெற் றனர். இவ்வாறு வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் [illegible] தெரிவித்தார்.
கொழும்பு - பத்தரமுல்லையில் நேற்றும் நேற்றுமுன் தினமும் இந்தப் போட்டிகள் நடைபெற்றதாக அவர் தெரிவித்தார். (வ-4)

## மரண அறிவித்தல்கள்

திருமதி
### புஸ்பராணி இராசதுரை (பேபி)

சிங்கப்பூரைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புஸ்பராணி இராசதுரை கடந்த (22.09.2016) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.
அன்னார் காலஞ்சென்ற கார்த்திக் கேசு-இராசம்மா தம்பதியரின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற செபஸ்ரியன்-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் இராசதுரையின் (ஓய்வு பெற்ற பிரதம லிகிதர் இராணுவ தலைமை காரியாலயம்) அன்பு மனைவியும் மனோகரன் (U.S.A), சந்திரசேகரன் (கனடா), மனோகரி (பாகிஸ்தான்), சுதாகரி (லண் டன்) ஆகியோரின் அன்புத்தாயும் Dr.உமா (U.S.A), நிரஞ்சனா (கனடா), அசோகன் (பாகிஸ்தான்), ரமணன் (லண் டன்) ஆகியோரின் அன்பு மாமியும் சைலஜென், சாறுஜென், நிருஜென், டியோயினி, பெலிசியன்,சாருஷன்,தாருஷன், மையூரி ஆகியோ ரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின்நல்லடக்கம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.82,
கீரிமலை றோட் ,
சண்டிலிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்.
076 6157835
077 9980631

திருமதி
### நீற்றா ஜெயமணி மரியநாயகம்

(இளைப்பாறிய ஆசிரியை)



புகையிரத நிலைய வீதி, உசன் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நீற்றா ஜெயமணி மரியநாயகம் 22.09.2016 வியாழக்கிழமை காலமனார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான திரு திருமதி K.K. செபஸ்தியாம்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நீக்கிலாப்பிள்ளை மரியநாயகத்தின் அன்புமனைவியும் அன்ரன் ஜெயக்குமார், மேசிராஜகுமாரி, ஜெசி வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத்தாயும் சாந்தினி, மாற்கு கபிறாட், நித்தியானந்தராஜா ஆகியோரின் அன்புமாமியும் மத்தியு நரேந்திரா, மெரில்டா சத்தியபாரதி, மாற்கு பெஞ்சமின், நேத்தன் ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.
அன்னாரின் நல்லடக்க ஆராதனை 26.09.2016 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு நீக்கிலார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு நீக்கிலார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புகையிரத நிலைய வீதி,
உசன், மிருசுவில்.

தகவல் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்கன் கால்பந்தாட்ட பயிற்சிமுகாம் இன்று

யாழ்ப்பாணம், செப். 24
அமெரிக்கன் கால்பந்தாட்ட பயிற்சி முகாமொன்று வட்டுக்கோட்டை யாழ்ப் பாணக் கல்லூரி மைதா னத்தில் இன்று நடைபெற வுள்ளது. காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை இந்தப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது. மேற்படி பயிற்சி முகாமைத் தொடர்ந்து இரவு 7 மணிக்கு ரில்கோ விருந்தி னர் விடுதியில் ஊடகவிய லாளர் சந்திப்பொன்றும் இடம்பெறவுள்ளது. (ம-23)

## லெய்செஸ்டர் சிற்றியை தோற்கடித்தது செல்சி

இங்கிலாந்து கால்பந்தாட் டத் தொடரில் நேற்றுமுன் தினம் இடம்பெற்ற ஆட்ட மொன்றில் லெய்செஸ்டர் சிற்றியை திரிலாகத் தோற் கடித்தது செல்சி அணி.
ஆட்டத்தின் 17ஆவது, 34 ஆவது நிமிடங்களில் லெய்செஸ்டர் சிற்றியின் ஒகஸாகி கோல்களைப் பதிவுசெய்து 2:0 என்று முன்னிலையை வழங்கி னார். முதல் பாதியின் இறுதி நிமிடத்தில் காகில், செல்சியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 2:1 என்று லெய்செஸ்டரின் ஆதிக் கத்துடன் முடிந்தது முதல் பாதி.
இரண்டாம் பாதியின் ஆரம் பத்தில் சீஸர், செல்சியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்து 2:2 என்று சமப்படுத்தினார். வேறெந்த மாற்றங்களும் இல்லாமல் ஆட்டம் நகர்ந்தது. நிர்ண யிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் மாற்றங்கள் ஏற் படவில்லை. மேலதிக நேரத் தின் 2ஆவது, 4ஆவது நிமிடங்களில் செல்சியின் நட்சத்திர வீரர் பப்ரிகாஸ் அடுத்தடுத்து இரு கோல் களைப் பதிவுசெய்ய தோல் வியிலிருந்து மீண்டு வந்து வெற்றிபெற்றது செல்சி. (ம)



# முரளி கிண்ணத் தொடரில் வடக்கு அணிகள் வெளியே

யாழ்ப்பாணம், செப். 24
நடப்பு வருடத்துக்கான முரளி கிண்ணத் தொடரில் வடக்கிலிருந்து களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி, யாழ். மாவட்ட இணைந்த அணி, கிளிநொச்சி - முல்லைத் தீவு இணைந்த அணி, வவுனியா -மன்னார் மாவட்ட இணைந்த அணி என்பன தொடரி லிருந்து வெளியேறின.
யாழ். மத்திய கல்லூரி அணி தனது லீக் ஆட் டங்களில் கொழும்பு சென். ஜோசப் கல்லூரி அணியிடமும், கொழும்பு சாகிராக் கல்லூரி யிடமும் தோல்வியடைந்தது. இந்த நிலை யில், அந்த அணி தனது இறுதி லீக் ஆட்டத் தில் மொனராகல இணைந்த அணியை நேற்று ஓர் ஓட்டத்தால் வெற்றிபெற்றது. மூன்று ஆட்டங்களில் இரண்டில் தோல் வியடைந்ததையடுத்து அந்த அணி தொடரி லிருந்து வெளியேறியது.
யாழ். மாவட்ட இணைந்த அணி தனது லீக் ஆட்டங்களில் முதலாவதில் கொழும்பு றோயல் கல்லூரியிடம் தோல்வியடைந்தது. இரண்டாவது ஆட்டத்தில் மலையக இணைந்த அணியை வீழ்த்தியது. இதனால் நேற்று நடைபெற்ற சீனிகம இணைந்த அணிக்கெதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்ற தால் அரையிறுதிக்குத் தகுதிபெறும் வாய்ப் புக்கள் இருந்தன. ஆனால் இந்த ஆட்டத்தில் சீனிகம இணைந்த அணி 59 ஓட்டங்களால் வெற்றிபெற்றதை அடுத்து யாழ். இணைந்த அணி தொடரிலிருந்து வெளியேறியது.
கிளிநொச்சி - முல்லைத்தீவு இணைந்த அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் கொழும்பு நாலந்த கல்லூரியிடம் வீழ்ந்தது. இரண்டாவது லீக் ஆட்டத்தில் சென். அலோசியஸ் கல்லூரியை வீழ்த்தியது. நேற்று நடைபெற்ற மூன்றாவது ஆட்டத்தில் களுத்துறை மகா வித்தியாலயத்திடம் தோல்வியடைந்ததையடுத்து அந்த அணி தொடரிலிருந்து வெளியேற்றப்பட்டது.
வவுனியா - மன்னார் மாவட்ட இணைந்த அணி தனது முதலாவது லீக் ஆட்டத்தில் கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியிடமும், இரண் டாவது ஆட்டத்தில் மட்டக்களப்பு- திருகோண மலை மாவட்டங்களின் இணைந்த அணியி டமும், மூன்றாவது ஆட்டத்தில் மஹிந்த கல்லூரி அணியிடமும் தோல்வியடைந்ததை அடுத்து, அந்த அணி ஓர் ஆட்டத்திலேனும் வெற்றிபெறாம்ல் தொடரிலிருந்து வெளி யேறியது.

**அரையிறுதிகள்**

இன்று நடைபெறவுள்ள முதலாவது அரை யிறுதி ஆட்டத்தில் சீனிகம இணைந்த அணியை எதிர்த்து காலி மஹிந்த கல்லூரி அணி மோதவுள்ளது. இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் கொழும்பு நாலந்தக் கல்லூரி அணியை எதிர்த்து சென். ஜோசப் கல்லூரி அணி மோதவுள்ளது. இந்த ஆட் டங்கள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலய மைதானத்தில் முறையே காலை 9.30 மணிக்கும், பிற்பகல் 1.40 மணிக்கும் நடை பெறவுள்ளன. (ம)

# வென்றது விண்மீன்

யாழ்ப்பாணம், செப். 24
பொலிகண்டி பாரதி வி.கழகம் நடத்தும் கால்பந் தாட்டத் தொடரில் கடந்த புதன்கிழமை நடை பெற்ற ஆட்டமொன்றில் பலாலி விண்மீன் அணி வெற்றிபெற்றது.
பாரதியின் மைதானத்தில் தொடர் நடைபெற்று வருகிறது. கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில், யங்கம்பன்ஸ் அணியை எதிர்த்து விண்மீன் அணி மோதியது. கோல் கணக்கு இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 31ஆவது, 34 ஆவது, 44 ஆவது நிமிடங்களில் ஹற்றிக் கோலைப் பதிவு செய்தார் விண்மீனின் நிசாந்தன். வேறெந்த கோல்களும் பதிவாகாத நிலையில், முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது விண்மீன். (ம-108-422)




# தேசியமட்ட 10 ஆயிரம் மீற்றர்; வெள்ளி வென்றார் நவநீதன்

கரணவாய், செப். 24
இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசிய மட்ட 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் வவு னியா மாவட்ட இளைஞர் கழகத்துக்கு வெள் ளிப்பதக்கம் கிடைத்தது.
இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசிய மெய்வன்மைப் போட்டிகள் பதுளையில் இடம்பெற்று வருகின்றன. ஆண்களுக்கான 10 ஆயிரம் மீற்றர் ஓட்டப்போட்டி நேற்று நடை பெற்றது. வவுனியா மாவட்டத்தின் இளைஞர் கழகத்திலிருந்து கலந்துகொண்ட கே.நவநீதன் 34 நிமிடங்கள் 14 செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றி னார். (ம-422-23-108)




# இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட்; பலம்பெறுகிறது நியூசி.

இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 152-1 என்று பலமான நிலையில் உள்ளது நியூசிலாந்து.
நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா, முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. முரளி விஜய், புஜாரா அரைச்சதம் கடந்தாலும் இந்தியாவின் மத்திய வரிசை, பின்வரிசை பலவீனமா னதாக அமைந்ததால் இந்திய அணி முதல் நாள் முடிவில் 291-9 என்ற நிலையில் இருந்தது. ஜடேயா 16 ஓட்டங்களுடனும், யாதேவ் 8 ஓட்டங்க ளுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். யாதேவுக்கு வாய்ப்பை வழங்காமல் அடித்தாடினார் ஜடேயா. இதனால் இந்தியாவின் ஓட்டங்கள் சிறிது அதிகரித்தது. யாதேவை வீழ்த்தி னார் வாக்நெர். முடிவில் 318 ஓட்டங்க ளில் சுருண்டது இந்திய அணி.
பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக நான்நெர், போல்ட் இருவரும் தலா மூன்று இலக்குகளையும், வாக்நெர்



இரு இலக்குகளையும், கிறைக், சொட்கி இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த் தினர். பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்துக்கு குப்திலை வீழ்த்தி பதட் டத்தை ஏற்படுத்தினார் யாதேவ். ஆனால் லாதம், வில்லியம்சன் இணைப் பாட்டமாக நிலைத்து ஆளுக்கொரு அரைச்சதத்தைக் கடக்க, நாள் முடிவில் நியூசிலாந்து அணி 152-1 என்ற நிலையில் உள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் தங்கம் வென்றது யாழ். இளைஞர் கழகம்

இளைஞர் கழகங்களுக்கு இடையிலான தேசியமட்ட வலைப்பந்தாட்டத் தொடரில் யாழ். மாவட்ட இளைஞர் கழகம் தங்கப் பதக்கத்தைத் தனதாக்கியது.

பதுளை வின்சன் டயஸ் விளையாட்டு மைதானத்தில் நேற்றுக் காலை இந்த இறுதியாட்டம் நடைபெற்றது. யாழ். மாவட்ட இளைஞர் கழக அணியை எதிர்த்து மொனராகலை மாவட்ட இளைஞர் கழக அணி மோதியது. முதல் பாதியின் முடிவில் 26:14 என்ற புள்ளிகளின் அடிப்படையில் ஆதிக்கம் செலுத்தியது யாழ். மாவட்ட இளைஞர் கழக அணி. இரண்டாம் பாதியிலும் தனது ஆதிக்கத்தைத் தக்க வைத்த யாழ். மாவட்ட இளைஞர் கழக அணி முடிவில் 46:32 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது. யாழ். மாவட்ட இளைஞர் கழகம் தேசியமட்டத்தில் தங்கம் வெல்வது இதுவே முதல் தடவை. (ம-23)

## தேசிய தைகொண்டோ போட்டியில் வடக்குக்கு வெள்ளிப் பதக்கங்கள்

யாழ்ப்பாணம், செப். 24

தேசிய ரீதியிலான தைகொண்டோ போட்டியில் வடமாகாணத்துக்கு இரண்டு வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பெண்கள் பிரிவில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த ஆர்.தமிழ்மகள் தன்னை எதிர்த்து மோதிய வீராங்கனையிடத்தில் 26:30 என்ற புள்ளிகளின் அடிப்படையில் தோல்வியடைந்து தங்கப் பதக்கத்தைத் தவறவிட்டார். இதனால் அவருக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. ஆண்கள் பிரிவில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த ஜெ.டி தனஞ்செய வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றினார். (ம-422)



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 24

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது. மட்டக்களப்பு மருதமுனை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மட்டக்களப்பு யுனிவேர்சல் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)



## தேசியத்தில் முத்திரை பதிக்கிறார் மண்ணின் மைந்தன் ஞானரூபன்

யாழ்ப்பாணம், செப். 24

இலங்கை தேசிய கால்பந்தாட்ட வீரர்களுக்கு இடையே நடைபெற்றுவரும் பயிற்சி ஆட்டத்தில் யாழ். மாவட்டத்திலிருந்து சென்ற ஞானரூபன் கலந்து கொண்டு விளையாடிய அணி வெற்றி பெற்றது.

இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணி கம்போடியா மற்றும் தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ளது. இதனால் குறித்த தொடர்களுக்கான பயிற்சி ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றன. இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியும், இலங்கை முன்னணிக் கழகங்களின் வெளிநாட்டு வீரர்கள் ஒன்றிணைந்து ஓர் அணியாகவும் பயிற்சிகளில் ஈடுபடுகின்றனர். கொழும்பு பொலிஸ் பார்க் மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஓர் ஆட்டம் நடைபெற்றது. கோல் கணக்கு இல்லாமல் முடிவடைந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியின் 4 ஆவது நிமிடத்தில் சர்வான் முதல் கோலைப் பதிவு செய்தார்.

அடுத்த சில நிமிடங்களில் வெளிநாட்டு வீரர்களின் அணி சார்பாக ஜிபேலா பதிலடி கொடுத்தார். 1:1 என்ற நிலையில் ஆட்டம் நீண்ட நேரம் நகர்ந்தது. 76 ஆவது நிமிடத்தில் ஞானரூபன் இலங்கை அணியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்தார்.

ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்கள் இருக்கையில் வெளிநாட்டு வீரர்களைக்கொண்ட அணி பதிலடி கொடுத்து ஆட்டத்தைச் சமப்படுத்தியது.

ஒரு கோலைப் பதிவுசெய்ததுடன் எதிரணியின் பல முயற்சிகளைத் தகர்த்த ஞானரூபன் ஆட்ட நாயகனானார். (ம-108)


## காமாட்சியம்பாள், பாரதி அணிகள் வெற்றிபெற்றன

யாழ்ப்பாணம், செப். 24

புத்தூர் கலைமதி விளையாட்டு கழகம் நடத்தும் யாழ். மாவட்ட அணிகளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஆட்டங்களில் நீர்வேலி காமாட்சி அம்பாள், நாயன்மார்கட்டு பாரதி அணிகள் வெற்றிபெற்றன.

அம்பாள் வி.கழக மைதானத்திலேயே தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் அம்பாள் வளகாம்பிறை அணியை எதிர்த்து நீர்வேலி காமாட்சி அம்பாள் அணி மோதியது. முதலாவது செற்றை 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது காமாட்சி அம்பாள் அணி. இரண்டாவது செற்றை வளகாம்பிறை அணி 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது. வெற்றியைத் தீர்மானிக்கும் இறுதி செற்றை 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய காமாட்சி அம்பாள் அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் சிறுப்பிட்டி கலையொளி அணியை நாயன்மார்கட்டு பாரதி அணி 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிகொண்டது. (ம-422)



பாடசலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்ற கரம்பன் சிறியபுஸ்பம் மகளிர் மகா வித்தியாலய அணி, பாடசாலைச் சமூகத்தால் அண்மையில் கௌரவிக்கப்பட்டது. (ம-23)



நடைபெற்றுவரும் முரளிக் கிண்ணத் தொடரை பிரபலப்படுத்துவதற்காக வடக்குக்கு வந்துள்ள இலங்கை அணியின் முன்னாள் தலைவரும் நட்சத்திர அந்தஸ்துப் பெற்ற துடுப்பாட்ட வீரருமான மகேல, யாழ். மத்திய கல்லூரிக்கும் சென்றார். (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மூன்று வாரத்துக்கு மெஸ்ஸி இல்லை

லா லிகா தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அத்லெட்டிகோ மட்ரிட் அணிக்கெதிரான ஆட்டத்தில் மெஸ்ஸி காயமடைந்ததையடுத்து அவருக்கு அடுத்த மூன்று வாரங்களுக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டது.

பார்சிலோனா அணி அடுத்ததாக சம்பியன்ஸ் லீக் தொடரில் பொரிசியாவுக்கு எதிராகவும், லா லிகா தொடரில் ஸ்போர்ட்டிங் ஜியோன், செல்டா விகோ இரண்டுக்கும் எதிராகவும் குறுகிய கால இடைவெளியில் மோதவுள்ளது. இந்த இரு ஆட்டங்களையும் மெஸ்ஸி தவறவிடுவார். தவிர உலகக்கிண்ணத் தகுதிகாண் ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனா அணி பாராகுவேக்கு எதிராக மோதவுள்ள ஆட்டத்தையும் அவர் தவறவிடுவார். (ம)

உடனடி வேலைவாய்ப்பு
Before - 25.09.2016
Trainee Opticians & Audiologist.
School Leavers & Experienced Staffs Can Apply.
தொடர்பு: 077 505 1945

# ரியல் மட்ரிட்டின் தொடர் வெற்றிக்கு வில்லாரியல் போட்டது முட்டுக்கட்டை



லா லிகா தொடரில் ரியல் மட்ரிட்டின் தொடர் வெற்றிகளுக்கு வில்லாரியல் அணி முட்டுக்கட்டை போட்டது.

ஸ்பெயின் நாட்டில் உள்ள கழகங்களுக்கு இடையில் நடைபெறும் லா லிகா தொடர் மிகவும் பிரபலமானது. இந்தத் தொடருக்கு உலகெங்கிலும் கோடிக்கணக்கான ரசிகர்கள் உள்ளனர். கடந்த 2010ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரையிலான சீசனில் பார்சிலோனா அணி தொடர்ச்சியாக 16 வெற்றிகளைக் குவித்தது. தொடர் வெற்றிகளைப் பொறுத்தமட்டில் இதுவே சாதனையாக இருந்தது. ஆனால் 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ரியல் மட்ரிட் தொடர்ச்சியாக 16 வெற்றிகளைக் குவித்து குறித்த சாதனையைத் தானும் பகிர்ந்து கொண்டது. ரியல் மட்ரிட், வில்லாரியல் அணிகள் நேற்றுமுன்தினம் பலப்பரீட்சை நடத்தின. இந்த ஆட்டத்தில் மட்ரிட் வெற்றிபெற்றால் பார்சிலோனாவை பின்தள்ளி சாதனைக்கு ஏக உரிமை கோரலாம் என்ற நிலை இருந்தது. ஆனால் பலம் வாய்ந்த ரியல் மட்ரிட்டை 1:1 என்று சமப்படுத்தியது வில்லாரியல். இதனால் குறித்த சாதனைக்கு ரியல் மட்ரிட்டால் தனித்து உரிமை கொண்டாட இயலாமல் போனது. (ம)

# டோனியை பதவி நீக்க பலமுறை சிந்தித்தோம்

### சந்தீப் பட்டேல் தகவல்

டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து டோனி திடீரென ஓய்வு அறிவித்ததால் அவரது ஒருநாள் கிரிக்கட் வாழ்வு பற்றி விவாதித்து அவரை தலைமைத்துவத்திலிருந்து நீக்க பலமுறை ஆலோசனை நடத்தினோம். இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தேர்வுக்குழுத் தலைவரான சந்தீப் பட்டேல்.



இந்திய அணியின் தேர்வுக்குழுத் தலைவராக இருந்த சந்தீப் பட்டேலின் பதவிக்காலம் நேற்றுமுன்தினத்துடன் முடிவுக்கு வந்தது. இதனையடுத்து நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்தே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது டோனி திடீரென டெஸ்ட் ஆட்டங்களிலிருந்து ஓய்வுபெற முடிவெடுத்தார். இது எமக்கு மிகப்பெரும் அதிர்ச்சியாக இருந்தது. கோக்லியின் தலைமைத்துவம் தொடர்பாகப் பெரிதளவில் தெரியாத அக்காலத்தில் இந்திய அணியின் எதிர்காலத்தை எண்ணி அச்சமடைந்தோம். எனவே டெஸ்ட் ஆட்டத்தில் செய்ததைப் போன்று ஒருநாள் ஆட்டங்களிலும் டோனி திடீர் ஓய்வை அறிவித்தால் அது இந்திய அணிக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும். இதனால் அவரை தலைமைத்துவத்தில் இருந்து நீக்கி கோக்லியை பயிற்றுவிக்க முடிவெடுத்தோம்.

ஆனால் 2015ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தை கருத்தில் கொண்டு அவர் தொடர்ந்தும் தலைவராகச் செயற்படுவதே சிறந்தது என்று சிந்தித்து அதன்படி செயற்பட்டோம். உலகக்கிண்ணத் தொடரின் பின்னர் டோனி, தனக்கு இன்னும் நீண்டகால ஒருநாள், ரி-20 வாழ்க்கை எஞ்சியிருக்கிறது எனத் தெரிவித்ததால் அவர் இன்று வரை தலைவராகத் தொடர்கிறார். அவர் ஓர் அதியற்புதமான தலைவர். அவரது திறன் குறைந்துள்ளது என்று ஒருபோதும் நாங்கள் சிந்திக்கவில்லை. அவரது தலைமைத்துவத்தில் நாங்கள் சந்தேகம் கொண்டதில்லை. எங்களுக்கு இருந்த பயம் டோனி திடீரென்று ஓய்வை அறிவித்துவிடுவாரோ என்பது மட்டுமே என சந்தீப் பட்டேல் மேலும் தெரிவித்தார். (ம)

உயர் தரத்தின் பின்னர் பிரித்தானிய பட்டத்திற்கான உங்கள் முதல் கட்டம்
PEARSON edexcel BTEC
HND
HND பாடநெறியின் இறுதியில் பிரித்தானிய பட்டப்படிப்பின் இறுதி ஆண்டில் நுழையலாம்
Information Technology
Business Management
Travel & Tourism Management
Hospitality Management
Civil Engineering
Mechanical Engineering
Electrical & Electronic Engineering
அன்பார்ந்த பெற்றோர்களே / பிள்ளைகளே
HND என பொய்யான விளக்கமளிக்கும் Higher Diploma விற்கு ஏமாறாதீர்கள்
HND பாடநெறி தொடர்பான சரியான தகவலை அறிய Pearson (Gold Partner) ESOFT METRO CAMPUS அருகிலுள்ள கிளைக்கு செப்டம்பர் 25 திகதி வாருங்கள்
OPEN DAY செப்டம்பர் 25
விழிப்புணர்வு அமர்விற்கு உங்கள் இருக்கையை முன் பதிவுசெய்ய
HND <Space> Branch <Space> Name
077 - 309 26 26 இலக்கத்திற்கு SMS செய்யுங்கள்
ESOFT METRO CAMPUS
துரித அழைப்பு 077 30 99 308
University Partners LONDON METROPOLITAN UNIVERSITY Kingston University London
HND பாடநெறிகள் நடைபெறும் கிளைகள்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 011-7555520 | நீர்கொழும்பு | 031-2227990 | கம்பஹா | 033-7388051 | நுகேகொட | 011-7555571 | கேகாலை | 035-2222045 | பண்டாரவளை | 057-2224042 |
| கண்டி | 081-2204400 | மாத்தறை | 041-2233550 | யாழ்ப்பாணம் | 021-2224142 | வத்தளை | 011-7555530 | கிரிபத்கொட | 011-7555535 | திருகோணமலை | 026-7267200 |
| குருநாகல் | 037-2223945 | காலி | 091-7501125 | மட்டக்களப்பு | 065-7200070 | கல்முனை | 067-3673555 | அநுராதபுரம் | 025-5670513 | களுத்துறை | 034-7388050 |

No.137, K.K.S Road, Jaffna | Tel:021 222 41 42

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.09.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.